# மீள்பார்வை

මීල්පාර්වෙ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/75/NEWS/2017 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඩ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 377 • 15 செப்டம்பர் 2017 வெள்ளிக்கிழமை • துல் ஹஜ் 1438 • விலை 40.00




## மியன்மார் இனப்படுகொலை

09 தென்கிழக்காசியாவில் இன்னொரு செரப்ரெனிகா



## எல்லா சமூகங்களையும் திருப்திப்படுத்தக் கூடிய அரசியல் முறையொன்று தேவையாக உள்ளது

சிராஜ் மஷ்ஹூர் - பிரதித் தவிசாளர், NFGG


RI MOBILE
Wholesale Dealers in Mobile Phone Accessories
077-3050949
077-4843323
Tel: 011-2439470
151/11, Mumbai Plaza, 2nd Cross Street, Colombo - 11
Branch: 159/21, Green Arcade, Main Street, Colombo - 11
தேவையான பொருட்களை இருக்குமிடத்தில் இருந்தே மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் 0777 777 761
0777 674 941


# இலங்கையிலுள்ள ரோஹிங்யா அகதிகளை வெளியேற்றுக

மியன்மாரிலிருந்து இலங்கை வந்துள்ள 16 ரோஹிங்கியர்களையும் பராமரிப்பதனை விட இலங்கையில் பல்வேறு விதத்திலும் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு அரசாங்கம் முன்னுரிமை அளிக்க வேண்டும் எனவும், ரோஹிங்யர்களை இலங்கையில் இருந்து வெளியேற்ற வேண்டும் பொதுபலசவிய ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

பொதுபலசவிய அமைப்பின் தலைவர், புதுகல ஜினவங்ஸ ஹிமி ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், இன்று உலகமெங்கும் இஸ்லாத்துக்கு எதிரான சமூக, அரசியல், பொருளாதார, மத எதிர்ப்புக்கள் கிளம்பியிருக்கின்றன. இதன் விளைவாகவே மியன்மார் அரசாங்கம் தனது நாட்டைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இஸ்லாமிய ஜிஹாத் அமைப்புக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டதில், மூன்று இலட்சத்துக்கும் அதிகமான ரோஹிங்யர்கள் பங்களாதேஷுக்கும் இந்தியாவுக்கும் தப்பி ஓடியுள்ளனர்.

இஸ்லாமியத் தீவிரவாதத்துக்கு தூபமிடும் வளைகுடா நாடுகளே இவர்களை பொறுப்பேற்றிருக்க வேண்டும். மியன்மாருக்கு அண்மையிலுள்ள முஸ்லிம் நாடுகளான சிங்கப்பூர், மலேஷியா, இந்தோனேஷிய நாடுகள் இவர்களுக்கு அடைக்கலம் கொடுத்திருக்க வேண்டும். (பக்.02)



## மஹிந்தவின் நிதிமோசடிக்கு காணிக்கை திரட்டும் சங்க சபா



சில் அனுஷ்டிப்பதற்கான துணிகளை விநியோகித்தது தொடர்பில் நிதி மோசடி செய்த குற்றத்துக்கு ஆளாகி தற்போது தண்டனை நிறைவேற்றப்பட்டிருக்கின்ற, முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பல்பிட ஆகியோரை மீட்டெடுப்பதற்கான முயற்சிகள் ஜாதிக சங்க சபாவினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (பக்.14)

## உயர் பயங்கரவாத நிதி அபாய நாடுகள்: இலங்கை 25 ஆவது இடத்தில்



2017 ஆம் ஆண்டுக்கான சூரிபாஸெல் உயர் பயங்கரவாதத்திற்கு நிதி அளித்தல் மற்றும் பணமோசடி அபாயங்கள் பட்டியலில் (Basel Anti Money Laundering/ counter terrorism financing Index) இலங்கை அபாய நாடாக 25 ஆவது இடத்தில் பட்டியிலிடப்பட்டுள்ளது.

உயர் பயங்கரவாத நிதி அபாய (High Terror Financing Risk) நாடுகளில் அபாயம் கூடிய முதல் 10 இடங்களிலும் ஈரான், ஆப்கானிஸ்தான், கினே பிசோ, தாஜிகிஸ்தான், லாஓஸ், மொசாம்பிக், மாலி, உகண்டா, கம்போடியா, தன்ஸானியா ஆகிய நாடுகள் (பக்.02)

## அநுரவினால் தனிநபர் பிரேரணையாக கணக்காய்வுச் சட்டம்



இதுவரை முன்வைக்கப்படாமல் அரசாங்கத்தினால் இழுத்தடிக்கப்படும் கணக்காய்வுச் சட்டத்தை தனிநபர் பிரேரணையாக சபாநாயகரிடம் சமர்ப்பிப்பதற்கு ஜே.வி.பி. தீர்மானித்துள்ளதாக அதன் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் வாக்குறுதிகளில் கணக்காய்வுச் சட்டம் முக்கியமானதொன்றாக இருந்தாலும் இரண்டு வருடங்களாகியும் அதனை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கவில்லை. இது சட்டமாக்கப்படாததனால், தற்போது நியமிக்கப்பட்டுள்ள கணக்காய்வு ஆணைக்குழுவும் இயங்கா நிலையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மோசடி, விரயங்களினால் நாட்டுக்கு ஏற்படுகின்ற நஷ்டத்தை ஈடுசெய்து கொள்ளும் இவ்வாறானதொரு சட்டத்தை 2015 பெப்ரவரி 19 இல் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பித்து, 2015 மார்ச் 19 இல் அதனை சட்டமாக நிறைவேற்றுவதாக அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதுவரை இது தாமதிக்கப்பட்டு வருவதனால் மோசடியில் ஈடுபட்ட பலரும் தப்பிப் பிழைத்து வருகின்றனர்.

## புதிய வரிச் சட்டம் 2018 ஏப்ரல் முதல் அமுலாகும்



அண்மையில் பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்பட்ட புதிய வரிச்சட்டம் 2018 ஏப்ரல் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் என நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

ஊழியர்களின் உழைக்கும் போதே சேமிக்கும் வரிக்கான (PAYE) உச்ச அளவு ரூபா.750,000 இலிருந்து 1.2 மில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் கூடிய சம்பளம் பெறுபவர்களே இனி இந்த வரியைச் செலுத்த வேண்டி வருகிறது. கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள கம்பனிகள் மூலதன வருமான வரியைச் செலுத்த வேண்டியதில்லை எனவும், பங்குகளை விற்பதால் வருகின்ற வருமானங்களுக்கும் மூலதன வருமான வரி (பக்.14)

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை விரைவில் கொண்டுவர வேண்டும்



இலங்கை ஏற்றுக்கொண்டுள்ள 27 சர்வதேச சாசனங்களின் நடைமுறைகள் தொடர்பில் பிரசல்ஸில் இருந்து வருகை தந்து தகவல் திரட்டிய ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர்நிலை அதிகாரிகள், பிரதமர் ரணில் விக்கரமசிங்கவுடன் நடத்திய சந்திப்பின் போது இவை தொடர்பில் இலங்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பாக ஆராய்ந்ததாக ஐரோப்பிய ஒன்றியம் கூறியுள்ளது. மனித உரிமைகள் விடயத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள ஐரோப்பிய ஒன்றியம், இன்னும் பல முக்கிய விடயங்களில் ஆவன செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளது. (பக்.02)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் பெண்களின் மானம் மட்டுமா பாதுகாக்கப்பட வேண்டும்?

- ஸப்வான் பஷீர்

இன்று ஒரு சிங்கள நண்பன் என்னிடம் வந்து...

'உங்களது பெண்களின் புகைப்படங்களை பேஸ்புக்கில் போடுவது தடைசெய்யப்பட்டுள்ளதா? என்று கேட்டான்.

அப்படி தடையேதுமில்லை என்று சொல்லிவிட்டு, ஏன் திடீர் என்று இந்தக் கேள்வியைக் கேட்டீர்கள் என்று நான் கேட்டேன்.

அதற்கு அவர் அளித்த பதில்...

அண்மையில் அவர் படித்த பல்கலைக் கழகத்தில் பட்டமளிப்பு விழா நடந்திருக்கின்றது. அவரது சக முஸ்லிம் நண்பர் ஒருவர் அந்தப் பட்டமளிப்பு விழாவின் புகைப்படங்களை பேஸ்புக்கில் பதிவேற்றி இருக்கிறார்.

அப்போது அந்த முஸ்லிம் நண்பர் அவரது மனைவி மற்றும் குடும்பப் பெண்களின் முகத்தை மறைத்தே பதிவிட்டு இருக்கின்றார். ஆனால் அவரது சிங்கள நண்பிகள் பலரின் புகைப்படங்களை தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவேற்றி இருக்கும் இந்த முஸ்லிம் சகோதரன், அவர்களது முகத்தை மறைக்கவில்லயாம்.

'அப்போ முஸ்லிம் பெண்களின் மானம் மரியாதை மட்டும்தான் பாதுகாக்கப்பட வேண்டும் எங்களது பெண்கள் எக்கேடு கெட்டுப்போனாலும் பரவாயில்லை. அப்படியா உங்களது மார்க்கம் சொல்கிறது' என்று அந்த சிங்கள சகோதரர் என்னிடம் கேட்டார்.

மிக நீண்ட நேர உரையாடலுக்குப் பின்னர் அந்த சகோதரரை ஓரளவு சமாளிக்க முடிந்தது.

இந்தப் பிழையை எமது நிறைய சகோதரர்கள் முகநூலில் விடுவதை நாமும் அவதானித்து இருக்கிறோம்.

பட்டமளிப்பு விழா மாதிரி ஒரு மகிழ்ச்சியான தருணங்களை ஒருவர் பகிரும்போது அதில் போய் மாற்றுக் கருத்து சொல்வது அழகில்லை என்று அமைதியாக இருந்திருக்கின்றோம்.

உங்களது மனைவியின் அல்லது தாயின் புகைப்படங்களை முகத்தை மறைத்து பதிவிடுவது உங்களது விருப்பம் அதை யாருக்கும் மறுக்கவோ, தடுக்கவோ முடியாது.

உங்கள் குடும்பப் பெண்களின் விடயத்தில் இவ்வளவு கவனமாக இருக்கும் நீங்கள் நிச்சயமாக உங்களைச் சுற்றி இருக்கும் மாற்றுமதப் பெண்கள் குறித்தும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

சில நேரம் இதே சிங்கள சகோதரிகள்' அவர்களது பேஸ்புக் பக்கதில் விதவிதமாக அவர்களது புகைப்படங்களை பகிர்பவர்களாக இருக்கலாம். அது அவர்களது விருப்பம்.

ஆனால் எமது பெண்களின் முகத்தை மட்டும் மறைத்து விட்டு அவர்களது புகைப்படங்களை அப்படியே நாம் நமது பேஸ்புக் பக்கத்தில் பகிர்ந்துவிடுவது, இஸ்லாம் குறித்தும், பெண்கள் குறித்த இஸ்லாத்தின் பார்வை குறித்தும் மிக மோசமான ஒரு விம்பத்தை அவர்கள் மத்தியில் ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

## முஸ்லிம் பாடசாலைகளின் நிலை




ஐம்பது பேர் தொழுகைக்கு வரும் இடத்தில் ஐநூறு பேருக்கு பள்ளி கட்டும் நாம், இருபத்தைந்து நிமிடம் செலவு செய்யும் மஸ்ஜிதுக்கு டைல்ஸ் இற்கு மேல் காபட் போட்டு அதைச் சுற்றி பேன் போடும் நாம்;

எமது பாடசாலை? குடிக்க நீர் இல்லை, மல சல கூட வசதி இல்லை, அறிவற்ற ஆரோக்கியமற்ற எதிர்கால சமூகமாக.... அரசியல்வாதிகள் காதுகளுக்கும் எட்டட்டும் எமது ஆதங்கம்.

குச்சவெளி முஸ்லிம் மகாவித்தியாலயம்.




# புல்லு மேயத்தான்

- அஷ்ரப் சிஹாப்தீன்

''சீனி வியாதி எங்குறது உண்மையில் ஒரு வியாதி இல்லை. அது வியாதி வருவதற்கான ஒரு வழி. அவ்வளவுதான்.''

''சரி டொக்டர்!''

''நீங்க மருந்தை மட்டும் நூறு வீதம் நம்பிக் கொண்டிருக்கக் கூடாது. இதைக் கட்டுப்படுத்தி வாழ்றது உங்க கைலதான் இருக்குது.''

''.......??''

''வழமையாக நாம சோறும் கறியும் சாப்பிட்டப் பழகியிருக்கிறம். சீனி வந்தா சாப்பாட்டுல ஒரு சிறிய மாற்றம்... சோறும் கறியும் சாப்பிடுறதுக்குப் பதிலா கறியும் சோறும் சாப்பிடுங்க.. புரிஞ்சுதா?''

''இல்ல டொக்டர்!''

''அதாவது அதிகம் கறியும் கொஞ்சம் சோறும் சாப்பிடுங்கங்கிறன். இரண்டு அகப்பை அதாவது இரண்டு பிடிச் சோறு... அதுவும் சிவப்பரிசிச் சோறும் வேண்டிய அளவு மரக்கறியும் சாப்பிடுங்க...''

''சிவப்பரிசி...?''

''ம்... நமது பாட்டன், பூட்டன் எல்லாரும் சிவப்பரிசிதான் சாப்பிட்டாங்க.. அவங்க 80, 90 வயசு வரைக்கும் வாழ்ந்தாங்க.. சீனியும் இல்ல.. சக்கரையும் இல்ல.. நல்லா மரக்கறி சாப்பிட்டாங்க..''

''உண்மைதான் டாக்டர்!''

''விருந்து என்டா மட்டும்தான் சலாது சாப்பிடுறம். அதைக் கூட அன்றாட உணவுல சேர்த்துக்கொள்ள நாங்க நினைக்கிறதில்ல..!''

''ம்ம்ம்...!''

''கட்டாயம் கீரை வகை மதிய உணவுல இருக்கணும். இரவுல கண்ட கடியதைச் சாப்பிடுறதை விட்டு ஒரு மரக்கறி சூப் எடுத்துக்குங்க.. எவ்வளவு வேணுமென்டாலும் குடிக்கலாம். ஏன் கோழி சூப், இறைச்சி சூப் கூட எடுத்துக்கலாம். எல்லா நேரமும் சோறு சாப்பிட்டா சீனியக் கட்டுப்படுத்த ஏலாது..''

''நீங்க சொல்லுறது சரி டொக்டர்...''

''ச்சீஸ், பட்டர், எண்ணெயில் பொரிச்ச அயிட்டங்கள், மாப்பண்டங்கள் எல்லாத்தையும் விட்டுடப் பழகிக்குங்க..!''

''நல்லது டொக்டர்...!''

''காலையில் மரக்கறி ப்ளன்ட் பண்ணி ஒரு ஜூஸ் அடிக்கலாம். உடம்புக்க நல்லது. அறுகம்புல் ஜூஸ் உடம்புக்கு எவ்வளவு நல்லது தெரியுமா? நரம்புகளுக்கும் நல்லது. கொஞ்சம் வித்தியாசமாச் சிந்திங்க...''

''டாக்டர் காலையில ஒரு 10 மணிக்கும் பிற்பகல் 5.00 மணிக்கும் ஒருக்கா உங்க தோட்டத்துக்குள்ள என்னை விடச் சொல்லி உங்க வொச்சருக்கிட்ட சொல்லி வைங்க..!''

''என்னத்துக்கு?''

''புல்லு மேயத்தான்!''

# சமூகத்தில் மட்டுமன்றி, சமூக ஊடகங்களிலும் பேணப்பட வேண்டியவை!

- அஷ்கர் தஸ்லீம்

சமூக மாற்றம் என்பது ஒரு தரப்பினரால் மட்டுமே நிகழ்த்த முடியுமான ஒரு சாதாரணமான விடயமல்ல. ஆன்மீகம், சிந்தனை, குடும்பம், கல்வி, பொருளாதாரம், அரசியல் என்று விரிகின்ற சமூக மாற்றத் தளங்களில் ஒரு தரப்பினர் மட்டுமே தனித்து இயங்க முடியாது. அந்தளவு அசகாய சூரர்களாக நம் காலத்தவர்கள் இருப்பதுமில்லை.

எனவேதான், வெவ்வேறு தளங்களில் சமூக மாற்றத்துக்காக உழைப்பவர்களுக்கு மத்தியில் பரஸ்பர புரிந்துணர்வும், தேவையின் போதான ஒத்துழைப்பும் அவசியப்படுகின்றது. பூரணமான சமூக மாற்றத்தை நிகழ்த்துவதற்கான முக்கிய நிபந்தனைகளில் ஒன்றாகவும் இது உள்ளது.

இந்த கள யதார்த்தத்தை சமூக களத்தில் இயங்குகின்ற செயற்பாட்டாளர்கள், நிறுவனங்கள், அமைப்புக்கள், இயக்கங்கள் புரிந்து கொள்ள வேண்டும். தாம் தேர்ந்தெடுத்திருக்கும் தளத்தில் இயங்கும் அதேவேளை, ஏனைய தளங்களில் இயங்குபவர்களுக்கான மானசீகமான ஆதரவையும், தேவையின்போதான நேரடி ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.

ஆக, சமூகத்தின் ஆன்மீக, கல்வி, பொருளாதார, அரசியல் மாற்றங்களுக்காகவும், சீர்திருத்தங்களுக்காகவும் உழைக்கின்ற ஒவ்வொரு தனிநபரும், குழுக்களும், இயக்கங்களும் தமக்குள் ஒத்துழைத்துக் கொள்ள வேண்டும். அதுவே, எதிர்பார்க்கப்படும் சமூக மாற்றத்தை நிகழ்த்தும்.

# என்.எம். அமீனுக்கு கௌரவ விருது



கலையும் இலக்கியமும் சாந்தமும் ஒழுக்கமும் நிறைந்த முழுமையான சிறந்த மனிதர்களைக் கொண்ட தேசத்தை கட்டியெழுப்புவோம் என்னும் தொனிப்பொருளின் கீழ் கலை இலக்கியம் மற்றும் சமூக சேவையில் ஈடுபட்டுவருபவர்களுக்கு தெஹிவளை பிரதேச செயலகத்தினால் கௌரவ விருது வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பன்முக ஆளுமை கொண்ட நவமணி பத்திரிகை ஆசிரியரும், முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீ லங்கா மற்றும் முஸ்லிம் மீடியா ஃபோரத்தின் தலைவருமான என்.எம். அமீன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

தெஹிவளை ஜயசிங்க மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (12) தெஹிவளை பிரதேச செயலாளர் நளினி பாலசுப்ரமணியம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கொழும்பு மாவட்ட அரசாங்க அதிபர் சுனில் கன்னங்கரா கலந்து கொண்டதுடன் இலக்கியவாதிகள், பாடசாலை மாணவர்கள், தெஹிவளை பிரதேச மக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## உயர் பயங்கரவாத...

(01 ஆம் பக்கத் தொடர்)

வரிசைப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளன. பின்லாந்து, லிதுவேனியா, எஸ் தோனியா ஆகிய நாடுகள் அபாயம் குறைந்த நாடுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

நிதி மோசடி மற்றும் பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி அளிப்பது தொடர்பாக 146 நாடுகளில் இந்த ஆய்வு சுவிஸ் நிறுவனம் ஒன்றினால் நடத்தப்பட்டுள்ளது. அபாயம் குறைந்தவை 0 ஆகவும் அபாயம் கூடியவை 10 ஆகவும் புள்ளிகள் வழங்கப்பட்டு நாடுகள் வரி சைப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வருடத்துக்கான சராசரி அபாயப் புள்ளி 6.15 ஆகும்.

அதிகூடிய அபாயப் புள்ளியாக ஈரான் 8.6 புள்ளிகளைப் பெற்றுள்ளது. இரண்டாவது இடத்திலுள்ள ஆப்கானிஸ்தான் 8.38 புள்ளிகளைப் பெற்றுள்ளது. ஆசிய நாடுகளில் நேபாளம் 7.57 புள்ளிகளுடன் 14 ஆம் இடத்திலும், இலங்கை 7.15 புள்ளிகளுடன் 25 ஆம் இடத்திலும் சராசரி அபாயப் புள்ளிக்கு மேலாக உள்ளன.

இந்தியா 5.58 புள்ளிகளுடன் (88 ஆம் இடம்) அபாயம் குறைந்த நாடாகவும், பாகிஸ்தான் 6.18 புள்ளிகளுடன் (46 ஆம் இடம்) அபாயம் கூடிய நாடாகவும் காட்டப்பட்டுள்ளது.

2016 இல் இருந்து மிகப்பெரிய முன்னேற்றங்களைக் காட்டி சூடான், தாய்வான், இஸ்ரேல் மற்றும் வங்காள தேச நாடுகளால் தம்மை அபாயம் குறைந்த நாடுகளாக மாற்றியுள்ளன என இந்த அறிக்கை தெரிவிக்கிறது. அறிக்கையின் படி இஸ்ரேலுக்கு கிடைத்துள்ள இடம் 137 ஆகும்.

# 2017 செப்தெம்பர் 15 சனநாயகம் தொடர்பான சர்வதேச தினம் அல்லது உலக சனநாயக தினம்

சனநாயகம் தொடர்பான சர்வதேச தினம் அதாவது உலக சன நாயகம் தினம் செப்தெம்பர் 15 ஆம் திகதியன்று கொண்டாடப்படுகின்றது. அதற்கு இணையாக தேர்தல் ஆணைக்குழுவினால் கடந்த ஆண்டைப் போலவே 2017 ஆம் ஆண்டிலும் சன நாயம் மற்றும் சர்வசன வாக்குரிமை தொடர்பாக மக்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நாடெங்கிலும் நடாத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



இதற்கமைய **''சனநாயகத்தின் வெளிப்பாடு தேர்தலாகும். சர்வசன வாக்குரிமையைப் பாதுகாப்போம்''** என்ற தொனிப் பொருளில் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் அனுசரணையோடு ஒவ்வொரு மாவட்டத்திலும் மக்களை அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள், சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளின் கண்காட்சி, வீதி நாடகங்கள், சொற்பொழிவுகள் மற்றும் நடை பவனிகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

## இலங்கையிலுள்ள...

(01 ஆம் பக்கத் தொடர்)

இலங்கையில் இவர்களை ஏற்றுப் பராமரிக்க முன்னர் இலங்கையிலுள்ள பாதிக்கப்பட்டவர்களிலேயே கவனம் செலுத்த வேண்டும் எனவும் அந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவர்களை நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மியன்மார் தூதரகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது வெளியிட்ட கருத்துக்கள் அரசின் கருத்துக்கள் தானா என்பதையும் ஜனாதிபதி வெளிப்படுத்த வேண்டும் எனவும் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது. இந்தக் கடிதத்தின் பிரதியொன்று இலங்கைக்கான மியன்மார் தூதுவருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை ரோஹிங்கிய முஸ்லிம் களுக்கு எதிரான வன்முறைகளைக் கண்டித்து ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமாஅத் கொழும்பு லிப்டன் சுற்றுவட்டாரத்தில் ஏற்பாடு செய்திருந்த கண்டனப் பேரணி பொலிசாரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

## பயங்கரவாத...

(01 ஆம் பக்கத் தொடர்)

சித்திரவதைகள் நிறுத்தப்பட வேண்டும். பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு பதிலாக சர்வதேச தரத்தை கொண்ட சட்டம் இயற்றப்பட வேண்டும் எனவும் இதன்போது ஐரோப்பிய ஒன்றியம் வலி யுறுத்தியுள்ளது. தேசிய நல்லிணக்கத்தை அடிப்படையாக கொண்டு ஒருவரை கைதுசெய்யும்போது, சட்டத்தரணிகள் பிரசன்னமாகி இருக்க வேண்டும். பொது மக்களின் காணிகள் அதன் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டு நம்பிக்கை கட்டி எழுப்பப்பட வேண்டும். பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் போன்ற விடயங்களையும் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மர்ஹூம் ஏ.எச்.எம். அஸ்வர் ஹாஜியார்

## சில நினைவுக் குறிப்புகள்

• **கலாநிதி பீ.எம். பாரூக்**
தலைவர் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம்

''பலஸ்தீன மக்களுக்காக அஸ்வர் இறுதிவரை குரல் கொடுத்து எமது மக்களின் சுமையைச் சுமந்தார். அந்த நன்றிக் கடனுக்காக நான் இப்போது அவரது ஜனாஸாவை சுமக்க வேண்டும். தயவு செய்து எனக்கு அனுமதி தாருங்கள்.''

முன்னால் அமைச்சர் மர்ஹூம் ஏ.எச்.எம். அஸ்வரின் ஜனாஸா அவரது வீட்டில் சந்துடக்கில் வைக்கப்பட்டிருந்த போது மண்டியிட்டு முத்தமிட்டு அழுது புலம்பியவர் வேறு யாருமல்ல. பலஸ்தீனுக்கான இலங்கைத் தூதுவர் சுஹைர் செயட் ஹம்துல்லாஹ்தான். இச்செயலைக் கண்டு அங்கிருந்த எல்லோரும் மனம் கலங்கிப் போனார்கள். அவர் இவ்வாறு வார்த்தையுடன் நின்றுவிடாது தெஹிவளை ஜூம்ஆப் பள்ளிவாசல் வரை குடும்ப அங்கத்தவர்களுடன் ஜனாஸாவை சுமந்து சென்ற காட்சி யாவரையும் சிந்திக்க வைத்தது.

பலஸ்தீன் தூதுவரின் இல்லத்தில் பலஸ்தீன் பற்றிய முக்கிய கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் டெல்மன் தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் திடீரென அங்கிருந்து புறப்பட்டு அக்கலந்துரையாடலில் கலந்து கொண்டு நல்ல பல கருத்துக்களையும் வழங்கியமை யாவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

அவர் நோய்வாய்ப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டது முதல் காலஞ் சென்று நல்லடக்கம் செய்யும் வரை கட்சி, மத பேதமின்றி வருகை தந்த ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்கள், அரசியல்வாதிகள் அனைவரும் ''அஸ்வர் கட்டாயம் பாராளுமன்றத்தில் இருக்க வேண்டியவர். ஒரு திறமையான அரசியல்வாதியை நாங்கள் இழந்துவிட்டோம்'' என்று கருத்துத் தெரிவித்தார்கள்.

அதே போன்று பௌத்த மதகுருமார் உட்பட பலதரப்பட்டோரும் ஆஸ்பத்திரிக்கு வருகை தந்ததோடு ஜனாஸாவில் கலந்து கொண்ட பெருந்திரளான சனத்தொகையும் அவரது சேவைகளுக்கு சான்று பகர்கின்றது.

யாருக்கும் உதவி செய்வதில் அலாதிப் பிரியம் வைத்த அவர், தன்னுடன் பழகுபவர்களை உயர்வடையச் செய்யக் கூடிய வழிகளைக் காட்டி, தேவையான போது மேலிடங்களுக்கும் சிபாரிசு செய்து சாதித்துக் காட்டுவதில் இன்பங் கண்டவர். அவரது சிபாரிசினால் உயர் பதவிகளையும் உயர் அந்தஸ்த்துகளையும் பெற்ற பலரை நாம் காண்கிறோம்.

மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற அவர், அதிக நாட்களில் பாராளுமன்ற கூட்டங்களுக்குத் தலைமை தாங்கும் சாதனையைப் படைத்ததோடு 'பிஸ்மி' சொல்லி பாராளுமன்ற உரைகளை நிகழ்த்தும் வள்ளவராகவும் திகழ்ந்தார். தனது உரைகளிலே குர்ஆன் ஹதீஸ்களை மேற்கோள் காட்டுவார்.

ஊடகத் துறையிலே நல்ல விருப்பம் வைத்திருந்த மர்ஹூம் ஏ.எச்.எம். அஸ்வர் ஒரு சிறந்த எழுத்தாளராகவும் மேடை மற்றும் வானொலிப் பேச்சாளராகவும் திகழ்ந்தார். வாழ்வோரை வாழ்த்துவோர் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் கலைஞர்களையும், சமூக சேவையாளர்களையும் ஊக்கப்படுத்தியதோடு மாத்திரமின்றி பல மாவட்டங்களில் முஸ்லிம்களின் வரலாறுகளை நூலுருவில் பதியச் செய்தார்.

நம் முன்னோர்கள், கலைஞர்கள் சமூக சேவையாளர்கள், பற்றி கட்டுரைகள் மூலமும் வானொலி பேச்சுக்கள் மூலமும் உலகறியச் செய்தார். வருடாந்தம் கலைஞர்கள், சமூக சேவையாளர்கள் பலரை இலவசமாக ஹஜ்ஜூக்கு அனுப்பவும் செய்தார்.

சமூக விடயங்களில் மிகவும் அக்கறை கொண்ட பலர் முஸ்லிம்களின் பிரச்சினைகள் பற்றி அவருக்குத் தான் தெரியப்படுத்துவார்கள். அவர் அவற்றை சம்பந்தப்பட்ட அமைச்சின் குழு நிலை விவாதங்களின் போது சமர்ப்பித்து ஆவண செய்வதில் வெற்றி கண்டார்.

தமக்குத் தெரிந்த மற்றும் நாட்டுக்கும் சமூகத்துக்கும் சேவையாற்றியவர்கள் சுகயீனப்பட்டால் அவர்களைத் தரிசித்து சுகம் விசாரிக்கும் நல்ல பழக்கமுடைய மர்ஹூம் அஸ்வர் அவ்வாறானவர்களது ஜனாஸாக்கள், மரணச் சடங்குகளில் கலந்து கொள்ளத் தவறுவதே இல்லை. கிரிக்கட் போட்டிகளைக் கண்டு ரசிப்பதற்காக இங்கிலாந்து உள்ளிட்ட வெளிநாடுகளுக்குச் சென்ற வரலாறும் உண்டு.

ஐ.தே.க அரசாங்க காலத்தில் பல முக்கியமான வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்ட அவர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பெரும்பாலான வெளிநாட்டு பயணங்களில் பங்குகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. விசேஷமாக முஸ்லிம் நாடுகளுடன் அவர் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார்.

அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் பழைய உறுப்பினராகவும் பல முக்கிய பதவிகள் வகித்தவராகவும் திகழ்ந்ததோடு அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் வளர்ச்சியிலும் ஆர்வமுடன் செயல்பட்டார்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் ஸ்தாபக அங்கத்தவர்களுள் ஒருவரான அவர் அதன் உபதலைவராகவும் விளங்கினார். நல்ல மனிதாபமுள்ள அவர், வட மாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டபோது புத்தளம் மாவட்டத்தில் அவர்களைக் குடியமர்த்தத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்தார்.

குருநாகல் மாவட்டத்தில் பொதுஹரயில் பல அபிவிருத்தி திட்டங்களுக்கு உதவி புரிந்துள்ளார். பொதுஹர முஸ்லிம் பாடசாலையை தனிப்பட்ட பாடசாலையாக மாற்றுவதில் அவரது பங்கு மகத்தானது.

ஜனாதிபதி பிரேமதாசவை அணுகி தித்தவல்கால முஸ்லிம் மைய வாடிக்கு காணி பெற்றுக் கொடுப்பதில் அப்போதைய இராஜாங்க அமைச்சர் ஆரிய குணதிலக்க உடன் இணைந்து அவர் ஆற்றிய பணி மகத்தானது. கல்கமுவ பகுதி அபிவிருத்திக்கும் பங்களிப்பு செய்துள்ளார். அதே போன்று பொலநறுவை மாவட்டத்தில் நிறுவப்பட்ட அகதிகளுக்கான தொழிற் பயிற்சி நிலையம், கதுருவலையில் இயங்கும் அஸ்வர் நூல் நிலையம் என்பனவும் அவரது சேவைக்கு எடுத்துக் காட்டுகளாகும்.

கிழக்கு மாகாணத்தின் அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அறபு கலாசாலைக்கு ரூபா 11 இலட்சம் வழங்கியுள்ளார்.

புத்தளம் தொகுதி எம்.பி.யாக இருந்த முன்னால் அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எம். நய்னா மறிக்காருக்குப் பிறகு புத்தளம் தொகுதிக்கு அளப்பரிய சேவைகள் செய்தவர் மர்ஹூம் ஏ.எச்.எம். அஸ்வர் என்று கூறினால் மிகையாகாது. தமது பன்முகப்படுத்தபட்ட வரவு செலவுத் திட்டத்தின் மூலம் மாத்திரமல்ல பல்வேறு அமைச்சுக்களின் மூலமும் பல விசேட திட்டங்கள் மூலமும் புத்தளம் அபிவிருத்திக்காக பெரும் பாடுபட்டார்.

1991 ஆம் ஆண்டு தேசிய மீலாத் விழாவை புத்தளம் சாஹிராக் கல்லூரியில் நடாத்தி அதன் மூலம் அக்கல்லூரியின் தேவைகள் பல பூர்த்தியாக்கப்பட்டதுடன் பாதைகள் செப்பனிடல் முதல் நகர அபிவிருத்தி சேவைகள் பலவும் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் முப்பது லட்சம் ரூபாவுக்கு அதிகமான செலவில் புத்தளம் சாஹிரா கல்லூரிக்கு பிரமாண்டமான பிரார்த்தனைக் கூடம் அமைத்துக் கொடுக்கப்பட்டதோடு அதற்கு அஸ்வர் மண்டபம் என்று பெயரிடப்பட்டது. இக்கட்டிடம் இன்றும் தலை நிர்மிர்ந்து காணப்படுகிறது.

புத்தளம் தொகுதி மக்களின் பிரதான தொழிலாக இருந்த உப்பு விற்பனை அரச கட்டுப்பாட்டிலே இருந்தது. மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க அதனை தனியார் மயபடுத்துவதில் வெற்றி கண்டதோடு அதன் விலையையும் வெகுவாக உயர்த்துவதற்கு ஆவண செய்து மக்கள் பொருளாதார துறையில் முன்னேறுவதற்கும் வழி வழிகுத்தார்.

மர்ஹூம் அஸ்வர் ஹாஜியாரின் நிதி உதவியின் மூலம் அபிவிருத்தி திட்டங்களை பெற்ற பலர் அவர் பதவியில் இருக்கும் போது சில கட்டிடங்களுக்கு அவர் பெயரை சூட்டிய போதும் பிற்காலத்தில் அப்பெயர்கள் அழிக்கப்பட்டமை மனவேதனை அழிப்பதோடு அது எமது சமூகத்தின் நிலையையும் சித்தரித்துக் காட்டுகிறது.

அன்னாரின் நினைவாக பல வேலை திட்டங்களை முன்னெடுப்பதற்கு அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம் தீர்மானித்துள்ளது. அன்னாரின் வாழ்க்கை வரலாற்றை நூலுருவில் வெளியிடுவதற்கும் முயற்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அன்னாருக்கு ஜென்னதுல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கம் கிடைக்க பிரார்த்திப் போமாக. ஆமீன்.

கண்டி மற்றும் திஹாரியில்

Diploma in ISLAMIC BANKING & FIN.
- Mudarabah
- Musharaka
- Murabaha & Istisna
- Sharia
- Principle of Islamic Banking Riba
- Salam
- Sources of Islamic Law

பாடநெறி ஆரம்பம் 25th - Sept

Duration 4 Months
Full Time / Part Time

Diploma in HOTEL MANAGEMENT
14th Batch
பாடநெறி ஆரம்பம் 25th - Sept
- Front office
- Food & Beverages
- International Cookery
- House Keeping
- Pastry & Bakery
- Languages - French & English
- IT (Information Technology

HOT LINE 0777 222 529

Diploma in AUTO CAD
COMPUTER AIDED DESIGNING & DRAFTING
- Draftsman
- Introduction to AUTO CAD
- Scale( Feet & Inches / Millimeters)
- Plans
- Column and Foudation Details
- Roof Designing
- Stair case
- Section Details A & B
- Door & Window Design
- 3D Modeling

G.C.E O/L, A/L → DIPLOMA IN AUTO CAD → ADVANCE DIPLOMA IN AUTO CAD → 3D SPECIAL AUTO CAD
3 Months Weekdays Weekends
Indusrtial Training can be Provided

SATISFACTION 100% GUARANTEE

REAL ACCESS PROGRAM
5 IN ONE Diploma in
- GRAPHIC DESIGNING
- WEB DESIGNING
- COMPUTER STUDIES
- HARDWARE ENGINEERING
- SPOKEN ENGLISH

25th Batch
பாடநெறி ஆரம்பம் 20th - Sept
3 Months Full Time
With 2 International Certifications

Diploma in AIRLINE TICKETING
- Airline Ticketing
- Airline Geography
- Operation of a Travel Agency
- IATA Intrnational Regulation
- Air Fare Caluculation
- Reservation Procedures
- Basic of GDS / AMADEUS
- Airline & Travel Terminology

பாடநெறி ஆரம்பம் 25th - Sept
Course Duration - 1 to 3 Month Either Full Time or Part Time
Individual Classes also Available

Diploma in TEACHER TRAINING PROGRAM
DIPLOMA IN MONTESSORI TEACHER TRAINING -(AMI)
DIPLOMA IN CHILD PSYCHOLOGY
DIP. IN PRE SCHOOL TEACHER TRAINING
PROFESIONAL ENGLISH
6 Months
13th Batch
பாடநெறி ஆரம்பம் 24th Sept
With UK & Indian Accreditation
Well qualified panel of Lecturers with American Qualification

TVEC ETS TOEIC City & Guilds LCM EDFOCUS

இப்பாடநெறிகலை பூர்த்தி செய்பவர்களுக்கு சிறந்த சம்பளத்துடன் 100% தொழில் பெற்றுத்தரப்படும்.
ஆண் பெண் இறுபாலாருக்கும் வெவ்வேறான பாதுகாப்பான தங்குமிட வசதி - Hostel Available

Golden College Learning for Success
GOLDEN COLLEGE www.goldencollege.lk
NO : 548, PERADENIYA ROAD, KANDY. 081 2 205 544 0777 222 529
NO : 138/C, KANDY ROAD, THIHARIYA. 033 2 245 515 077 808 0342

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## EDITORIAL

49, Sri Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

# ரோஹிங்யர்களைக் கையாள்வதில் காத்திரமான செயற்பாடு அவசியம்

ரெக்கெய்ன் மாநில மக்களின் துயரம் எல்லை கடந்து செல்கிறது. உயிரைப் பிடித்துக் கொண்டு பங்களாதேஷுக்குத் தப்பியோடுபவர்களைக் குறிவைத்து வைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணி வெடிகள் புதிய பாதிப்புக்களை இந்த மக்கள் மீது ஏற்படுத்தி வருகின்றன. நிலக்கண்ணி வெடியில் தனது இரு புதல்வர்களும் கால்களை இழந்து கஷ்டப்படுவதைப் பொறுக்க முடியாத ஒரு தாய், தனது பிள்ளைகளின் உயிரை இறைவன் எடுத்து விட வேண்டும் என்று பிபிசி செய்தியாளரிடம் கதறிய காணொளிகள் உலகை உலுப்பி வருகின்றன.

கடந்த முறையைப் போலல்லாது ரோஹிங்கிய இனத்தின் மீதான இம்முறைய தாக்குதல்கள் உலக அளவில் கவனயீர்ப்புப் பெற்றுள்ளன. ரோஹிங்ய முஸ்லிம்களைக் கையாண்ட விதம் தொடர்பில் மியன்மாரின் நடப்புத் தலைவி ஆங்சாங் சூகி மீது கண்டனங்களும் விமர்சனங்களும் மேலெழுந்து வருகின்றன. ரெக்கெய்ன் மாகாணத்தில் நடைபெறும் மோசமான நடவடிக்கைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் ஸைத் அல் ஹுஸைன் வலியுறுத்தியுள்ளார்.

அதேபோல எதிர்வரும் 19 முதல் 25 வரை நியூயோர்க்கில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் ஆங்சாங் சூகி கலந்து கொள்ள மாட்டார் என்றும் தெரிய வந்துள்ளது. இதுபோன்ற பல அழுத்தங்கள் தற்போது மியன்மார் அரசின் மீது பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு நாடுகளிலும் பாதிக்கப்படும் ரோஹிங்யாக்களுக்கு ஆதரவு தெரிவித்து கண்டனப் பேரணிகள் நடைபெற்று வருகின்றன.

இலங்கையில் இருந்தும் இதுபோன்ற கண்டனக் குரல்களை கேட்கக் கூடியதாக உள்ளது. கொழும்பிலுள்ள மியன்மார் தூதரகத்துக்கு முன்னால் முஸ்லிம் சமூகம் ஒன்று திரண்டு நடத்திய பேரணிகளும், இனச் சுத்திகரிப்பை நிறுத்தக் கோரி அனுப்பப்பட்ட மகஜர்களும் அர்த்தமுள்ளவையாக அமைந்திருக்க முடியும்.

இதற்கு அப்பால் மூலைக்கு மூலை நடத்துகின்ற ஆர்ப்பாட்டங்கள் வெறும் உணர்ச்சிகளைத் தூண்டுவதாக அமையுமே அன்றி அழிக்கப்பட்டுவரும் ரெக்கெய்ன் மக்களுக்கு இதனால் எந்தப் புண்ணியமும் நிகழப் போவதில்லை. மாற்றமாக இங்கிருக்கும் இனவாதிகளைத் தூண்டி விட்டு இங்கும் ஒரு மியன்மாரைத் தோற்றுவிக்கின்ற செயற்பாடாகவே அது அமைய முடியும்.

எரிகிற வீட்டில் பிடுங்கின மட்டும் லாபம் என்பது போல தத்தமது சுயலாபங்களுக்காக இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வதையும் தவிர்ந்துகொள்ள வேண்டும். மூன்று இலட்சத்துக்கும் அதிகமான ரோஹிங்ய மக்கள் காயங்களையும் நோய்களையும் சுமந்து கொண்டு பங்களாதேஷில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். இவர்களுக்கு உதவுவதில் கஷ்டத்தை எதிர்நோக்குகின்ற பங்களாதேஷ் மக்களுக்கு உதவும் வகையில் தமது செல்வாக்கினைப் பயன்படுத்தும் முயற்சிகளே தற்பொழுது செய்யப்பட வேண்டும். இனச்சுத்திகரிப்பைத் தடுக்கும் வகையில் சர்வதேச அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு முஸ்லிம் நாடுகளைத் தூண்ட வேண்டும்.

இந்த விடயத்தில் இங்குள்ள மனித நேய அமைப்புக்களையும் நபர்களையும் இணைத்துச் செயற்பட வேண்டும். இது ஓர் இனத்தின் மீதான வெறியாட்டம் என்பதைத் தாண்டி, மனித இனத்துக்கு எதிரான அக்கிரமம் என்பதனை நமது சூழலில் எத்திவைப்பதற்கும், இலங்கையிலும் இவ்வாறான செயற்பாடுகள் நடக்காமல் தவிர்ந்து கொள்வதற்கும் உணர்ச்சிகளை கிளறும் செயற்பாடுகளை விட அறிவுபூர்வமான செயற்பாடுகளே ஆக்கபூர்வமானதாக அமையும்.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறைக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිෂම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல. : 96, கிருல வீதி, கொழும்பு - 05
தொலைபேசி : 011-5353635
பெக்ஸ் : 011-5335500
ஈமெயில் : srockwood@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# பதவி விலகல் பேச்சுக்களும் அரசாங்கத்தின் எதிர்காலமும்

• எம்.எஸ்.எம். ஐயூப்

அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுமாக மொத்தம் 18 பேர், அரசாங்கத்திலிருந்து விலகி, எதிர்க்கட்சியினரோடு அமர இருப்பதாக, சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர், ஒன்றிணைந்த எதிரணி என்று தம்மை அழைத்துக் கொள்ளும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறினர். ஆனால், இன்று வரை அரசாங்கத்தின் தரப்பிலிருந்து எவரும் எதிர்க்கட்சியின் பக்கம் தாவவில்லை. தாம் கூறியவாறு அரசாங்கத்தை விட்டு, ஏன் எவரும் செல்லவில்லை என்பதை ஒன்றிணைந்த எதிரணியினர் தெளிவுபடுத்தவில்லை.

அரசாங்கத்திலிருந்து சிலர் இதோ வந்துவிட்டார்கள். அதோ வந்துவிட்டார்கள் என்று, அதற்கு முன்னரும் பலமுறை ஒன்றிணைந்த எதிரணியினர் கூறியதுண்டு. ஆனால், கடந்த இரண்டரை ஆண்டுகளில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்தோ அல்லது அரசாங்கத்திலிருக்கும் மைத்திரி அணியிலிருந்தோ ஒருவரேனும் எதிர்க்கட்சிக்குத் தாவவில்லை.

பவித்ரா வன்னியாரச்சி போன்ற கடும் மஹிந்த ஆதரவாளர்கள் ஓரிருவர், 2015 ஆம் ஆண்டு, பொதுத் தேர்தலுக்கு முன்னர், நல்லாட்சி அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை ஏற்றிருந்து, பின்னர் அவற்றைக் கைவிட்டுச் சென்றிருந்தார். ஆனால், அவர் கடும் மஹிந்த ஆதரவாளர் என்பதால், அதை அரசாங்கத்தின் வீழ்ச்சியாக எவரும் கருதவில்லை.

ஆனால், இப்போது சற்று வித்தியாசமான நிலைமை உருவாகியிருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சியைப் பெரும்பான்மையாகக் கொண்ட அரசாங்கத்தின் கீழ், பாரிய அளவில் ஊழல் மோசடிகள் இடம்பெற்று வருவதால், தொடர்ந்தும் தம்மால் அரசாங்கத்தில் இருக்க முடியாது என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களாக இருக்கும் 12 பேர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கூறியிருப்பதாகக் கடந்த வாரம் செய்திகள் வெளியாகின.

அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, ஜோன் செனவிரத்ன, அனுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோரும் அந்த 12 பேர்களுக்குள் அடங்குவதாகக் கூறப்படுகிறது. தாம், ஏதோ இது வரை ஊழல் பேர்வழிகளோடு செயற்பட்டதே இல்லை என்றதைப் போல்த்தான் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். அண்மையில், மத்திய வங்கி பிணைமுறி விற்பனையில், பாரியதோர் ஊழல் இடம்பெற்ற போதிலும், மஹிந்தவின் ஆட்சியே இதுவரை இலங்கையில் மிகவும் ஊழல் மலிந்த ஆட்சியாகும்.

ஊழல் காரணமாக, இந்த அரசாங்கத்தில் இருக்க முடியாது எனக் கூறும் இந்த 12 பேரும், அந்த அரசாங்கத்தில் அமைச்சர்களாகவும் பிரதி அமைச்சர்களாகவும் இருந்தவர்கள். எனவே, ஊழல்தான் அவர்களுக்குப் பிரச்சினையாக இருக்கிறது என்பதை நம்ப முடியாது.

எவ்வாறாயினும், இதோ கட்சி தாவப் போகிறார்கள். அதோ கட்சி தாவப் போகிறார்கள் என்று, ஒன்றிணைந்த எதிரணியினர் கூச்சலிடுவதும், அதை கேட்டு ஜனாதிபதி மைத்திரிபாலவின் அணியினர் திடுக்கிடுவதும், ஒரே கட்சியாகத் தேர்தல் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டு இருந்தாலும், ஸ்ரீ ல.சு.க தொடர்ந்தும் ஒரே கட்சியல்ல; இரண்டு கட்சிகளே என்பதையே காட்டுகின்றது. ஆனால், உலகமே அறிந்திருக்கும் இந்த உண்மையை வெளிப்படையாக ஏற்றுக் கொள்ள இரு தரப்பினரும் மறுக்கின்றனர்.

சில தினங்களுக்கு முன்னர், ஊழல் குற்றச்சாட்டின் பேரில் வெலிக்கடை சிறையில், விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்தனவை பார்வையிட்டு விட்டுத் திரும்பி வரும்போது, ஊடகவியலாளர்களைச் சந்தித்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ''தாம் இன்னமும் ஸ்ரீ ல.சு.கட்சிக்காரர்தான்'' எனக் கூறியிருந்தார்.

அது மட்டுமல்ல, தாம் ஒருபோதும் ஸ்ரீ ல.சு.க தலைவர் பதவியிலிருந்து விலகவில்லை என்றும், தம்மை எவரும் அப்பதவியிலிருந்து விலக்கவும் இல்லை என்றும் தாமே இப்போதும் அக்கட்சியின் தலைவர் என்று சர்ச்சைக்குரியதும் ஆனால் ஒருவித வினோதமானதுமான கருத்தையும் வெளியிட்டு இருந்தார்.

தாம் தான், கட்சியின் தலைவர் என மார்தட்டிக் கொள்ளும் மஹிந்த, கடந்த 3 ஆம் திகதி கொழும்பு, கெம்பல் பார்க் மைதானத்தில் நடைபெற்ற ஸ்ரீ ல.சு.க.வின் 66 ஆவது வருடாந்த மாநாட்டுக்குத் தம்மை அழைக்கவில்லை என, மைத்திரி அணியைக் குறைகூறியிருந்தார். ''அழைப்பு கிடைத்தது; ஆனால் அவர்கள் விரும்பித் தம்மை அழைக்கவில்லை'' எனப் பின்னர் கூறியிருந்தார்.

''அழைப்பு கிடைத்தாலும், மஹிந்த மாநாட்டில் கலந்த கொள்ள மாட்டார்'' என அவரது நெருங்கிய சகாவும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் கூறியிருந்தர். இக்கூற்றுகள், தாமே கட்சியின் தலைவன் என்ற மஹிந்தவின் வாதத்தை முறியடிக்கிறது. அவர்தான் கட்சித் தலைவர் என்றால், மாநாடும் அவர் தலைமையில் தானே நடத்தப்பட வேண்டும்? ஆனால், மஹிந்தவின் அணியினர் தனியாக மாநாடு நடத்தவில்லை. மைத்திரிபால தலைமையில் நடைபெற்ற மாநாட்டுக்கு, அழைப்பு வரவில்லை எனக் குறை கூறவே முற்பட்டனர்.

மஹிந்த ராஜபக்ஷ அணியினர், ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி என்ற பதிவுசெய்யப்பட்ட கட்சியொன்றைத் தமதாக்கிக் கொண்டு, இதைத் தமது கட்சியாக வளர்த்து வருவது சகலரும் அறிந்த விடயம். மஹிந்தவின் சகோதரர் பசில் ராஜபக்ஷவின் தலைமையில், அக்கட்சி நாடு முழுவதிலும் அங்கத்தவர்களைச் சேர்க்கும் திட்டமொன்றை, செயற்படுத்தி வருவதும் சகலரும் அறிந்ததே.



கடந்த வாரம், தெனியாயவில் நடைபெற்ற கூட்டமொன்றை அடுத்து, ஊடகவியலாளர்களுடன் உரையாடிய மஹிந்த, அடுத்துவரும் தேர்தல்களின், ஒன்றிணைந்த எதிரணி, ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் பூ மொட்டுச் சின்னத்தில் போட்டியிடும் எனக் கூறியிருந்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள், மற்றொரு கட்சியை வளர்ப்பதற்காகச் செயற்படுவதும், அதற்காகப் பிரசாரப் பணிகளில் ஈடுபடுவதும் ஸ்ரீ ல.சு.கட்சியின் யாப்புக்கு முரணான செயல்களாகும். அவ்வாறு செய்வதே ஒருவரை ஸ்ரீ ல.சு.க.விலிருந்து வெளியேற்றப் போதுமானதாகும். அவ்வாறு இருக்கத்தான், மஹிந்த உள்ளிட்ட அவரது அணியினர், ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியை வளர்த்தும் அதற்காகப் பிரசாரப் பணிகளில் ஈடுபட்டும் வருகிறார்கள்.

அது மட்டுமல்ல, அவர்கள் பொதுஜன முன்னணிக்காக உழைத்து வருவது, இவ்வளவு தெளிவாக இருந்தும், உத்தியோகபூர்வ ஸ்ரீ ல.சு.க.வும் அதன் தலைவருமான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறார்கள். நடவடிக்கை எடுப்பது ஒரு புறமிருக்க, மைத்திரி அணியினர், அவர்களைத் தமது கட்சியின் 66 ஆவது மாநாட்டுக்கும் அழைத்தனர்.

மஹிந்த அணியினர் தனியாகக் கூட்டம் நடத்தும் போதும், ஆர்ப்பாட்டம் நடத்தும் போதும், அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரான அமைச்சர் மஹிந்த அமரவீர அடிக்கடி கூறுவார். ஆனால், ஒருபோதும் அவ்வாறான நடவடிக்கை எடுத்ததில்லை. மஹிந்த அணியின் பலர், தொகுதி அமைப்பாளர் பதவிகளில் இருந்து தூக்கியெறியப்பட்ட சம்பவங்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளன.

இதற்கு என்ன காரணம்? இவ்வாறு, மஹிந்த அணியினருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால் கட்சி தெளிவாகவே இரண்டாகப் பிளவுபடும் என்றும், அப்போது மதில் மேல் இருக்கும் பூனைகளைப் போல், இரு அணிகளுக்கிடையே ஊசலாடிக் கொண்டிருக்கும் கட்சியின் எம்.பிக்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களைப் போன்றோர்கள், பெரும்பாலும் மஹிந்த அணியினருடனே சேருவர் என்றும், அதனால் தமது அணி பலவீனமடையும் என்றும், மைத்திரி அணியினர் பயப்படுகின்றனர்.

நாடாளுமன்ற, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் மட்டுமன்றி, ஸ்ரீ ல.சு.க.வின் சாதாரண உறுப்பினர்கள், தொண்டர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மத்தியிலும் மஹிந்த அணிக்கே ஆதரவு அதிகமாக இருக்கிறது.

மைத்திரி அணிக்கு, அக்கட்சியின் உறுப்பினர்களில் 10 அல்லது 15 சதவீத ஆதரவுதான் இருக்கும். எனவே, இப்போதே மஹிந்த அணிக்கும் தமது அணிக்கும் இடையில் தெளிவான பிரிவினைக் கோட்டை வரைந்தால், அது எதிர்வரும் தேர்தல்களின்போது, தமது அணியைப் பாதிக்கும் என ஜனாதிபதி கருதுகிறார் போலும். தேர்தல் காலத்தில் மஹிந்த அணியின் பிரபல்யம் வாய்ந்த பிரதேச தலைவர்கள் போன்றவர்களைப் பட்டம், பதவிகளைக் கொடுத்து தம் பக்கம் இழுக்கலாம் என ஜனாதிபதி கருதுகிறார் என்றும் ஊகிக்கலாம்.

தெளிவான கோடொன்றை வரைய, அவர் விரும்பவில்லை. ஏற்கனவே, அரசாங்கத்தில் இருக்கும் சில ஸ்ரீ ல.சு.க.காரர்கள் அரசாங்கத்தைப் பற்றிப் பகிரங்கமாகவே குறை கூறி வருகிறார்கள்.

அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, ஜோன் செனவிரத்ன அதற்கு உதாரணமாகும். ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை, சீன நிறுவனமொன்றுக்குக் குத்தகைக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தபோது, அதை விமர்சித்த முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ பதவி நீக்கம் செய்யப்பட்டார். ஆனால், அதைப் பொருட்படுத்தாது, பிரேமஜயந்தவும் அதே நாட்களில் அத்திட்டத்தை பகிரங்கமாகவே விமர்சித்திருந்தார்.

அந்த நிலையில்தான், தொடர்ந்தும் தமக்கு ஐ.தே.க.வுடன் அரசாங்கத்தில் இருக்க முடியாது என 12 ஸ்ரீ ல.சு.க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் கடந்த வாரம் கூறியிருக்கிறார்கள். அவ்வாறு அவர்கள் அரசாங்கத்தைப் பற்றி மனமுடைந்து போகக் காரணங்கள் இல்லாமல் இல்லை. ஸ்ரீ ல.சு.க. இன் அரசாங்கமொன்றைப் போல் அவர்களுக்கு இந்த அரசாங்கத்தில் அதிகாரமோ வரவேற்போ அல்லது அங்கிகாரமோ இல்லை.

பொருளாதாரம், பாதுகாப்பு ஆகிய துறைகள் தொடர்பான, பலம் வாய்ந்த சகல அமைச்சுகளும் ஐ.தே.க அமைச்சர்களுக்கே வழங்கப்பட்டுள்ளன. அத்துறைகள் தொடர்பான சகல முடிவுகளும் ஐ.தே.க அமைச்சர்களே எடுக்கிறார்கள்.

அதாவது, அரசாங்கத்தின் கடைசிக் காலம் நெருங்கி வருகிறதா என்று பலர் கேட்கலாம். அந்தளவுக்கு நிலைமை மோசமானதாக இல்லை என்றே தோன்றுகிறது. ஸ்ரீ ல.சு.க எம்.பிக்கள் சுமார் 40 பேர் அரசாங்கத்தில் இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் விலகிவிடுவார்கள் என்று நம்ப முடியாது.

அரசாங்கத்தில் உள்ள பெரும்பாலான ஸ்ரீ ல.சு.க உறுப்பினர்கள் 2015 ஜனவரி மாதம் ஜனாதிபதி தேர்தலின் போது, மைத்திரிபால சிறிசேனவையும் அதே ஆண்டு ஒகஸ்ட் மாதம் பொதுத் தேர்தலின்போது, ஐ.தே.க தலைமையிலான கூட்டணியையும் தோற்கடிக்கத் தம்மால் இயன்ற அத்தனையையும் செய்தவர்கள். (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றவூப் ஸெய்ன்

## நல்லாட்சி அரசியல்




# VISION 2025
# வெறும் அரசியல் முழக்கமா?

2025 இற்கான பொருளாதாரத் திட்டத்தை அறிவிக்கும் கூட்டத்திற்கு ஜனாதிபதியும் பிரதமரும் ஒரே காரில் வந்திறங்கினர். 2025 இல் செல்வச் செழிப்புள்ள இலங்கையைக் காணும் ஒரு கருத் திட்டத்தை இருவரும் அறிமுகம் செய்தனர். 2025 வரை இருவரும் இணைந்து அரசாங்கத்தை நீடிக்கச் செய்வர் என்பது இதன் மறைமுக அர்த்தமாகும்.

பொருளாதார முன்னேற்றம் என்ற சொற்றொடர் அரசியல்வாதிகளால் மட்டுமன்றி, பொருளியலாளர்களாலும் வரையறுப்பதற்கு கடினமான ஒன்றாகும். உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் என்பவை முதலாளித்துவ ஏகாதிபத்திய சுரண்டல் வாதத்திற்குத் தகுந்த சில குறிகாட்டிகளை பொருளாதார அபிவிருத்திக்கு அடிப்படையாகக் கொள்கின்றன. அவற்றுள் தலாவீத வருமானம் முக்கியமானது.

ஒரு நாட்டின் மொத்த தேசிய வருமானத்தை மக்கள் தொகையால் பிரித்து பொருளாதார அபிவிருத்தியைக் கணிப்பிடுகின்றனர். மொத்த தேசிய வருமானத்தைக் கூட நுண்மையாக அளவீடு செய்ய முடியாது. இந்நிலையில் தலாவீத வருமானம் என்பது முற்றிலும் அறிவார்ந்த ஒரு குறிகாட்டியல்ல.

கடந்த நூற்றாண்டை விட இந்த நூற்றாண்டில் உலகப் பொருளாதாரம் முன்னேறியுள்ளது என்று பொருளியலாளர்கள் கூறுவர். ஆனால், அந்த முன்னேற்றம் உலகில் 748 கோடி மக்களையும் சென்றடைந்துள்ளதா என்றால் இல்லையென்றே பதில் கிடைக்கின்றது,

இன்று உலகிலுள்ள 748 கோடி மக்களிடமுள்ள செல்வத்திற்கு சரிநிகரான செல்வம் வெறும் எட்டுப் பேரிடம் குவிந்து கிடக்கின்றது. சமீபத்தில் ஒக்ஸ்ஃபார்ம் இஸ்டநெஷனல் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையொன்றில், மனித குலத்தையே திடுக்கிடச் செய்யும் சில உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளது. அதன்படி 130 கோடி மக்கள் வாழும் இந்தியாவில் 130 கோடி மக்களிடம் உள்ள செல்வத்திற்கு நிகரான செல்வம் அந்நாட்டில் 58 தனிநபர்களிடம் உள்ளது. எதிர்வரும் மூன்று ஆண்டுகளில் உலகின் முதலாவது ட்ரில்லியனர் தோன்றவுள்ளார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவில் 30 கோடி மக்கள் வாழ்கின்றனர். ஒரு வீதமான மக்களிடம் 90 வீதமான சொத்துக்கள் முடங்கியிருக்கின்றன. தெற்காசியாவில் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை வேகமாகப் பெருக்கெடுப்பதனால் இருப்பவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்து வருகின்றது. பங்களாதேஷ், பாகிஸ்தான், இந்தியா ஆகியவற்றில் இது மிகவும் தெளிவானது. தெற்காசியாவில் இந்த இடைவெளிக்கு நான்காவது உதாரணமாக விளங்கும் நாடு இலங்கையாகும். ஒக்ஸ்ஃபார்மின் அறிக்கையின்படி இலங்கையில் இரண்டு மில்லியன் பேரிடம் உள்ள சொத்தே 2 கோடி மக்களிடம் உள்ளது. (இலங்கை மொத்த சனத்தொகை 2 கோடி 20 இலட்சம் என்பதைக் கவனத்திற் கொள்க.)

செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்துச் செல்லும் நாடுகளின் பட்டியலில் இலங்கை இணைந்து ஒரு தசாப்தம் ஆகிவிட்டது. இலங்கையில் வறுமை கிராமங்கள் சார்ந்த பிரச்சினை மட்டுமன்றி, நகர வறுமையும் இன்று ஒரு முக்கிய பேசுபொருளாகும். இச்சூழ்நிலையிலேயே மாறி மாறி வரும் அரசாங்கங்கள் அறிவுக்கொவ்வாத இலட்சியவாத கண் ணோட்டங்களில் 'தூரதிருஷ்டியுடனான' (Visionary) பொருளாதாரத் திட்டங்க்ளை முன்வைக்கின்றன.

மஹிந்த ஆட்சியில் மத்திய வங்கியின் ஆளுநராகக் இருந்த அஜித் நிவாத் கப்ரால் 2500 அமெரிக்க டொலர் தலாவீத வருமானம் பெறும் இலங்கையர்களின் வாழ்க்கைத் தரத்தை 2020 இல் 4000 அமெரிக்க டொலராக மாற்றும் திட்டம் மஹிந்த அரசாங்கத்தில் உள்ளது என்றார். இப்போது அவர் மைத்திரி அரசாங்கத்தில் நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணைக்கு உட்பட்டுள்ளார்.

2010 இல் அவரது மத்திய வங்கி ஆண்டறிக்கையின்படி இலங்கைப் பிரஜை ஒருவர் பெறும் மாதாந்த வருமானம் 375,000 ரூபாவாகும். அதை 600,000 ஆக உயர்த்துவதே அரசின் நோக்கம் என்றார்.

தற்போது முன்வைக்கப்பட்டுள்ள விஷன் 2025 இன்படி இலங்கைப் பிரஜை ஒருவரின் தலாவீத வருமானத்தை 5000 டொலராக உயர்த்துவதற்கு நல்லாட்சி அரசாங்கம் எதிர்பார்ப்பதாகக் கூறப்படுகின்றது. இலங்கையின் முக்கிய அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவதும் வெளிநாட்டு கோப்ரேட்டுகளுக்கு நாட்டின் இயற்கை வளங்களை திறந்து கொடுப்பதாலும் இலங்கையை செல்வச் செழிப்பில் ஆழ்த்தி விடலாம் என்று ஐ.தே.க. கனவு காண்கின்றது.

1970 களின் இறுதிக் கூறுகளில் ஜே.ஆர். ஜெயவர்தன இத்தகையதொரு பொருளாதாரக் கொள்கையையே அறிமுகம் செய்தார். அது வெற்றி பெறவில்லை என்பதோடு, அதனால் இலங்கைக்கு ஏற்பட்ட பாதிப்புகளே அதிகமாக இருந்தது.

இலங்கையின் கனிமங்கள் மீது கண்ணாங் கொத்திப் பாம்புகள் போன்று கண்ணும் கருத்துமாக உள்ள வெளிநாட்டு சக்திகளிடம் முதலீடு செய்யுமாறு தாஜா பண்ணுவதே பொருளாதாரக் கொள்கை என்று தப்புக் கணக்கு போடுகின்றது அரசாங்கம். இலங்கையை செல்வச் செழிப்புள்ள நாடாக மாற்றுதல் மிக இலகுவானது. ஆனால், இன்று அது பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ளது.

இலங்கைக்கென்று நிலையான ஒரு பொருளாதாரக் கொள்கை இதுவரை வகுக்கப்படவில்லை. கொள்கை வகுப்பு மற்றும் அமுலாக்கல் அமைச்சு என்ற பெயரில் கடந்த காலங்களில் ஒரு அமைச்சு செயல்பட்டது. ஆயினும், எதிர்பார்த்த அளவுக்கு பொருளாதாரச் செழிப்பை நாம் அடையவில்லை.

நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்தவுடன் கடன் சுமையைக் கையாள்வதற்கு பிரதமரின் தலைமையில் அமைச்சரவையில் பொருளாதார முகாமை தொடர்பான குழுவொன்று நியமிக்கப்பட்டது. அதன் போதாமையை உணர்ந்த ஜனாதிபதி அவரது தலைமையில் தேசிய பொருளாதாரக் கவுன்சில் ஒன்றை உருவாக்க வேண்டும் என்று அமைச்சரவையில் பரிந்துரை செய்தார்.

பேண்தகு அபிவிருத்தி எனப்படும் நிலையான பொருளாதார அபிவிருத்தியை நோக்கி இலங்கை செல்வதில் உள்ள உண்மையான சவால்கள் என்ன? ஸ்திரமான அரசாங்கம் இதன் மூல நிபந்தனையாகும். முறையான நிதிக் கையாளல் அல்லது முகாமை இரண்டாவது முக்கிய நிபந்தனையாகும்.

பொருளாதார அபிவிருத்தியில் முதன்மைக்குரிய பகுதிகளை அடையாளம் காணல் முக்கியமானதாகும். கல்வி மற்றும் தொழில்நுட்பத்திலான முதலீடு மற்றொரு அவசியமான காரணியாகும். இராணுவத்துறை முதலீடுகளை விட விஞ்ஞான, தொழில்நுட்ப ஆய்வுகளுக்கான முதலீடு இன்றியமையாததாகும். மக்களிடமிருந்து வருமானத்திற்கு மேல் வருமானம் குவிக்கும் உள்நாட்டு வரிக்கொள்கை அவ்வப்பொது நடைமுறைக்கு வருகின்றது. புதிய நிதியமைச்சர் மங்கள புதிய வருமான வரித் திட்டமொன்றை சமர்ப்பித்துள்ளார். ஆனால், அரசாங்கம் குவிக்கும் வருமானங்கள் எதற்காக, எவ்வாறு செலவு செய்யப்படுகின்றன என்பது குறித்த கொள்கைத் தீர்மானங்கள் எதுவும் இல்லை.

கீழ்க்கட்டுமான அபிவிருத்தி இலங்கையில் இன்னும் முழுமை பெறவில்லை. ஊழல் பெருச்சாளிகளின் நிதிக் கையாடல்கள் இன்னும் ஓயவில்லை. அரச சொத்துக்கள் பல்வேறு துறைகளில் வீணடிக்கப்படுகின்றன. சில துறைகள் பாரிய நஷ்டத்தில் செல்கின்றன. எடுத்துக்காட்டாக இலங்கையின் சிவில் விமான சேவைகள் துறை கடந்த பல ஆண்டுகளாக நஷ்டத்தில் செல்கின்றது என அரசாங்கம் கூறுகின்றது. மாதாந்தம் 15 இலட்சம் ஊதியம் பெறும் உயர் தொழின்மைவாதிகள் அதில் பணியாற்றுகின்றனர். அவ்வாறிருந்தும் விமானப் போக்குவரத்துத் துறை ஏன் நஷ்டத்தில் செல்கின்றது என்பது ஆராயப்பட வேண்டியது.

பாதுகாப்புக்கு வரவு-செலவுத் திட்டத்தில் கால்வாசி ஒதுக்கப்படுகின்றது. கல்விக்கான ஒதுக்கீடு இன்னும் 3 வீதத்தை எட்டவில்லை. இவ்வாறான நிலையில், உள்ளூர் உற்பத்தித் துறையும் பாரியளவு முன்னேற்றப்படவில்லை. குறைந்தபட்சம் விவசாயத் தொழில்நுட்பத் துறையிலேனும் நாம் போதிய முன்னேற்றம் அடையவில்லை.

மலைநாட்டில் உற்பத்தி செய்யப்படும் உருளைக் கிழங்கிற்கு உள்ளூரிலுள்ள சந்தை வாய்ப்பு உருளைக் கிழங்கு இறக்குமதியினால் குறைகின்றது. உள்ளூர் உற்பத்திக்கான செலவீனம் அதிகம் என்று நியாயம் கூறப்படுகின்றது. கந்தளாய் மற்றும் ஹிங்குராண சீனித் தொழிற்சாலைகள் மூடப்பட்ட நிலையில் உள்ளன. அல்லது குறிப்பிட்ட சில காலங்களுக்கு மாத்திரம் இயங்குகின்றன.

உற்பத்தி இல்லாமல் பொருளாதாரச் செழிப்பில்லை என்று மார்க்ஸ் கூறுகியது உண்மையே. இலங்கையர்கள் அவர்களது வாழ்வாதாரத்திற்கான பணத்தின் பெருந்தொகையை வெளிநாட்டு இறக்குமதிக்காக செலவு செய்கின்றனர். அவற்றை உள்ளூரில் மீதப்படுத்தும் ஒரு பொருளாதாரத் திட்டம் நம்மிடம் இல்லை.

இப்படி எக்கச்சக்கமான ஓட்டைகளை வைத்துக் கொண்டு 2025 இல் இலங்கைப் பிரஜைகளுக்கு 5000 அமெரிக்கன் டொலர் தலாவீத வருமானம் கிடைக்கும் என்று கற்பனை செய்வது ஒன்றில் ஓர் அரசியல் முழக்கமாக இருக்கலாம் அல்லது மாயக் கனவாகத் தோன்றலாம். முழக்கங்களால் கட்சிகள் முன்னேறிய வரலாறு உண்டு. ஆனால், நாடு முன்னேறிய வரலாறு இல்லை.

# லலித் வீரதுங்க: எய்தவன் இருக்க அம்பைக் குற்றம் பிடிக்கும் அரசியல்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத் தொடர்புகள் ஆணைக் குழுவின் பணிப்பாளர் அனுஷ பெல்பிட ஆகியோர் ஒன்றரை ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளனர். தலா 5 மில்லியன் அபராதமும் அவர்கள் மீது விதிக்கப்பட்டுள்ளது. அரசாங்க நிறுவனமொன்றிலிருந்து 600 மில்லியன் ரூபாய்களை சில் துணிகளை விநியோகிப்பதற்கு பயன்படுத்தினார் என்பதே லலித் வீரதுங்கவின் மீதான குற்றச்சாட்டாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது மஹிந்த, பிக்குகளின் வாக்குகளைக் கவர்வதற்கு சில் துணி விநியோகத்தில் ஈடுபட்டுள்ளார். திறைசேரியிலிருந்து அதற்கென 600 மில்லியன் ரூபாயை எடுத்துப் பயன்படுத்துமாறு மஹிந்தவின் பணிப்புரையின் பேரிலேயே லலித் செயற்பட்டுள்ளார். துரதிஷ்டவசமாக மஹிந்த தேர்தலில் தோல்வியடைந்தார். லலித் இன்று குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டு சிறைக் கம்பிகளை எண்ணி வருகிறார்.

இலங்கையின் அரச நிருவாகத் துறையில் லலித் 40 ஆண்டு கால அனுபவம் கொண்டவர். ஒரு யோக்கிதையான நிருவாக உத்தியோகத்தர் என அறியப்பட்டவர். பல்வேறு அரச திணைக்களங்களில் சிரேஷ்ட நிருவாக அதிகாரியாகக் கடமையாற்றியவர். விசாரணை



கள் துரிதப்படுத்தப்பட்டு இன்று அவர் குற்றவாளியாய் ஆக்கப்பட்டுள்ளார். நீதிமன்றம் தகுந்த ஆதாரங்களுடன் தீர்ப்பளித்துள்ளது.

பெறப்பட்ட 600 மில்லியன், லலிதின் சொந்தத் தேவைக்காகப் பயன்படுத்தப்படவில்லை என்பதையும் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது. லலித்திற்கு உத்தரவிட்டவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த என்பதை மஹிந்த [illegible] போது பகிரங்கமாகக் கூறி வருகிறார்.

"தேரர்களுக்கு சில் துணிகளை வழங்க வேண்டும் என்ற எனது பணிப்புரையை அரசாங்கம் இன்று குற்றமாகக் கருதுகிறது. ஆகவே இந்தக் குற்றத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன்" எனக் கூறும் மஹிந்த, இன்னும் ஏராளமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட நிலையில் வெளியில் சொகுசாக உலா வருகிறார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதேநேரம் அதிகாரத்தைத் தக்க வைப்பதற்கு எதையும் செய்யத் துணிந்திருந்த அந்த ஜனாதிபதியின் பணிப்புரையை அமுல்படுத்தியமையே லலித் சட்டத்தின் வலையில் சிக்குவதற்குக் காரணமானது.

ஆனால், இங்குள்ள அரசியல் விநோதம் என்னவென்றால், எய்தவன் இருக்க அம்பைக் குற்றம் காண்பதுதான். மஹிந்த தப்பித் தவறி தேர்தலில் வென்றிருந்தால் இதுபோன்ற ஒரு சம்பவம் நாட்டுக் குடிமகன் எவனுக்கும் தெரியாமல் போயிருக்கும். துரதிஷ்டம் இது லலித்தின் கெட்ட காலம்.

நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு ஒரு [illegible] நிருவாக அதிகாரிகளுக்கு ஒரு நல்ல பாடம். தமது எஜமானர்கள் போடும் எல்லாக் கட்டளைகளையும் நிறைவேற்ற வேண்டுமா என்பது குறித்து இரண்டு முறை சிந்திப்பதற்கு இத்தீர்ப்பு வாய்ப்பளித்துள்ளது.

இன்றைய ஜனாதிபதியோ பிரதமரோ வழங்கும் உத்தரவுகளை அப்படியே அட்சரம் பிசகாமல் அமுல்நடாத்த முனையும் அதிகாரிகளுக்கு இதுவொரு எச்சரிக்கை. Yes sir syndrom அரச நிருவாகத்திலிருந்து ஒழிய வேண்டும்.

இதிலுள்ள வேடிக்கை என்னவென்றால், சில் துணிகளை பிக்குகளுக்கு வழங்குவது குற்றமா என்று மஹிந்த கேட்பதுதான். பதவி விலகிச் சென்ற ரவி கூட தனது வாடகை வீட்டு விவகாரத்திற்கும் மத்திய வங்கி பிணைமுறி விவகாரத்திற்கும் என்ன தொடர்பு என்று கேட்டார்.

நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்து இரண்டரை ஆண்டுகள் கழிந்த நிலையில், ஊழல் குற்றவாளிகளை விசாரிப்போம், தண்டிப்போம் என்று மைத்திரியும் ரணிலும் வழங்கிய வாக்குறுதிகள் காற்றில் பறந்து கொண்டிருக்க, நல்லாட்சியில் சிறைச்சாலை செல்லும் முதலாமவராக லலித் வீரதுங்க ஆக்கப்பட்டமை துரதிஷ்டம். அவருக்கு எதிராக விதிக்கப்பட்ட 5 மில்லியன் தண்டப் பணத்தை செலுத்தி அவரை விடுதலை செய்வதற்கு கூட்டு எதிர்க்கட்சியினர் இப்போது களத்தில் இறங்கியுள்ளனர்.

ஏதோ சிறுநீரக வியாதியினால் பாதிக்கப்பட்டவரை மீட்பதற்கு உதவித் தொகை வசூலிப்பது போல கூட்டு எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் தலா ஒரு லட்சம் வழங்குவதாக ஒப்புக் கொண்டுள்ளனர். எமக்கு மீண்டும் அலிபாபாவும் 40 திருடர்களும் கதை ஞாபகத்திற்கு வருகிறது.

கடந்த வாரம் டெய்லி மிரர் ஆங்கிலப் பத்திரிகை குறிப்பிட்ட செய்தியொன்றின்படி, சுதந்திரக் கட்சியின் சில அங்கத்தவர்க்ள் அரசாங்கத்திலிருந்து வெளியேறப் போவதாக ஜனாதிபதியிடம் அறிவித்துள்ளனர். தமது முன்னாள் எஜமானர் ராஜபக்ஷவை சந்தித்து அடுத்த கட்ட நகர்வு குறித்து கலந்துரையாடவுள்ளதாகக் கூறியிருந்தனர். அவர்களுள் சுசில் பிரேம ஜயந்த, அனுர பிரிய தர்ஷன, டீ.பி. ஏகநாயக, டுலிப் விஜேசேகர, நிமல் லன்சா, அருந்திக பெர்னான்டோ ஆகியோரும் இடம்பெறுகின்றனர். (பக்.14)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

# துருக்கியின் பயணம் முன்மாதிரியாக அமையட்டும்

துருக்கியின் மறுமலர்ச்சிக்கு முன்னோடியாய் காணப்பட்ட அந்நாட்டின் முன்னாள் பிரதமரும் துருக்கி ஆட்சி பீடத்தின் புத்தி ஜீவிகளுக்கு தலைமை வகிக்கின்ற வருமான கலாநிதி அஹமத் தாவூத் ஒக்லூ, பாக்கிர் மாக்கார் நினைவுப் பேருரையை நிகழ்த்த கடந்த தினம் இலங்கை வந்திருந்தார். இலங்கைக்கும் எமக்கும் காட்டிய அன்பான, கௌரவமான தருணமாக நாம் அதை கருதுகின்றோம். அதனை முன்னிட்டு இப்பத்தியை வடிவமைக்கின்றேன்.

ஜனநாயகத்திற்கான போராட்டங்களை சூழ்ச்சிகளின் மூலம் ஒடுக்கி வருவதனை நாம் மத்திய கிழக்கு வலயத்திற்குள் அண்மைக் காலமாக கண்டு வருகின்றோம். ஒன்றில் இவை வெளிநாடுகளின் தலையீடு. அல்லது அவற்றின் தாக்கங்களால் இராணுவத் தலையீடுகளால் இடம்பெறுகின்ற அடக்குமுறைகளாக இருக்கும்.

அண்மையில் இடம்பெற்ற அரபு வசந்தத்தினூடாக பல நாடுகளில் இடம்பெற்ற ஜனநாயகப் போராட்டங்களும் இவ்வகையில் ஒடுக்கப்பட்டதனை நாம் அவதானித்து வந்தோம். அல்ஜீரியா, எகிப்து போன்ற நாடுகளில் இந்நிலையை கண்டுகொள்ள முடிந்தது. தூனீசியா, துருக்கி போன்ற நாடுகளிலும் கண்டோம். பலஸ்தீனிலும் கண்டு வருகிறோம். மக்கள் உரிமைகளை சதாவும் அடிப்படுத்திவிட முடியாது என்பதை இன்று தூனீசியாவும் துருக்கியும் காண்பித்துக் கொண்டுள்ளன.

குறிப்பாக இன்று துருக்கி வெளிநாட்டுத் தலையீடுகளையும் இராணுவச் சூழ்ச்சிகளையும் முறியடித்து மக்கள் எதிர்பார்ப்புக்களை மையமாகக் கொண்ட சவால் மிக்கதொரு பயணத்தில் ஈடுபட்டு வருகின்றது. இஸ்லாமியப் பெரும்பான்மை நாடாக இல்லாவிட்டாலும் கூட இஸ்லாமிய பெறுமதிகளுடன் கூடிய ஆட்சியின் முன்மாதிரியை உலகிற்கு காண்பித்துக்கொண்டுள்ளது.

இன்று உலகில் அதிகளவிலான அகதிகளை பொறுப்பேற்றுள்ள நாடாக துருக்கி காணப்படுகிறது. 2.7 மில்லியன் அளவிலான அகதிகளை துருக்கி பொறுப்பேற்றுள்ளது. இது அந்நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய சுமையாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. என்றாலும் உலகில் தலாவீத வருமானத்தில் கூடுதலான சதவீதத்தை மனிதாபிமான உதவிப் பணிகளுக்கு ஒதுக்கும் நாடாக துருக்கி உள்ளது. Global Humanitarian Assistance இன் அறிக்கைப்படி, 2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் 6 பில்லியன் ரூபா நிதியை மனிதாபிமான உதவிப் பணிக்கு துருக்கி ஒதுக்கியுள்ளது.

தேசிய வருமானத்தில் கூடுதலான சதவீதத்தை மனிதாபிமான நிவாரணப் பணிகளுக்கு ஒதுக்கும் நாடுகளின் பட்டியலில் துருக்கி முதலிடத்தில் உள்ளது. (World Humanitarian Summit) உலக மனிதாபிமான உச்சி மாநாட்டினை முதன் முதலில் 2016 ஆம் ஆண்டு மே மாதம் 23 - 24 ஆம் திகதிகளில் நடாத்திய நாடாக துருக்கி காணப்படுகின்றது. 1980 ஆம் ஆண்டு முதல் வருடந்தோறும் 67 மில்லியன் டொலர்களை அபிவிருத்தி உதவித் தொகையாக உலகின் முன்னேறிய நாடுகளில் பல்வேறு திட்டங்களுக்காக வழங்கி வருகின்றது.

தற்போது துருக்கியை ஆட்சி செய்கின்ற நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி (Justice and Development Party- (Ak parti in turkey)) 2001 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததன் பின்பு மேற்படி செயற்பணிகள் பரந்துபட்ட அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வருவதனை காண முடிகின்றது. தற்பொழுது துருக்கி 6 பில்லியனுக்கும் அதிக தொகையை வருடாந்தம் உலகம் முழுவதிலும் உள்ள வறிய நாடுகளுக்கு வழங்கி வருகின்றது.

மேற்படி உதவிகள் உலகின் சகல பகுதிகளுக்கும் எவ்வித வேறுபாடுகளுமின்றி பிரிந்து செல்வது சிறப்புக்குரிய விடயமொன்றாக உள்ளது. சோமாலியா, பாகிஸ்தான், லிபியா, லெபனான், பலஸ்தீன் போன்ற நெருக்கடிகளுக்கு உட்பட்டு வருகின்ற நாடுகள் இவ்வுதவிகளை பெற்றுள்ளன. வறிய நாடுகளிலுள்ள ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு துருக்கி புலமைப் பரிசில்களை வழங்கி வருகின்றது. விடுமுறைக் காலங்களில் இம்மாணவர்களுக்கு தொழில்களில் ஈடுபடுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. சிரிய யுத்தத்தில் இடம்பெயர்ந்து வந்த அகதிகள் துருக்கி நாட்டிற்குள் 4000 இற்கும் அதிகமான வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதற்குத் தேவையான சுதந்திரத்தையும் வசதிகளையும் துருக்கி அரசாங்கம் வழங்கியுள்ளது.

பலஸ்தீனுக்கு எதிரான இஸ்ரேலின் அடக்குமுறைகளுக்கு எதிராகவும் மியன்மாரில் ரோஹிங்கிய முஸ்லிம்களுக்கு எதிரான முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வன்முறைகளுக்கு எதிராகவும் சர்வதேச முஸ்லிம் பெரும்பான்மை நாடுகள் குரல் எழுப்பாத போதும் துருக்கி துணிச்சலாக அவற்றுக்கெதிராக குரல் எழுப்பி வருகின்றது. அகதிகளாக வருகின்ற மக்களை தரிசித்து அவர்களின் சுக துக்கங்களை விசாரித்து அம்மக்களுக்கு தேவையான வசதிகளை கொடுத்து வருகின்றது.

துருக்கியின் சிறப்புக்குரிய ஒட்டோமன் பேரரசு பல்லின மக்களை ஐக்கியப்படுத்தி ஸ்பெய்னை ஆட்சி செய்த விதம் தொடர்பில் வரலாற்றுக் குறிப்புக்களில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அன்று ஸ்பெயின் மாத்திரமல்ல. ஒட்டோமன் பேரசுக்குள் ஆசியா, ஆபிரிக்க ஐரோப்பிய கண்டங்களை சேர்ந்த பல நாடுகள் உள்வாங்கப்பட்டிருந்தன. ஹங்கேரியா, கிரேக்கம், எரித்ரியா, எகிப்து, சைப்ரஸ், பல்கேரியா, பொஸ்னியா, செச்னியா, ஆர்மைனியா, அல்ஜீரியா, அல்பேனியா, ஈராக், ஜோர்தான், கொசோவா, லிபியா, மெசிடோனியா, மொண்டநிக்ரோ, சேர்பியா, சிரியா, தூனிசியா, யுக்ரேன், பலஸ்தீன் போன்ற நாடுகள் அன்று உஸ்மானிய பேரசுக்குள் உள்வாங்கப்பட்டிருந்த நாடுகளாகும். இன்று துருக்கி வரலாற்றில் அதற்கு காணப்பட்ட கௌரவான உரிமைக்கமைய சென்று உலகில் மிகவும் நன்கொடை வழங்கும் நாடென்ற பெயரைப் பெற்றுள்ளது. அவர்கள் சரியான பாதையில் செல்வது மகிழ்ச்சிக்குரிய விடயமாக உள்ளது.

இலங்கையர்களாகிய நாமும் துருக்கியின் அப்பயணம் வெற்றிகரமானதாக அமைய வேண்டும் என பிரார்த்திக்கிறோம்.

# அறிவியலுக்குத் தடையாகவுள்ள மதங்கள் சீர்திருத்தப்பட வேண்டும்

சிந்தனா ரீதியாக இலங்கை பின்னடைந்திருப்பதற்கு, காலம் காலமாகப் பின் பற்றிவரும் மதங்களுக்கு மட்டுமே தமது அறிவை மட்டுப்படுத்திக் கொண்டதுதான் காரணம் என்று நான் நினைக்கிறேன். தீர்க்கதரிசிகளில் சிறந்த கோட்பாட்டை வழங்கியவராக புத்தர் இருந்தாலும், அன்றிலி ருந்து இன்றுவரை அவரது கோட்பாடுகள் குறுகிய வட்டத்திலேயே விளங்கப்பட்டுள்ளன.

பௌத்தம் எல்லா அறிவுகளையும் உள்ளடக்கியது என்று மக்கள் நம்புகிறார்கள். இலங்கையின் 2300 வருட பௌத்த வரலாற்றில் அக்கால அறிவியல் அனைத்தும் பௌத்த மதத்தின் அடியாகவே பிறப்பெடுத்துள்ளன. ஆனாலும் மதத்துக்கு அப்பால் எந்த அறிவியல் நூல்களும் இந்த 2300 வருடங்களிலும் இலங்கையில் படைக்கப்படவில்லை. உலகின் சிறந்த எந்த அறிவியல் நூல்களும் மொழிபெயர்க்கப்படவுமில்லை. மக்களுக்கு அறிவு பெறுவதற்காக இருந்த ஒரே வழி பௌத்த மதம் மட்டும்தான்.

உலகில் புத்தர், கன்பூசியஸ் போன்ற தீர்க்க தரிசிகள் தோன்றியிருக்கிறார்கள். சோக்ரடீஸ், பிளேட்டோ, ஆகிமிடீஸ், அரிஸ்டோட்டில் போன்ற பல்வேறு துறைசார்ந்த அறிவியலாளர்கள் உருவாகியிருக்கிறார்கள். இவர்களில் புத்தரை மட்டுமே இலங்கையர் பன்னெடுங்காலமாகத் தெரிந்து வைத்திருந்தார்கள். இந்த நிலையில் பௌத்தத்தையும் அதனை விடக் குறைந்த அளவில் இந்து மதத்தையுமே இலங்கையர் அறிந்து வைத்திருந்ததனால் ஆன்மீக அறிவு மேலோங்கி உலகாயுத அறிவு குன்றியிருந்ததன் விளைவாக இலங்கையில் சிந்தனா ரீதியான மாற்றங்களும் அதனடியான வளர்ச்சிகளும் ஏற்படவில்லை.

### காலாம சூத்திரம்

பௌத்த மதத்திலிருந்து அறிவையும் கோட்பாடுகளையும் பெறுவதற்குப் பதிலாக பக்தியையும் வழிபாடுகளையுமே இலங்கை பெற்றுக் கொண்டது. காலாம சூத்திரம் இதற்குச் சிறந்த உதாரணம். தன்னில் சரியானதெனக் காணும் விடயங்களையே பின்பற்ற வேண்டும் என காலாம சூத்திரம் கூறுகிறது. யாரோ சொல்கிறார்கள் என்பதற்காக, பாரம்பரியங்களைப் பின்பற்றாமல், எதையும் தீர்க்கமாக அறிந்த பின்பே பின்பற்ற வேண்டும் என இது சொல்கிறது. 19 ஆம் நூற்றாண்டிலேயே இந்தச் சூத்திரம் அறியப்பட்டதாகவும், ஆனாலும் இன்று வரை இதன் முக்கியத்துவம் சமூக மட்டத்தில் உணரப்படவில்லை எனவும் லெஸ்லி குணவர்தன குறிப்பிடுகிறார்.

அறிவுலகுடன் தொடர்பில்லாத மத உலகிலேயே இலங்கை நீண்ட காலம் வாழ்ந்துள்ளது. ஒரு சிலருக்கு மாத்திரமே பிரிவெனாக்களில் கற்கின்ற சந்தர்ப்பம் கிடைத்தாலும் அதிலும் மொழியும் பௌத்தமும் மட்டுமே போதிக்கப்பட்டது. பிரித்தானியர் இலங்கையை ஆக்கிரமித்த பின்னர் புதிய உலகின் கல்வி முறைகள் நமக்குக் கிடைத்தன. இவர்களும் தமது கல்வி முறைக்கூடாக மதத்தைப் புகுத்தினாலும் இவர்கள் ஏனைய கலைகளையும் நமக்குக் கற்பித்தார்கள். இதனூடாகவேனும் படிமுறை வளர்ச்சியொன்றைக் காண்பதற்கு இலங்கைச் சமூகம் தவறிவிட்டது.

### மொழி மாற்றக் கலை

தேசங்களின் வளர்ச்சியில் அடுத்த மக்களிட மிருந்து படிப்பினை பெறுவது முக்கியமானது. உலகில் வெளியிடப்படும் சிறந்த புத்தகங்களை தமது மொழியில் மொழிமாற்றம் செய்து வெளியிடும் வழக்கம் ஜப்பானில் இருக்கிறது. இவற்றினூடாக இவர்கள் ஐரோப்பாவின் அறிவியலை உள்வாங்கிக் கொள்கிறார்கள். இவ்வாறுதான் இப்னு ருஷ்த் (1126-98) மூலமாக கிறிஸ்தவ உலகம் அரிஸ்டோட்டலை அறிந்து கொண்டது.


அரிஸ்டோட்டலுடைய கோட்பாடுகளையும் அறிவியலையும் விளங்கிய இவர் லத்தீன் மொழியில் அவரை அறிமுகப்படுத்திய பின்னர்தான் கிறிஸ்தவ உலகம் அவருடைய முக்கியத்துவத்தை அறிந்து கொண்டது. ஐரோப்பாவின் மறுமலர்ச்சிக் காலத்தில் அதிகம் பேசப்பட்டவராக அரிஸ்டோட்டில் மாறினார். நவீன அறிவியல் இப்படித்தான் ஓரிடத்தில் உருவாகி மொழிமாற்ற கலையினூடாக வேறோர் இடத்தில் வளர்ச்சியடைகிறது.




### தேக்கநிலை

பிரித்தானியர் காலம் வரை உலகில் நடப்பவை எதுவுமே தெரியாத இருண்ட உலகிலேயே இலங்கை இருந்தது. இத்தாலியில் தொடங்கி ஐரோப்பாவில் வியாபித்த மறுமலர்ச்சி ஊடாக உலகம் மாறி வருவதை இங்கிருப்பவர்கள் உணரவில்லை. மக்கியவல்லி, கொப்பனிகஸ், கெப்லர், கலீலியோவின் கண்டுபிடிப்புக்களால் உலகில் நடந்த முன்னேற்றங்கள் இலங்கையருக்குத் தெரியவில்லை. பெரும் பெரும் தத்துவ ஞானிகளது சிந்தனைகளும் அறிவியல் ஆராய்ச்சியாளர்களது கோட்பாடுகளும் அடங்கிய நூல்கள் எதுவும் இலங்கையை வந்தடையவில்லை.

இவ்வாறான காலப்பிரிவில் இலங்கையில் பன்சீய பனஸ் ஜாதக, தலதா சிரித்த என மத நூல்களே ஆக்கரமித்திருந்தன என்பதில் இருந்து ஐரோப்பாவின் மறுமலர்ச்சியில் இருந்து இலங்கை எவ்வளவு தொலைவில் இருந்திருக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.


அநகாரிக தர்மபால


ஆறுமுக நாவலர்

பிரித்தானியர் காலத்தில் இலங்கையில் சிவில் சேவைகளில் ஈடுபட்டிருந்த பிரித்தானியர்களுக்கு, சிங்கள,தமிழ் மொழிகளைப் படிப்பது கட்டாயமாக்கப்பட்டிருந்தது. இந்த மொழிகளில் தேர்ச்சி பெறாதவர்களுக்கு பதவி உயர்வுகள் தாமதப்படுத்தப்பட்டதோடு, சிங்கள தமிழ் மொழிப் பரீட்சையில் மூன்று தடவைகள் சித்தியடையத் தவறியர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டுமிருக்கிறார்கள். ஆங்கிலேயரான ஜோன் டொய்லி கரதொட நாயக்க ஹிமியிடம் சிங்களம் கற்றிருக்கிறார். அதற்காக வெற்றிலை சாப்பிட்டிருக்கிறார். கஜமன் நோநாவுடன் தொடர்பு வைத்துக் கொண்டு தமது உரையாடலை கவிதையிலேயே தொடர்ந்துமிருக்கிறார்.

இலங்கையின் பண்டைய நாகரிகங்கள், இராஜதானிகள், தொல்பொருள் நிலங்கள், வழிபாட்டுத் தளங்கள் அடங்கிய வரலாறுகளையெல்லாம் இவர்கள் எழுதியிருக்கிறார்கள். இவற்றுக்கு ஆங்கிலேய அரசு உதவியுமிருக்கிறது. இலங்கையில் சிவில் சேவையில் கடமையாற்றியவர் அல்லாவிட்டாலும், மகாவம்சம் தொடர்பிலான பணியை அவருக்கு ஆங்கிலேய அரசே விதித்திருக்கிறது. இந்த மகாவம்சத்தை சிங்களத்தில் மொழிபெயர்க்கும் பணியை ஆங்கிலேய அரசே ஸ்ரீ சுமங்கல தேரருக்கு வழங்கியதோடு அதனை வெளியிட்டும் வைத்தது. இந்த வகையில் இலங்கையருக்கு ஆங்கிலேயர்கள் தான் தேசப்பற்றையும் ஊட்டியிருக்கிறார்கள்.

### தவறுதல்

ஆங்கிலேயரிடமிருந்து பாதி அறிவைப் பெற்றுக் கொண்ட சுதேச அறிவுஜீவிகள், இலங்கையின் வரலாறு தொடர்பில் பிரித்தானியர் வெளிப்படுத்திய விடயங்களை தவறான கோணத்தில் உள்வாங்கினார்கள். உலக நாகரிகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பில் போதிய அறிவு இல்லாதமையினால் இலங்கையரின் பாரம்பரியம், பண்பாடுகள் தொடர்பில் ஆங்கிலேயர் சுட்டிக் காட்டிய விடயங்களை வைத்து உலகிலேயே உயர்ந்த நாகரிகத்தை உடையவர்கள் தாங்கள் தாம் என இவர்கள் மார்தட்டிக் கொண்டார்கள்.

போதாக்குறைக்கு, உலகில் உள்ள எல்லா இனங்களையும் விட சிங்கள இனமே உயர்ந்தது என்று கருதி அதனைப் பரப்பத் தொடங்கினார்கள். இந்தப் பெரஹராவை வழிநடத்திய முதன்மையானவராக அநகாரிக தர்மபால விளங்குகின்றார். குமாரதுங்க முனிதாசவும் இவருடன் இணைந்து கொண்டார்.

தர்மபாலவைப் பொறுத்தவரை சிங்கள இனமும், சிங்கள நாகரிகமும், சிங்கள மொழியும் தான் உலகில் சிறந்தவைகள். குமாரதுங்க முனிதாசவைப் பொருத்தவரை, இலங்கை என்பது ஆபிரிக்காவின் மடகஸ்கார் வரை விரிந்தது. நட்சத்திரங்களும் சூரியர்களுமே அதனை ஆண்டிருக்கின்றன. தாரகைகளே, உங்களது காலத்தில் சுவனமாக இருந்த இலங்கை..., சூரியர்களே, உங்களது காலத்தில் சொர்க்கபுரியாக இருந்த இலங்கை... என அவர் குறிப்பிட்டதாக லக்மினி பஹன பத்திரிகையின் 1934, செப்டம்பர் 14 ஆம் இதழின் ஆசிரியர் கருத்தில் எழுதப்பட்டுள்ளது.

இந்தக் கருத்துக்களின் காரணமாகவே அடுத்தவர்களை இழிவாகப் பார்க்கும் உணர்வு இலங்கையரிடம் தோற்றம் பெற்றது. இது இலங்கையர் மத்தியில் சிந்தனா ரீதியான வளர்ச்சி குன்றியதால் வந்த விளைவாகும். குலபேதத்தைத் தவிர மத, இன, மொழி பேதங்கள் எல்லாம் அண்மையில் முளைத்தவைகளே. இதற்கு வித்திட்டவராகவே அநகாரிக தர்மபால விளங்குகிறார்.

### மதச் சீர்திருத்தமும் விடுதலையும்

இலங்கை மக்களின் சிந்தனா ரீதியான வறுமைக்கும் சமயச் சீர்திருத்தத்துக்கும் பலமான தொடர்பிருக்கிறது. இதனைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு, இலங்கையின் இந்து சமய இயக்கத்தின் ஆறுமுக நாவலர், பௌத்த சமய இயக்கத்தின் அநகாரிக தர்மபால ஆகிய இருவரையும், இந்தியாவின் சமயச் சீர்திருத்த இயக்கத்தின் தலைவர்களான ராஜ்ராம் மோகன் ராய், சையித் அஹமத் கான் ஆகிய இருவருடனும் ஒப்பிட்டுப் பார்ப்பது பொருத்தமாக அமையும்.

இந்த இரு இந்தியத் தலைவர்களும், ஐரோப்பிய மறுமலர்ச்சியின் அறிவியல் புரட்சியை புரிந்து வைத்திருந்ததோடு, மதத்துக்கு அப்பால் அறிவியல் கலைகளையும் அறிந்தவர்களாக இருந்தனர். இவர்கள் இருவருமே தமது மதம் மட்டுமே இருக்க வேண்டும், ஏனைய மதங்களை அழித்து விட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதோடு, பல்வேறு மதங்களுக்கிடையில் சகவாழ்வைப் பேணும் வகையில் தமது மதங்களில் இருந்த சில விடயங்களையும் இதற்கென விட்டுக் கொடுக்கும் அறிவு படைத்தவர்களாக இருந்தார்கள்.

ஆனால் ஆறுமுகம் நாவலரும், அநகாரிக தர்மபாலவும் இப்படி விரிந்து கொடுக்கவில்லை. நாவலர் சாதி முறையை உள்வாங்கியது போல, தர்மபால அதனைச் சகித்துக் கொண்டார். வெளியில் இருந்து வரும் அச்சுறுத்தல்களில் இவர்கள் கவனம் செலுத்தியதேயல்லாமல், தத்தமது சமயங்களைச் சீர்திருத்த இவர்கள் முன்வரவில்லை. தர்மபால அடுத்த மதங்களை எதிரியாகவே கருதினார். சிங்கள பௌத்தர்கள் அல்லாதவரை பிறப்பதற்கே உரிமையற்ற அசூசைகளாகவே கருதினார்.

இதற்குப் பின்னர் வருகின்ற இலங்கையின் சுதந்திரத்துக்கான இயக்கமும் இந்தச் சிந்தனை வரட்சியைப் பிரதிபலிப்பதாகவே இருந்தது. இந்தியாவைப் போன்ற முற்போக்கான சிந்தனைகள் இலங்கையின் சுதந்திர இயக்கத்தில் இருக்கவில்லை. அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதை மட்டுமே அது இலக்காகக் கொண்டிருந்தது. தேசிய அரசாங்கமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான ஆயத்தங்களுடன் இந்தியா சுதந்திரம் பெற்றபோது, இலங்கை தேசியத்தைக் கட்டியெழுப்பாத நிலையிலேயே சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டது.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லா சமூகங்களையும் திருப்திப்படுத்தக்கூடிய அரசியல் முறையொன்று தேவையாக உள்ளது

**சிராஜ் மஷ்ஹூர் - பிரதித் தவிசாளர், நல்லாட்சிக்கான தேசிய முன்னணி**

அரசியலமைப்பு உருவாக்கம், அதன் தாமதம், அதன் உள்ளீடுகள், 20 ஆவது அரசியலமைப்பு திருத்தம், வடகிழக்கு இணைப்பு ஆகிய சமகாலத்தின் மிக முக்கிய தலையங்கங்கள் தொடர்பில் அரசியல் விமர்சகரும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் பிரதித் தவிசாளருமான சகோதரர் சிராஜ் மஷ்ஹூருடன் மீள்பார்வை பத்திரிகைக்கு விரிவானதொரு நேர்காணலை மேற்கொண்டிருந்தோம். அதன் தொகுப்பு இங்கு தரப்படுகின்றது.

நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி



- **புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுவதன் நோக்கங்கள் என்ன?**

அரசியலமைப்பு மாற்றத்தினை இரண்டு வகையாக நோக்கலாம். அரசியலமைப்பு மாற்றம் அடிப்படையில் எதற்குச் செய்யப்படுகின்றது என்பது முதலாவது விடயம். அது இனப்பிரச்சினை தீர்வுடன் நேரடியாக தொடர்புபடுத்தப்படுகின்றது. இரண்டாவது, நாட்டின் தற்போதைய அரசியலமைப்பிலுள்ள குறைபாடுகளை நீக்கி புதியதோர் அரசியல் கலாசாரத்திற்கான தீர்வு காணல் என்கின்ற விடயம்.

யாருடைய அபிலாஷைகளை இந்த அரசியலமைப்பு நிறைவுசெய்யப் போகின்றது என்பதே பிரச்சினைக்குரிய விடயம். அது தமிழ் சிங்கள மக்களது பொதுவான இனப்பிரச்சினை பற்றிய பார்வையிலிருந்து வந்தால் அது ஆபத்தானது. இலங்கையில் 4 சமூகங்கள் தங்களை அரசியல் வகையினமாக பிரகடனப்படுத்தியுள்ளன. ஏனைய சிறுபான்மைச் சமூகங்கள் தங்களை அரசியல் ரீதியாக தனித்து அடையாளம் காட்டவில்லை.

இந்த அரசியல் ரீதியாக அடையாளம் காட்டிய சமூகங்களினுடைய அபிலாஷைகள் தொடர்பில் யாப்பில் கூடுதல் அவதானம் செலுத்தப்பட வேண்டும். அதேநேரம் சிறு சமூகங்கள் என்கின்ற விடயமும் கவனத்திற் கொள்ளப்பட்ட வேண்டும்.

- **புதியதொரு யாப்பு எவ்வாறான காரணங்களுக்காக வேண்டி உருவாக்கப்பட வேண்டியுள்ளது?**

இந்தியாவை எடுத்துக் கொண்டால் சுதந்திரத்திற்கு பின்னர் அம்பேத்கார் வரைந்த யாப்பு மாத்திரமே அங்கு பல திருத்தங்களுடன் அமுலில் உள்ளது. இலங்கையை பொறுத்தவரையில் சுதந்திர காலப்பகுதியில் பிரித்தானியர் உருவாக்கிய சோல்பரி யாப்பு அமுலில் இருந்தது. சுதந்திரத்திற்கு பின்னர் முதலாம் குடியரசு யாப்பு, இரண்டாம் குடியரசு யாப்பு வரையப்பட்டன. அந்தந்த கட்சிகள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றிருந்தமையே இவ் யாப்புக்கள் உருவாக காரணமாக அமைந்தது. மூன்றில் இரண்டு பெரும்பான்மையின் பின்னணியிலேயே இவ்விடயங்களை நிறைவேற்றினார்களே தவிர, நாட்டு மக்களின் அபிலாஷைகளை கலந்து பேச வேண்டும் என்ற விடயத்தில் குறைபாடுகள் காணப்பட்டன.

1972 ஆம் ஆண்டு யாப்பின் பின்னணியில் முக்கியமாக என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர்.டி. சில்வா போன்ற முக்கியமான இடதுசாரிகள் இருந்தாலும் கூட பௌத்தத்திற்கு முதன்மை ஸ்தானம் கொடுத்தது போன்ற சர்ச்சைக்குரிய விடயங்கள் இந்த யாப்புக்கூடாக மேலெழுந்தன. 1978 யாப்பும் இனப்பிரச்சினை, ஜே.வி.பி. கிளர்ச்சி போன்ற பின்னணியில் வந்த யாப்பாகவும் ஜேஆரின் தனிப்பட்ட விருப்பங்கள், ஐ.தே.க.வின் நலன்கள் என்கின்ற பார்வையிலேயே இது உருவானது.

தற்போதைய நிலைமை முன்பை விடவும் வித்தியாசமானது. 30 வருட சிவில் யுத்தம் இந் நாட்டில் நடந்து முடிந்துள்ளது. இரண்டு ஜே.வி.பி. கிளர்ச்சிகள் நடந்துள்ளன. சிறுபான்மை சமூகம் என்ற வகையில் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் அபிலாஷை பற்றிய கவனம் நாட்டில் அதிகரித்துள்ளது. மலையக தமிழர்கள் அரசாங்கத்தின் பங்காளிகளாக வந்து இன்று மலையக தமிழர்களின் பிரச்சினைகள் பார்க்கப்பட வேண்டும் என்ற விடயங்கள் மேலெழுந்துள்ளன. கலாசாரச் சிறுபான்மையினர் என்போர் உதாரணத்திற்கு ஆதிவாசிகள், மேமன்கள், மலாயர்கள், செட்டி போன்றோர் தொடர்பாகவும் விரிவான பார்வை தேவைப்பட்டுள்ளது.

- **புதிய அரசியலமைப்பு உருவாக்கப் பணிகள் தற்பொழுது எவ்வாறான நிலையிலுள்ளது?**

அரசியலமைப்பு மாற்றம் என்பதில் முதலாவது விடயம், அரசியல் விருப்பு என்பது இந்த அரசாங்கத்திடம் காணப்பட வேண்டும். அப்படியொன்று இருப்பதாகத் தேர்தலின் போது அறிவித்தார்கள். நாட்டின் அரசியல் முறையில் ஒரு மிகப் பெரும் மாற்றம் தேவை என்கின்ற விடயத்தை நாம் அங்கு வலியுறுத்தினோம். ஆனால் முதற் தடவையாக மக்கள் கருத்தறியும் குழுவொன்று நியமிக்கப்பட்டு மக்கள் கருத்துக்கள் நாடளாவிய ரீதியில் திரட்டப்பட்டன. மக்கள் சமர்பித்த விடயங்களில் குறைபாடுகள் உள்ளன. ஆனால் அச்செயன்முறை நடந்து முடிந்து ஒரு அறிக்கையும் வெளியிடப்பட்டது.

அதுவொரு செயற்பாடாக இருக்கும்போது அரசாங்கத்திலுள்ள முக்கியமான கட்சிகள் மற்றும் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய குழுக்களை இணைத்து அரசியலமைப்பு வழிப்படுத்தல் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அவர்கள் இணைந்து சில விடயங்களை கலந்துரையாடி வருகிறார்கள். ஆனால் கலந்துரையாடப்படுகின்ற விடயங்கள் நாட்டில் பகிரங்க விவாதத்திற்கு வருவதில்லை. பாராளுமன்றத்தில் சில குழுக்கள் நியமிக்கப்பட்டு அதன் அறிக்கைகள் முன்வைக்கப்பட்டதே ஒழிய சர்ச்சைக்குரிய விடயங்கள் தொடர்பாக யாரும் பகிரங்கமாக பேசுகிறார்களில்லை.

- **அரசியலமைப்பு உருவாக்கத்தில் கலந்துரையாடப்படாத சர்ச்சைக்குரிய விடயங்கள் தொடர்பில் சற்று தெளிவுபடுத்த முடியுமா?**

உதாரணத்திற்கு வடகிழக்கு இணைப்பு எனும் பிரச்சினை, ஜனாதிபதியின் அதிகாரத்தை மட்டுப்படுத்துவதன் எல்லை என்ன என்கின்ற விடயம், மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்தல், ஆட்சி அரசினுடைய தன்மை போன்ற நீண்ட காலமாக விவாதத்திற்கு உட்படுத்தப்பட்டு வந்த விடயங்கள் உள்ளன. இவை தொடர்பாக இவர்கள் மக்களுக்கு பதிலளிக்க கூடிய வகையில் நடந்துகொள்வதில்லை. அரசாங்கத்தை கொண்டு செல்லும்போது இவ்விடயங்களை பகிரங்கமாகப் பேச முடியாது என்றாலும் கூட, அச்செயன்முறை முடியும் வரையில் நீண்டு கொண்டு செல்வதா? என்றொரு கேள்வி உள்ளது.

அரசினுடைய தன்மை எனும் விடயம் நீண்ட காலமாக விவாதத்திற்கு உட்பட்டு வந்தது. இந்திய இலங்கை ஒப்பந்தமே இலங்கை அரசினுடைய தன்மையில் முதலாவது மாற்றத்தை ஏற்படுத்தியது. முழுமையானதொரு ஒற்றையாட்சியில் இருந்த இலங்கை அரசு முதன் முறையாக ஒரு மாகாண சபை கட்டமைப்பிற்குள் போய் ஏதோ ஒரு வகையில் சமஷ்டி பண்பை எடுத்தது.

- **அரசியலமைப்பு உருவாக்கம் தாமதமடைவதற்கான காரணங்கள் என்ன?**

அதிகாரங்கள் ஓரிடத்தில் குவிவதை விட அதிகாரங்கள் மாகாணங்களுக்கு பகிரப்பட வேண்டும். அதற்குப் பின்னால் ஒரு நீண்ட போராட்டம் நடந்துள்ளது. அதுவல்லாமல் வெறுமனே ஒற்றையாட்சி எனப் பேசுவது இன்றைய சூழலில் எவ்வளவு தூரம் பொருத்தமாகின்றது என்கின்ற கேள்வி உள்ளது.

இது சிங்கள பௌத்தர்களுக்குரிய நாடு. அவர்களுடைய அபிலாஷைகளுக்குட்பட்டே மற்றதெல்லாம் பார்க்கப்பட வேண்டும் என்கின்ற வாதம் உள்ளது. அப்படியல்லாமல் சிறுபான்மை சமூகத்தின் அபிலாஷைகளும் உள்ளடக்கப்பட வேண்டும் என்கின்ற பார்வையும் உள்ளது. இவ்விரண்டு பார்வைகளுக்கிடையிலேயே நீண்ட காலப் போராட்டம் நடந்து வருகிறது. பிரதான அரசியல் கட்சிகள் இரண்டும் தீர்க்கமான முடிவுக்கு வருவதில் தயக்கம் காட்டி வருகிறார்கள். அதுவே தீர்வுகளுக்கான தாமதமாக உள்ளது.

இலங்கையை பொறுத்தமட்டில் எல்லா சமூகங்களையும் திருப்திப்படுத்தக் கூடிய அரசியல் முறையொன்று தேவையாக உள்ளது. அதைச் செய்வார்களா? என்கின்ற சந்தேகம் உள்ளது. உள்ளூராட்சி சபை வட்டாரப் பிரிப்பில் கொண்டு வந்த சட்டத்தை அதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இச்சட்டத்தில் சிறுபான்மை சமூகத்திற்கு பாரபட்சம் இழைக்கப்பட்டுள்ளது.

வட்டாரப் பிரிப்பை இன ரீதியாக பிரிக்க வேண்டும் என நான் விவாதிக்கவில்லை. ஆனால் பல பிரதேசங்களிலுள்ள சிறுபான்மை மக்கள் தாம் முன்வைத்த விடயங்கள் கவனத்திற் கொள்ளப்படவில்லை என கவலை தெரிவிக்கிறார்கள். தேர்தல் முறையும் பலத்த விவாதங்களுக்கு உட்படுத்தப்பட்டு [illegible] தேர்தலில் அது பரீட்சார்த்தமாக முன்வைக்கப்பட்டுள்ளது.

கலப்பு தேர்தல் முறைக்கு நாம் செல்வதாக இருந்தால் அது ஜேர்மன், நியூசிலாந்து என பல நாடுகளை உதாரணத்திற்கு எடுக்கப்பட்டாலும் அந்தந்த நாடுகளுக்குரிய தனித்துவமான விடயங்களும் உள்ளன. இலங்கைக்கான விடயம் என்ன என்பதை தீர்மானிப்பதற்குரிய உரையாடலுக்கான வாய்ப்புகள் இன்னும் அகலத் திறக்கப்படவில்லை.

- **புதிய அரசியலமைப்பு பணிகள் நிறைவு பெற எவ்வளவு காலம் எடுக்கும்?**

பல சந்தர்ப்பங்களில் இது அவசரமாக கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்படும் என சொல்லப்பட்டு வந்தது. பொது எதிரணி தற்பொழுது சில விடயங்களை சவாலுக்குட்படுத்தியுள்ளது. குறிப்பாக அஸ்கிரிய போன்ற பௌத்த பீடங்களால் வந்துள்ள நெருக்கடிகள், அதில் ஒரு பிரதிபலிப்பாக சம்பந்தன் அவர்களை சந்தித்துள்ளதையும் நாம் அவதானித்தோம். இப்படி வேறு வகையான அழுத்தங்கள் வந்து கொண்டுள்ளது. அதனால் இது இழுத்தடிக்கப்படுவதற்கான வாய்ப்புள்ளது. என்றாலும் சில நேரம் வேகம் வேகமாக கொண்டு வந்து நிறைவேற்றக்கூடிய சாத்தியங்களும் உள்ளன. இந்த நிச்சயமின்மை அரசியலில் தொடர்ந்து கொண்டேயுள்ளது.

2020 இல் அடுத்த பாராளுமன்றத் தேர்தல் இடம்பெற முன்னர் எப்படியாவது இதை நிறைவேற்ற வேண்டும் என்பதில் அரசாங்கம் அக்கறையுடன் உள்ளது. என்னென்ன திருத்தங்கள் வரப் போகிறது என்பதில் சிக்கல் உள்ளது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற முடியுமான சாத்தியங்கள் அரசுக்கு உள்ளது.

இந்த அரசியலமைப்பை வரைவதில் டாக்டர் ஜயம்பதி விக்ரமரத்ன தலைமையில் குழுவுள்ளது. அவர் அரசியலமைப்பு துறையை சேர்ந்தவர். இடதுசாரி போக்குடையவர் என்பதால் அவர் சில விடயங்களை செய்வார் என்ற நம்பிக்கை இருந்தாலும் அவரை மீறியே இந்த அரசியல் தீர்மானங்கள் எடுக்கப்படுகிறது.

- **அண்மைக்காலமாக வடகிழக்கு இணைப்பு குறித்த பேச்சுக்கள் அரசியல் மேடைகளில் முன்வைக்கப்பட்டு வருவதை காண முடிகின்றது. வடகிழக்கு இணைப்பு குறித்த உங்களது நிலைப்பாடுகள் என்ன?**

வடக்கும் கிழக்கும் வரலாற்றில் ஒருபோதும் இணைந்திருந்த சரித்திரங்கள் கிடையாது. இலங்கை மன்னராட்சி முறையின் கீழ் இருந்தது. முழு இலங்கைத் தீவும் ஒரு ஆட்சி முறைக்கு வரவில்லை. 1815 இல் பிரித்தானியர் கண்டி இராச்சியத்தை கைப்பற்றியதன் பின்னரே முழு இலங்கையும் ஒரு நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. யாழ்ப்பாண இராச்சியம், நல்லூர் இராசதானி என்றெல்லாம் பேசினாலும் அது கிழக்கு மாகாணத்துடன் இணைந்த வரலாறுகள் இல்லை.

கிழக்கு மாகாணம் கண்டி இராச்சியத்திற்கு உட்பட்டிருந்தது. தாயகக் கோட்பாடு எனப் பேசுகின்ற, வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழர் [illegible] கொண்டு (பக்.14)




அபூ ஷாமில்

## அறுபடாத கத்திகள்

நபி இஸ்மாயீலை அறுத்து விட்டு மிம்பர்கள் ஓய்ந்து போயிருக்கின்றன. ஒவ்வொரு சீசனுக்கும் ஒவ்வொரு தலைப்பு என்று வகுத்துக் கொண்டுள்ள ஸ்டீரியோ குத்பாக்கள் இனி முஹர்ரம் புத்தாண்டைப் பற்றியும் ஆசூராவைப் பற்றியும் ஆஸாக் கோல்களை உயர்த்திப் பிடிக்கப் போகின்றன.

ரமழானிலே அல்குர்ஆனையும் மீலாதிலே நபிகள் நாயகத்தின் மாண்மியத்தையும் ஞாபகப்படுத்துவது பொருத்தமானதுதான். ஆனாலும் ஒவ்வொரு வருடமும் வந்து செல்கின்ற நிகழ்வுகளை ஞாபகப்படுத்துவதற்குப் பின்னால், குறித்த நிகழ்வினை தட்ப வெப்ப சூழலுக்கு ஏற்ப எப்படிப் படைப்பது என்பது பற்றிய அறிவும் கலந்திருக்குமானால் அதன் விளைவே தனி.

நபி இப்ராஹீமுடைய வரலாற்றைச் சொல்வதற்கு ஹஜ்ஜுப் பெருநாள் காலத்தை விடச் சிறந்த சீசன் இல்லை. அவர்களுடைய வரலாற்றில் பல முன்மாதிரிகள் நமக்கு இருப்பதாக அவரைப் படைத்தவன் நமக்குச் சொல்லித் தந்திருக்கிறான். ஆனால் இலங்கையிலுள்ள நமக்கு தொன்று தொட்டு இப்ராஹீம் நபி என்றால் தனது மகனை அறுத்துப் பலியிட முயன்றவர் என்ற கருத்து மட்டுமே மிம்பர்களில் சொல்லப்பட்டு வருகிறது. ஹஜ்ஜுக்குப் போகாதவர்களுக்கு ஹஜ்ஜுப் பெருநாளிலே குர்பானிதான் ஞாபகப்படுத்தப்படுகிறது. காலம் காலமாக இந்த வரலாறு மட்டும்தான் மக்களின் உள்ளங்களிலே பதியப்பட்டு வருகின்றன.

அவருடைய வரலாற்றில் இலங்கைச் சூழலுக்குப் பொருத்தமான பல முன்மாதிரிகளை எமது மிம்பர்கள் ஏன் முன்வைக்கக் கூடாது? சிலைகளை வணங்கிக் கொண்டிருந்த ஒரு சமுதாயத்துக்கு அவர் எப்படி வழிகாட்டினார் என்பதை ஏன் நமது நாட்டு மக்களுக்குச் சொல்லிக் கொடுக்கக் கூடாது? இந்தப் பணியின்போது அவர் எதிர்நோக்கிய சவால்களை தற்காலச் சூழலில் இலங்கை மக்கள் எதிர்நோக்குகின்ற சவால்களுடன் பொருத்தி, சத்தியத்தின் சோதனையை மக்களுக்கு ஏன் எடுத்துக் காட்டக் கூடாது? இம்முறை ஹஜ் காலப்பிரிவில் முஸ்லிம் என்பதற்காகவே ரோஹிங்ய முஸ்லிம்களின் இருப்பிடங்கள் எரியூட்டப்பட்டதனை, நபி இப்றாஹீம் வீசப்பட்ட எரிகிடங்கை ஞாபகப்படுத்துவதற்கு ஏன் பயன்படுத்தி இருக்கக் கூடாது?

உண்மையில் நபி இப்றாஹீம் மூலமாக நமக்கு வழங்கப்பட்டுள்ள ஏராளமான முன்மாதிரிகளை வருடத்துக்கொரு முறையேனும் ஞாபகப்படுத்துகின்ற நிலைக்கு மிம்பர்கள் மாற வேண்டும். காது கிழிகின்ற அளவுக்கு வெளியில் உள்ள அனைத்து மக்களும் கேட்கக் கூடியதாக இப்ராஹீம் நபி தனது மகனை அறுக்க முயற்சித்ததைப் பேசிவிட்டு, போயா தினத்தில் மாடறுக்க வேண்டாம் என்று அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதால் மட்டும் நாட்டில் முஸ்லிம்களைப் பற்றி நல்லெண்ணம் வளரப் போவதில்லை. மாடறுப்பதை மட்டுமன்றி குத்பாக்களில் உரைக்கின்ற விடயங்களையும் நாட்டுச் சூழலுக்கு ஏற்றவாறு உலமாக்கள் அமைத்துக் கொள்ள வேண்டும்.

அந்த வகையில் ஹஜ் எனும் பொழுது ஞாபகப் படுத்தப்பட வேண்டிய ரஸூலுல்லாஹ்வின் இறுதி ஹஜ் பேருரையையும் பரவலாக்குவதற்கான சந்தர்ப்பமாக ஹஜ்ஜுப் பெருநாளை அமைத்துக் கொள்ள முடியும். இறுதி ஹஜ் பேருரை அனைத்துலக மக்களுக்குமான மனித உரிமைச் சாசனமாகவே அடையாளப்படுத்தப்பட முடியும். இது இந்த நாட்டு மக்கள் அனைவரையும் சென்றடைகின்ற விதமாக ஹஜ்ஜுப் பெருநாளை அமைத்துக் கொள்ள முடியும். குத்பாக்களிலும், வாழ்த்து அட்டைகளிலும், சமூக ஊடகங்களிலும் இந்தப் பேருரையைப் பரப்ப முடியும். ரமழானிலே இப்தார் நிகழ்வுகளினூடாக நாட்டு மக்களை இணைக்கும் பணியும், நம்மைப் பற்றி தெளிவு வழங்கும் பணியும் நடப்பது போல, ஹஜ்ஜிலே இந்த மனித உரிமைப் பேருரையை அடுத்தவர்களுக்கும் வழங்கும் பணியை சமூகம் முன்னெடுக்க முடியும்.

ஹஜ்ஜுடைய மகாஸிதையும் அறிஞர்கள் இப்போது பேசி வருகிறார்கள். இவர்கள் மூலமாக ஹஜ்ஜுடைய மகாஸித் தொடர்பிலான தெளிவினைப் பெற்று அவற்றைப் பரவலாக்குகின்ற பணியையும் சமூகம் முன்னெடுக்க முடியும். ஏன், எதற்கு என்று தெரியாமல் செய்கின்ற பல்வேறு விடயங்களையும் இதனூடாக மக்கள் தெளிவு பெற்று நடைமுறைப்படுத்த முடியும்.

ஹஜ் என்பது சர்வதேச எல்லைகளுடன் எங்களையும் பிணைக்கின்றதொரு அருமையான செயற்பாடு. உலகெங்கிலுமுள்ள 1.8 பில்லியன் மக்களின் ஒரு அங்கம்தான் நாங்களும் என்பதையும், எண்ணிக்கையில் நாங்கள் சிறுபான்மை அல்ல என்ற உணர்வையும் நம்மக்களிடையே ஊட்டுவதற்கு மிம்பர்கள் ஹஜ்ஜைப் பயன்படுத்த வேண்டும்.

இந்தளவுக்கு உயிரோட்டமுள்ளதாக, காலத்துக்குப் பொருத்தமானதாக மிம்பர்கள் முழங்கினால்தான் இஸ்மாஈல்களுடைய கத்திகள் அறுபடாமல் காக்க முடியும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சவூதி ஆறேபியாவில் கைதுசெய்யப்பட்டு சிறைவாசம் அனுபவிக்கும் இஸ்லாமிய அறிஞர்களை விடுவிக்க வேண்டுகோள்





சவூதி அறேபியாவில் இஸ்லாமிய பிரச்சாரகர்கள், அறிஞர்கள் தொடர்ச்சியாகக் கைதுசெய்யப்படுவதையும் தடுப்புக் காவலில் வைக்கப்படுவதையும் இஸ்லாமிய அறிஞர்களின் சர்வதேச ஒன்றியம் காரசாரமாகக் கண்டித்துள்ளது.

சல்மான் அல் அவ்தா உள்ளிட்ட, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள அறிஞர்கள், முன்னணி இஸ்லாமிய பிரச்சாரகர்கள், இஸ்லாமிய அறிஞர்களின் சர்வதேச ஒன்றிய உறுப்பினர்கள் என அவ்வமைப்பு தெரிவிக்கின்றது. கடந்த 11 ஆம் திகதி 20 இற்கும் மேற்பட்ட இஸ்லாமிய பிரச்சாரகர்களை சவூதி அதிகாரிகள் கைதுசெய்து தடுப்புக் காவலில் வைத்துள்ளனர்.

கைதுக்கான எந்தக் காரணமும் முன்வைக்கப்படவில்லை. கைதுசெய்யப்பட்டுள்ளோரில் சல்மான் அல் அவ்தா, ஆயிழ் அல் கர்னி, அலி அல் உமரி ஆகியோரும் உள்ளடங்குகின்றனர். 10 ஆம் திகதி சல்மான் அல் அவ்தாவின் சகோதரர் காலித் பின் பஹ்த் அல் அவ்தா தனது சகோதரன் சல்மானை சவூதி அதிகாரிகள் கைதுசெய்துள்ளதாக டுவிட்டர் செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

சவூதி அரசாங்கம் இதுவரை இந்த அறிஞர்களைக் கைதுசெய்ததற்கான காரணத்தை உத்தியோகபூர்வமாக வெளியிடவில்லை. டோஹாவில் ஒன்றுகூடிய இஸ்லாமிய அறிஞர்களின் சர்வதேச ஒன்றியம், சவூதி-கட்டார் ராஜதந்திர பிணக்குகள் குறித்து இவ்வறிஞர்கள் எடுத்த நிலைப்பாடே கைதுசெய்யப்பட்டதற்கான காரணமாக இருக்கலாம் என்று தெரிவித்துள்ளது.

ஆனால், வளைகுடா கூட்டுறவு நாடுகள் ஒற்றுமைப்பட வேண்டும் என்றே அவ்தா வேண்டுகோள் விடுத்திருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவ்தா நடுநிலைப் பிரச்சாரத்திற்கும் மிதவாதப் போக்கிற்கும் நன்கு அறியப்பட்டவர் என ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் ஷெய்க் அலி கராதாயி தெரிவித்துள்ளார்.

## சர்வதேசப் பார்வை

# ஐ.நா. கூட்டத் தொடரை பகிஷ்கரிக்கும் ஆங்சான் சூகி



மியன்மாரில் இடம்பெறும் இனப்படுகொலை குறித்து விவாதிப்பதற்கு ஐ.நா. பொதுச் சபை செப்டம்பர் 20 இல் ஒன்றுகூடவுள்ள நிலையில், மியன்மார் தலைவர் ஆங்சான் சூகி அதை பகிஷ்கரிப்பதாகத் தெரிவித்துள்ளார். மியன்மாரின் ஆளுங் கட்சியான ஜனநாயகத்துக்கான தேசிய லீக்கின் தலைவி ஐ.நா. பொதுக் கூட்டத் தொடரில் கலந்துகொள்ள மாட்டார் என அவரது கட்சிப் பேச்சாளர் ரொய்டரிடம் தெரிவித்துள்ளார். இதற்கான காரணத்தை அவர் முன்வைக்கவில்லை.

சூகி, நாட்டின் கவுன்ஸலர் என்று அழைக்கப்படுகின்றார். மேற்கு மாநிலமான ரெக்கைனில் ரோஹிங்யா முஸ்லிம்களை நன்கு திட்டமிட்டு படுகொலை செய்துவரும் இராணுவம், அவரது அரசாங்கத்தின் தேசிய படை என்பது குறிப்பிடத்தக்கது. சூகிக்கு வழங்கப்பட்ட சமாதானத்திற்கான நோபல் பரிசு வாபஸ் பெறப்பட வேண்டும் என உலகளாவிய ரீதியில் கோரிக்கைகள் எழுந்துள்ளன. ஆகஸ்ட் 25 முதல் இதுவரை 370,000 ரோஹிங்யர்கள் பங்களாதேஷிற்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

கட்சி சார்பாக கருத்து வெளியிட்டுள்ள பேச்சாளர், சூகி கூட்டத் தொடரில் கலந்து கொள்ள மாட்டார் என்பதற்கான காரணம் தனக்குத் தெரியவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். சூகிக்குப் பதிலாக உப ஜனாதிபதி ஹென்றி வேன் தியோ கலந்து கொள்வார் என கட்சியின் பேச்சாளர் அறிவித்துள்ளார்.



# இஸ்ரேல் மியன்மாருக்கு ஆயுதம் வழங்குகின்றது



மியன்மார் அரசாங்கம் ரோஹிங்யா முஸ்லிம் சிறுபான்மை மக்களை திட்டமிட்டு இனப்படுகொலை செய்கின்றது என்ற சர்வதேச குற்றச்சாட்டுக்கள் கூர்மையடைந்துள்ள நிலையில், இஸ்ரேல் தொடர்ந்தும் மியன்மாருக்கு பெருந்தொகை ஆயுதங்களை விற்பனை செய்து வருகின்றது.

ஆயுத விற்பனைக்கெதிரான மனித உரிமை செயற்பாட்டாளர்கள் இஸ்ரேலின் ஆயுத விற்பனை குறித்து தாக்கல் செய்துள்ள வழக்கு தொடர்பாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் எவிக்டோர் லீபெமன் கருத்து வெளியிடுகையில், ''இது ராஜதந்திர விவகாரம்'' எனக் கூறியுள்ளார்.

மியன்மாருக்கு இஸ்ரேல் விற்பனை செய்துள்ள ஆயுதங்களில் 100 யுத்த தாங்கிகள், இயந்திரத் துப்பாக்கிகள் மற்றும் கனரக படகுகள் என்பன உள்ளடங்குகின்றன. ரோஹிங்யா மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் வன்முறைகளைத் தொடர்வதற்கும் மியன்மார் எல்லைப் புறப் பாதுகாப்பை பலப்படுத்தவும் இஸ்ரேல் வழங்கிய ஆயுதங்கள் பயன்படுத்தப்படவுள்ளதாக மியன்மார் அறிவித்துள்ளது. ஏற்கனவே அமெரிக்கா மற்றம் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன மியன்மார் மீது ஆயுதத் தடைகளை விதித்துள்ளன.


ஜூனில் இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் உரையாற்றிய இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் லீபெமன், இஸ்ரேல் ஆயுத வியாபாரத்தில் உலகின் மிகப் பெரிய ஆயுத ஏற்றுமதி நாடான அமெரிக்காவுடன் இணைந்து செல்கின்றது என்றார். சர்வதேச அளவில் ஆயுத விற்பனை தொடர்பான சட்டங்களை இஸ்ரேல் மதித்துச் செயல்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் தாக்கல் செய்த வழக்கை இம்மாத இறுதியில் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக இஸ்ரேலிய உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

# 15 வயதான காஸா சிறுவன் கம்பியூட்டர் விளையாட்டை உருவாக்கியுள்ளார்

காஸாவைச் சேர்ந்த 15 வயது சிறுவன் ஒருவன் தொழின்மைசார் கணினி விளையாட்டொன்றை வடிவமைத்துள்ளதாக ஸபா செய்திச் சேவை தெரிவித்துள்ளது. பிலால் ஷாஹித் கணினி தொழின்மைசார் 20 விளையாட்டுக்களை வடிவமைத்துள்ளார். தற்போது கூகுல் பிளே ஸ்டோரில் இவை கிடைக்கப் பெறுகின்றன.

கணினி விளையாட்டின் மீதான எனது ஆர்வம் கணினி மொழியை அறிந்து கொள்வதற்கு ஊக்குமளித்தது. ஆங்கிலம், ஹிப்ரு, அறபு மொழிகளில் தனக்கிருந்த பரிச்சயமும் கணினி விளையாட்டை வடிவமைப்பதற்கு உதவியதாக ஷாஹித் தெரிவித்துள்ளார்.



# மனுக்குலத்திற்கு எதிரான பர்மாவின் போர்க் குற்றத்திற்கு சர்வதேசம் பதிலளிக்க வேண்டும்



பர்மாவில் மனுக்குலத்திற்கு எதிராக நிகழ்த்தப்படும் போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேசம் விரைந்து எதிர்வினையாற்ற வேண்டும் என்று துருக்கிய பிரதமர் பினாலி இல்திரிம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இன்று வடகொரியாவிலும் அரக்கானிலும் ஏனைய பிராந்தியங்களிலும் நடைபெறும் மனுக்குலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு சர்வதேச சமூகமும் ஐ.நா.வும் பொறுப்புக் கூற வேண்டும் என பினாலி அங்கு தெரிவித்தார். அங்காராவில் நீதிமன்றம் ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றியபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ.நா. அறிக்கையின்படி, 3 இலட்சத்திற்கும் அதிகமான ரோஹிங்ய மக்கள் மியன்மாரை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். பல பத்தாயிரம் பேர் உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ளனர். பாலியல் வல்லுறவு, துப்பாக்கிச் சூடு என பல்வேறு விதமான குற்றங்கள் இடம்பெறுகின்றன. இவை குறித்து உலகம் கவனம் செலுத்த வேண்டும் என துருக்கிய பிரதமர் பினாலி இல்திரிம் அங்கு தெரிவித்தார்.

# மொசூலில் 2100 சடலங்கள் மீட்பு



தாஇஷ் தீவிரவாதிகளோடு ஈராக்கிய படையினர் நடத்திய தாக்குதல்களில் சுமார் 2100 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மொசூல் நகரின் மேற்குப் புறத்தில் நடைபெற்ற அகழ்வின்போது 2100 எழும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஈராக்கின் சிவில் பாதுகாப்பு அமைச்சர் ஸஅத் ஹாமித், தாஇஷ் பயங்கரவாதிகளே இக்கொலைகளை மேற்கொண்டுள்ளனர் என்று அறிவித்துள்ளார்.

ஆனால், இக்கொலைகள் குறித்து தாஇஷ் பயங்கரவாதிகள் மட்டுமன்றி, ஈராக்கிய அரச படையும் பொறுப்புக் கூற வேண்டும் என விமர்சனங்கள் எழுந்துள்ளன. மேலும் 500 மனித எலும்புக் கூடுகள் கிடைக்கப் பெறலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த ஜூன் மாதம் தாஇஷிடமிருந்து மொசூலை ஈராக்கிய படை மீட்டது.

# வடகொரியாவுடனான தொடர்புகளை துண்டிக்கின்றது எகிப்து



வடகொரியாவுடனான இராணுவத் தொடர்புகளை முற்றாக துண்டித்துக் கொள்வதாக எகிப்து அறிவித்துள்ளது. எகிப்தின் பாதுகாப்பு அமைச்சர் சித்கி சுப்ஹி இவ்வறிப்பை வெளியிட்டள்ளார். தென்கொரிய தலைநகரம் சியோலுக்கு சுப்ஹி மேற்கொண்ட விஜயத்தின்போதே இவ்வறிவித்தல் வெளிவந்தது.

தென்கொரியாவுடன் வடகொரியாவுக்கெதிரான இராணுவ நடவடிக்கைகளுக்கு எகிப்து முழு ஆதரவளிக்கும் என சுப்ஹி அங்கு தெரிவித்தார். அமெரிக்கா வடகொரியாவுக்கு எதிராக புதிய பொருளாதாரத் தடைகளை விதித்து வரும் நிலையில், அதன் நேச நாடான எகிப்து இந்நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளது.

பல தசாப்தங்களாக வடகொரியாவுடன் எகிப்து ராஜதந்திர மற்றும் இராணுவ தொடர்புகளை பேணி வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியன்மார் இனப்படுகொலை

## தென்கிழக்காசியாவில் இன்னொரு செரப்ரெனிகா

• றவூப் ஸெய்ன்

கடந்த ஆகஸ்ட் 25இல் மியன்மாரின் மேற்கு மாநிலமான ரெக்கைன் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டது. 'கிளர்ச்சியாளர்களைத் தேடி அழித்தல்' எனும் பெயரில் கண்ணெதிரே அகப்பட்ட அப்பாவி முஸ்லிம்கள் மீது இராணுவத்தின் துப்பாக்கிகள் திரும்பின. பெண்கள், சிறுவர்கள், கைக்குழந்தைகள், முதியவர்கள் என்ற வேறுபாடின்றி இராணுவம் தாறுமாறாக மக்களை சுட்டுத் தீர்த்தது.

அச்சத்தில் உறைந்துபோன மக்கள் உயிரைக் கையில் எடுத்துக் கொண்டு பங்களாதேஷ் எல்லைக்கு ஓடினர். மியன்மார் - பங்களாதேஷ் எல்லைப் புறத்தில் மியன்மார் இராணுவத்தினரால் புதைக்கப்பட்ட கன்னி வெடிகளில் சிக்கி பலர் உயிரிழந்துள்ளனர். துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்கள், வழியில் பட்டினியால் இறந்தவர்கள், கன்னி வெடியில் இறந்தவர்கள் என கொல்லப்பட்ட முஸ்லிம்களின் தொகை ஒரு மதிப்பீட்டின்படி 3000 எனக் கூறப்படுகின்றது. கடந்த 3 வாரங்களில் பங்களாதேஷ் எல்லைப் புறத்திற்கு இடம்பெயர்ந்தோர் தொகை 3 இலட்சம் என ஐ.நா. அகதிகள் நிறுவனம் கணிப்பிட்டுள்ளது.

2012 ஜூன் 10 இல் மியன்மார் பௌத்த பெண் ஒருவரை முஸ்லிம் இளைஞர்கள் பாலியல் ரீதியில் துன்புறுத்தினர் என்ற வதந்தி வேகமாகப் பரப்பப்பட்டதோடு, ரெக்கைனில் அவசரகாலச் சட்டம் அமுலுக்கு வந்தது. ரோஹிங்யா முஸ்லிம்கள் வேட்டையாடப்பட்டனர். ஜூனில் ஆரம்பித்த வன்முறைகள் ஒக்டோபரிலேயே ஓரளவு தணிந்தது. இப்போது மீளவும் அம்மக்கள் மீது ஒரு இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

கடந்த 5 ஆண்டுகளாக எல்லைப் புற நாடுகளான பங்களாதேஷ், தாய்லாந்து, மலேசியா, இந்தியா என்பவற்றின் கதவுகளை ரோஹிங்யா மக்கள் தட்டிக் கொண்டே இருக்கிறார்கள். யாரும் திறப்பதாய் இல்லை. இன்றைய நாட்களில் அவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இப்படுகொலைகள் திட்டமிட்ட இனப்படுகொலைகள்தானா அல்லது சடுதியாக நிகழும் வன்முறைகளின் எதிரொலியா என்ற விவாதம் முடிவுக்கு வந்துவிட்டது.

அமெரிக்காவின் யேல் பல்கலைக் கழக ஆய்வுக் குழுவொன்று 2016 இல் அங்கு மேற்கொண்ட ஓர் ஆய்வில் மியன்மாரில் தற்போது இடம்பெறுவது அப்பட்டமான ஓர் இனப் படுகொலை தான் என்பதை நிறுவியுள்ளது. அதற்கான சில குறிகாட்டிகளையும் முன்வைத்துள்ளது.

1. ரோஹிங்யர்களை எவ்விதப் பாகுபாடின்றி அனைவரையும் அழிக்கும் திட்டமே முன்னெடுக்கப்படுகின்றது.
2. குழந்தைகள் உள்ளிட்டு அப்பாவிப் பெண்கள் வரை கொல்வதற்குக் கையாளப்படும் வழிமுறைகள் மிகவும் குரூரமானது.
3. இராணுவம் மட்டுமன்றி, மியன்மாரின் இனவாதக் கும்பல்களும் கை கோர்த்துச் செயல்படுகின்றன.
4. பெண்கள் திட்டமிட்டு பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.
5. வெளியேறிச் செல்லும் மக்களின் இருப்பிடங்கள் முற்றாக அழிக்கப்படுகின்றன. எரித்து சாம்பலாக்கப்படுகின்றன.
6. 1948 இல் பர்மா சுதந்திரமடைந்தது முதல் ரோஹிங்யா இன முஸ்லிம்கள் அரசாங்கத்தினால் இலக்கு வைக்கப்பட்டு வருகின்றனர்.

இத்தகைய பல்வேறு குறிகாட்டிகள் மியன்மாரில் நடைபெறுவது நன்கு முறைப்படுத்தப்பட்ட இனச்சுத்திகரிப்புதான் (Systametic Ethnic Clearancy) என்பதை உணர்த்தி நிற்கின்றது.

1990 களில் கிழக்கு ஐரோப்பாவின், போல்கன் பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைகளுக்கும் இன்றைய மியன்மார் படுகொலைக்கும் இடையில் எவ்வித வேறுபாடுகளும் இல்லை என ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

சேர்பிய இராணுவத்தினரால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட அத்தகைய இனப்படுகொலைகள் குறித்து இன்று வரை விசாரணைகள் நடந்தவண்ணமுள்ளன. மியன்மார் ரோஹிங்ய மக்களை இராணுவத்திடமிருந்து காப்பாற்றுவதற்கு யாரும் முன்வரவில்லை என்றால் தென்கிழக்காசியா இன்னொரு செரப்ரேனிகாவை சந்திக்க நேரிடும் என எச்சரிக்கப்படுகின்றது.

பூமிப் பந்தில் மிகக் கொடூரமாக ஒடுக்கப்படுகின்ற ஒரே சிறுபான்மை ரோஹிங்யர்கள்தான் என வர்ணிக்கப்படுகின்றபோதும் இவர்கள் குறித்து யாரும் அக்கறை கொள்ளாமல் இருப்பதேன்? யார் இந்த மக்கள்? அவர்கள் மீது ஏன் திட்டமிட்ட இனப்படுகொலைகள் கட்டவிழ்க்கப்படுகின்றன?

அரக்கான் 8 ஆம் நூற்றாண்டிலிருந்து மியன்மாரை அண்டிக் காணப்பட்ட ஒரு சுதந்திர முஸ்லிம் குடியரசு. ஹி. முதல் நூற்றாண்டிலேயே இஸ்லாம் அங்கு அறிமுகமானது. 17 நகரங்களைக் கொண்ட அரக்கான் குடியரசுடன் அப்பாஸிய ஆட்சியாளரான ஹாரூன் ரஷீத் அவர்கள் மிக நெருக்கமான கலாசார, வணிகள் உறவுகளைப் பேணி வந்தார்கள்.



விவசாய நிலங்கள், செழிப்பான மேய்ச்சல் தரைகள், நீண்ட ஆறுகள், குளங்கள் என பல்வேறு இயற்கை அமைப்பைக் கொண்ட அரக்கானின் மொத்தப் பரப்பு 20,000 சதுர கி.மீ. ஆகும். பலஸ்தீனை இஸ்ரேல் ஆக்கிரமிப்பதற்கு முன்னர் அதன் பரப்பு சுமாராக இதே அளவிலேயே இருந்தது. 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மியன்மார் அரசாங்கம் அரக்கானை பலாத்காரமாக தன்னுடன் இணைத்துக் கொண்டது. 1824 இல் பிரிட்டிஷ்காரர்கள் மியன்மாரைக் கைப்பற்றினர். 1948 இல் மியன்மார் சுதந்திரமடைந்தது.

சுதந்திரமடைந்த சில மாதங்களில் Union Citizenship Act எனும் சட்டத்தை மியன்மார் அரசு நிறைவேற்றியது. மியன்மாரில் வாழும் இனங்களில் யார் குடியுரிமை பெறலாம் என்பதைத் தீர்மானிக்கும் சட்டம் இது. அதன்படி அந்நாட்டிலுள்ள 136 இன சமூகங்களில் 135 இனக் குழுமங்கள் தேசிய இனங்களாக அங்கீகரிக்கப்பட்டதோடு, பிரஜா உரிமையும் வழங்கப்பட்டனர். ரோஹிங்யா மக்களுக்கு மாத்திரம் பிரஜா உரிமை மறுக்கப்பட்டது.


எனினும், பிரஜா உரிமைக்கு விண்ணப்பிக்கின்ற ரோஹிங்யா இனத்தவரின் குடும்பம் இரு தலைமுறைகள் அந்நாட்டில் வாழ்ந்ததை உறுதி செய்தால் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கலாம் என அனுமதிக்கப்பட்டது. அவர்களுக்கு சட்டத்திலுள்ள Generational Provision இன் கீழ் தற்காலிக குடியுரிமை வழங்கப்பட்டது.

1962 இல் அங்கு இராணுவப் புரட்சி இடம்பெற்றது. அரசியல் சூழமைவுகள் சடுதியாக மாறின. நாட்டிலுள்ள [illegible] தேசிய பதிவு அட்டையை (National Registration Card) பெற வேண்டும் என்று இராணுவ அரசாங்கம் மக்களை வேண்டியது. அதனால் ரோஹிங்யா மக்களுக்கு அவர்கள் வெளிநாட்டவர்கள் என்பதை சுட்டி நிற்கும் அட்டையாள அட்டையே வழங்கப்பட்டது. நில உரிமை மட்டுப்படுத்தப்பட்டதோடு, கல்வி, கலாசார, தொழில் உரிமைகள் அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்பட்டன.

1982 இல் ஜெனரல் நேவின் என்பவன் அதிகாரத்திற்கு வந்தான். அவன் ரோஹிங்யா என்ற சொல்லை பயன்படுத்தக் கூடாது எனவும் 'வங்காளிகள்' என்றே தம்மை அழைத்துக் கொள்ள வேண்டும் எனவும் உத்தரவு பிறப்பித்தான். புதிய பிரஜா உரிமைச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. அதன்படி 135 இனக்குழுக்கள் பிரஜைகளாக அங்கீகரிக்கப்பட்டதோடு, ரோஹிங்யர்கள் ஓரங்கட்டப்பட்டனர்.

மியன்மார் மக்களிடையே அவர்கள் 'வந்தேறு குடிகள்' என்று வசதியாகப் பிரச்சாரம் செய்யப்பட்டது. மியன்மார் சிவில் சமூகத்திற்கு மத்தியில் வாழும் வங்களாதேசத்தைச் சேர்ந்த சட்ட விரோதக் குடியேற்றக்காரர்கள் எனவும் பிரச்சாரம் செய்யப்பட்டு அந்நியர்களாக்கப்பட்டனர். புதிய சட்டத்தின்படி அவர்கள் பிரஜா உரிமை பெற வேண்டுமாயின் 3 மட்டங்களைக் கடந்து செல்ல வேண்டும். அதில் ஆரம்பக் கட்டம் 2 நிபந்தனைகளை விதிக்கின்றது.

முதலாவது, பிரஜா உரிமைக்கு விண்ணப்பிப்பவரின் குடும்பம் 1948 இற்கு முன்னர் அங்கு வாழ்ந்திருக்க வேண்டும். மியன்மாரின் தேசிய மொழிகளில் ஏதேனும் ஒன்றில் பரிச்சயம் இருக்க வேண்டும். பெரும்பான்மையான ரோஹிங்யா மக்களுக்கு பிரஜா உரிமையின் முதற் கட்டத்திற்கான இந்த நிபந்தனைகளைக் கூட ஆவண ரீதியாக சமர்ப்பிக்க முடியவில்லை. அதனால் வாக்குரிமை மறுக்கப்பட்ட அவர்களுக்கு உயர் கல்விக்கான உரிமை, திருமணம் செய்வதற்கான உரிமை, பயணிப்பதற்கான உரிமை என ஒவ்வொன்றும் மறுக்கப்பட்டது.



திருமணம் செய்ய வேண்டுமாயின், அரசாங்கத்தின் அனுமதி பெற வேண்டும். அப்படித் திருமணம் செய்வதாயினும் 2 குந்தைகளுக்கு மேல் பெற்றுக் கொள்ளக் கூடாது. கடவுச் சீட்டு இல்லாததனால் எந்த நாட்டுக்கும் பயணிக்க முடியாது. மருத்துவராகவோ சட்டத்தரணியாகவோ பணியாற்ற முடியாது. கீழ்மட்ட உழைப்பிலும் தொழில்களிலுமே ஈடுபடலாம் என்ற நிலையில், பெரும்பாலான ரோஹிங்யா மக்கள் கல்வி அறிவற்றவர்களாகவும் எழுத வாசிக்கத் தெரியாதவர்களாகவும் ஆக்கப்பட்டனர். சமூகத்தை ஒழுங்குபடுத்துகின்ற ஒரு தலைமைத்துவம் கூட அவர்களுக்குள் உருவாகவில்லை.

மியன்மார் அரசாங்கத்தினால் கடந்த 70 ஆண்டுகளாக கொத்தடிமைகள் போன்று நடாத்தப்பட்டு வரும் இம்மக்கள் இன்று கொத்துக் கொத்தாக கொன்று குவிக்கப்படுகின்றனர். அரக்கானிலிருந்து ஏற்கனவே பல இலட்சம் பேர் அகதிகளாய் வெளியேறி விட்டனர். எஞ்சியுள்ளவர்களை இலக்கு வைத்து வேட்டையாடி வரும் இராணுவம், இவ்வினத்தை முற்றாகவே துடைத்தழிக்கும் கொடூரமான தந்திரத்தில் இறங்கியுள்ளது.

மியன்மார் அரசாங்கத்தின் இத்தகைய இனப் படுகொலைக்கும் சுத்திகரிப்புக்கும் பின்னாவுள்ள அரசியல் தூண்டல் எது என்பது முக்கிய கேள்வியாகின்றது. ரெக்கைன் எனப்படும் முன்னைய அரக்கானில் வாழும் 11 இலட்சம் ரோஹிங்யர்களை அதே மாநிலத்தில் வாழும் முக் இனத்தவர்களும் எதிரிகளாகவே பார்க்கின்றனர். இராணுவத்தினரோடு இணைந்து வன்முறைகளில் ஈடுபடுகின்றனர். இதற்கான காரணம் என்ன?

ஏன் ஒரு சமூகம் இந்த நாட்டில் மொத்தமாக அழிக்கப்படுகின்றது என்ற கேள்வி மிகச் சிக்கலானது. 2016 இல் தேர்தலில் குதித்து அரசாங்கத்தைக் கைப்பற்றிய ஜனநாயகத்துக்கான தேசிய லீக்கின் தலைவி ஆங்சான் சூகி கூட இன்று ரோஹிங்யர்களுக்கு எதிராக அறிக்கை விடுகின்றார். அவரது கட்டுப்பாட்டிலுள்ள அரசாங்கமே இன்று இனப்படுகொலைகளில் இறங்கியுள்ளது.

இவையெல்லாம் மிக ஆழமாக நோக்க வேண்டியவை. அமெரிக்கா, இந்தியா, சீனா மூன்றிற்கும் மியன்மார் மூலோபாய ரீதியில் முக்கியம் வாய்ந்த பிரதேசமாகும். தாய்லாந்து, லாவோஸ், வியட்நாம் ஆகிய தென்கிழக்காசிய நாடுகளுக்கான நுழைவாயிலாக மியன்மார் உள்ளது. இந்தியாவுக்கு அது அவசியமாகின்றது.

இந்து சமுத்திரத்தோடு ஒரு புள்ளியிலேனும் தொடர்புபடாத சீனாவுக்கு பர்மா அவசியமாகும். சீனா தெற்காசியப் பிராந்தியங்களில் பின்பற்றும் மூலோபாயக் கொள்கைக்கு Pearls Stretergy என்று பெயர். இந்து சமுத்திரம் மற்றும் அதைச் சூழவுள்ள நாடுகள் மீது இந்திய, அமெரிக்க ஆதிக்கத்தைத் தடுப்பதும் சீனாவுக்கான எரிபொருள் விநியோகப் பாதையாக இந்து சமுத்திரத்தைக் கையாள்வதுமே இதன் பிரதான நோக்கம்.

இந்தப் பின்னணியிலேயே பங்களாதேஷின் சிட்டகொங் துறைமுகம், பாகிஸ்தானின் கல்தார் துறைமுகம், இலங்கையின் ஹம்பாந்தோட்டை துறைமுகம் என்பவற்றோடு மியன்மாரின் சித்வே துறைமுகமும் சீனாவுக்கு அவசியமாகின்றது. ஏற்கனவே இவற்றை 100 ஆண்டுகளுக்கு அது குத்தகைக்குப் பெற்றுள்ளது.

2010 இன் ஆரம்பத்தில் மியன்மாரின் ரெக்கைன் மாநிலத்தில் எரிபொருள் மற்றும் இயற்கை எரிவாயு என்பன கண்டுபிடிக்கப்பட்டது. அது மியன்மாரின் ஏனைய பகுதிகளில் உள்ளவற்றை விட மூன்று மடங்கு அதிகம் எனக் கூறப்படுகின்றது.

2013 ஆம் அண்டிலிருந்து மியன்மார் அரசாங்கம் அங்கு எரிவாயு உற்பத்தியை ஆரம்பித்தது. இதனை மியன்மாரின் சித்வே துறைமுகத்தினூடாக சீனாவின் யுனான் மாகாணத்திற்கு ஏற்றுமதி செய்வதாகவும் உடன்பாடு எட்டப்பட்டது.

இந்நிலையிலேதான் தென்கிழக்காசியாவிற்கான அமெரிக்க மூலோபாயம் (Stretergy of Engagement) செயல்படத் தொடங்கியது. சீனாவை எதிர்த்து நிற்கும் இந்தியா அதற்குத் துணை செய்கின்றது. பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த விரும்பும் அமெரிக்கா, தற்போதைய சூகி அரசாங்கத்துடன் ஏற்கனவே செய்யப்பட்ட ஒப்பந்தத்தை நிறுத்தி, ரெக்கைனிலுள்ள எரிவாயு மற்றும் எண்ணெய் வயல்களை கைப்பற்றும் திட்டத்தில் இறங்கியுள்ளது.

இதற்காகவே 2010 இன் ஆரம்பத்தில் விராது தேரர் தலைமையிலான 969 எனும் வன்முறை இயக்கத்தை அமெரிக்கா பயிற்றுவித்தது. அது இரண்டு வகையான பிரச்சாரங்களை கடந்த 7 ஆண்டுகளாக முன்னெடுத்து வருகின்றது. சீனாவுடனான ஒப்பந்தத்தை கிழித்தெறிய வேண்டும். ரோஹிங்யா இனத்தவர்களை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும். இவை இரண்டுமே அதன் பிரதான பிரச்சாரங்களாகும்.

அரக்கானிலுள்ள இயற்கை வளங்களை சுத்திகரித்து, ஏற்றுமதி செய்து பொருளாதாரத்தில் இன்னும் ஊதிப் பெருக்க வேண்டுமாயின், அதற்கென இலட்சக்கணக்கான ஹெக்டேயர் நிலங்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்குத் தேவைப்படுகின்றது. ரோஹிங்யர்களை விரட்டியடிப்பதே அதற்கான ஒரே வழி என சூகியின் இன்றைய அரசாங்கம் முடிவுசெய்து விட்டது.

ரோஹிங்யர்கள் மீதான பகை முரண்பாட்டுக்கு வரலாற்று ரீதியான, சமய ரீதியான, கலாசார மொழி சார்ந்த பல்வேறு காரணங்கள் இருக்கின்ற போதும் இன்றைய இனச் சுத்திகரிப்புக்கான பிரதான அரசியல் காரணி இதுதான் என்பதில் சந்தேகமில்லை.

ஆயிரம் ஆண்டு கால பூர்வீகம் கொண்ட ஒரு மக்கள் திரள் வரலாறு அற்றவர்களாகவும் வந்தேறு குடிகளாகவும் வர்ணிக்கப்பட்டு, ஆயுத முனையில் வேரோடு பிடுங்கி வீசப்படும் இந்த துயரத்திற்கு பிராந்தியத்தில் அரசியல் விளையாட்டில் ஈடுபட்டிருக்கும் வல்லரசுகள் முக்கிய பொறுப்புக் கூற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• குசல் பெரேரா

# இலத்திரனியல் அடையாள அட்டை எதற்கு?

இற்றைக்கு 45 வருடங்களுக்கு முன்னர் 1972 ஆம் ஆண்டு இலங்கையர்களுக்கு முதன் முறையாக அடையாள அட்டை கிடைத்தது. 1968 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க ஆட்பதிவுச் சட்டம் மீளவும் 1971 ஆம் ஆண்டு சீர்திருத்தப் பட்டதைத் தொடர்ந்தே அவ்வடையாள அட்டை கிடைத்தது. அன்று முதல் 16 வயதுக்கு மேற்பட்ட சகல இலங்கையர்களும் தேசிய அடையாள அட்டை பெறுவது கட்டாயமாக்கப்பட்டது. அதன் இலக்கம் கடவுச் சீட்டிலும் பதியப்பட்டது.

இங்கிலாந்தின் 5 ஆவது ஹென்றி மன்னனாலேயே உலகில் முதற் தடவையாக தேசிய அடையாள அட்டையொன்று சட்டபூர்வமாக்கப்பட்டது. அதற்கவர் 1414 இல் ''பாதுகாப்புச் சட்டமொன்றை'' செயற்படுத்தினார். எனினும் 500 வருடங்களின் பின்னர் 1914 இல் துவங்கிய உலக மகா யுத்தம் வரையில் ஆள் அடையாள அட்டைப் பாவனை முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை. காரணம், பாதுகாப்புக் காரணங்களுக்கே தேசிய அடையாள அட்டை உண்மையில் அவசியப்படுகின்றது.

எமது நாட்டிலும் கூட அடையாள அட்டை தொடர்பில் 1968 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டம் 04 வருடங்களின் பின்னர் 1971 ஆயுதப் புரட்சியைத் தொடர்ந்தே விரைவாக அமுல்படுத்த வேண்டியேற்பட்டது. வட கிழக்குப் பிரதேசங்களில் யுத்தம் மேலெழுந்ததைத் தொடர்ந்து தேசிய அடையாள அட்டையானது சகல பாதுகாப்பு அரண்களைத் தாண்டுவதற்கும் அரசாங்க நிறுவனங்களுக்குள் நுழைவதற்கும் அரச பணிகளுக்கும் தேவைப்பட்டது. அத்துடன் வங்கி நடவடிக்கைகளுக்கும் கட்டாயப்படுத்தப்பட்டது. இவ்வகையில் கடந்த 45 வருட காலத்தில் தேசிய அடையாள அட்டை சகல விடயங்களுடனும் தொடர்புபடுத்திக்கொள்வதற்கு மேலதிகமாக பழக்கத்திற்கு வந்தது.

போருக்கு பின்னர் பாதுகாப்புக் காரணங்களுக்காக வேண்டி தேசிய அடையாள அட்டையின் தேவை குறித்த நேரடிக் கலந்துரையாடல்கள் இடம்பெறவில்லை. தற்பொழுது அது வேறு வகையான கலந்துரையாடலைத் தோற்றுவித்துள்ளது. வாழ்க்கைத் தரவுகள் மற்றும் சுய விபரத் தரவுகளை உள்ளடக்கிய புதிய இலத்திரனியல் அடையாள அட்டை இல்லாமல் அன்றாட விடயங்களை வெற்றிகரமாக செய்துகொள்ள முடியாது என தற்போது கதைத்து வருகின்றார்கள்.

தற்பொழுது நாம் பயன்படுத்துகின்ற தேசிய அடையாள அட்டை காலம் கடந்த தொழில்நுட்ப உருவாக்கம் என்பதால் நவீன உலகில் வாழ்வதற்கு அது போதுமானதாக இல்லையென்ற வாதம் முன்வைக்கப்பட்டு வருகிறது. இதற்கு பகரமாக இலத்திரனியல் அடையாள அட்டை தொடர்பில் ஆட்பதிவுத் திணைக்களம் தனது இணையதளத்தில் நவீன தேவைகளுக்காக வேண்டி பழைய தொழில்நுட்பம் மற்றும் வசதிகளுடன் அடையாள அட்டை வெளியிடும் பணியை முன்னெடுத்துச் செல்ல முடியாது எனக் குறிப்பிட்டுள்ளது. அத்துடன் அடையாள அட்டையொன்றிற்கு தேவையான பாதுகாப்பு உத்திகள் நவீனத்திற்கு பொருந்துவதில்லை என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 15 வயது அல்லது அதற்கு அதிகமான வயதையுடைய சகல பிரஜைகளுக்கும் அவர்களுடைய சுய விபரங்கள், குடும்பம் பற்றிய தகவல்கள் மற்றும் வாழ்கைத் தரவுகளை உள்ளடக்கிய இலத்திரனியல் அடையாள அட்டையொன்றை 2016 ஆம் ஆண்டு முதல் வெளியிடும் திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக அவ்விணையதளத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

நவீன இலத்திரனியல் அடையாள அட்டையொன்றை வெளியிடுவதன் தேசிய குறிக்கோளாக பின்வரும் விடயத்தை அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

01) நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இலங்கை பிரஜைகளின் ஆள் அடையாளத்தை சரியாக உறுதிப்படுத்துதல்.

02) அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற சேவைகளை இலகுவாகவும் விரைவாகவும் பெற்றுக் கொடுக்கும் தகவல் பரிமாற்றுத் திட்டமொன்றை உருவாக்குதல்.



03) தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் தேவையான வசதிகளை வழங்குதல்'' என்பதாகும்.

இப்பின்னணியில் எமது நாட்டில் கலந்துரையாடப்படாத பாரிய விடயமாக இருப்பது அரசுக்கும் பிரஜைக்குமிடையில் காணப்படுகின்ற அல்லது காணப்பட வேண்டிய சமூக உடன்படிக்கை என்ன என்பதாகும். அது ஏனைய தெற்காசிய நாடுகளைப் போன்று எமது நாட்டிலும் பிரைஜகள் மீது அரசு கொண்டுள்ள ஆதிக்கத்தின் அடிப்படையிலேயே முடிவாகின்றது. அதனால் பிரஜைகளின் பொது மற்றும் தனி உரிமைகள் அரசாங்கத்தின் போக்கிற்கு அடிபணிந்தே முடிவுசெய்யப்படுகின்றது.

புராதன இங்கிலாந்தின் 5 ஆம் ஹென்றி அரசன் பாதுகாப்பு எனும் விடயத்தை முன்னிலைப்படுத்தி முதற் தடவையாக நாட்டின் பிரஜைகளுக்கு அடையாள அட்டையை வழங்கத் தொடங்கியது முதல் தேசிய அடையாள அட்டை உண்மையில் அரச பாதுகாப்புக்காக வேண்டி பிரஜைகளை இனங் கண்டுகொள்ளவே அவசியப்பட்டது. தெளிவான மொழியில் கூறுவதானால் 'பயங்கரவாதியை' சமூகத்தில் உள்ள இதர 'தேசப்பற்றாளர்களிடமிருந்து' வேறுபடுத்தி அறிந்துகொள்ளும் அடையாளச் சான்றிதழ் ஒன்றாகவே அடையாள அட்டை காணப்பட்டது.

அதற்கு தற்பொழுது பயன்படுத்தப்படுகின்ற தேசிய அடையாள அட்டையில் பிரஜைகளின் பெயர், ஊர், பிறந்த திகதி, பாலின வேறுபாடு, வதிவிடம், அடையாள அட்டை இலக்கம் போன்ற தகவல்களுடன் இலகுவில் அடையாளங் கண்டுகொள்ள முடியுமான சர்வதேச தரங்களுக்கு அமைவான புகைப்படமும் உட்பொதிந்து காணப்படுகிறது.



புகைப்படத்துடன் அத்தகவல்கள் அனைத்தும் தனியானதொரு தரவுத் திட்டத்திற்குள் உட்புகுத்தப்படுகின்றது. தேசிய இலத்திரனியல் அடையாள அட்டை தொடர்பில் தெரிவிக்கப்படுகின்ற ஏனைய சகல விடயங்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்கு தற்பொழுது பயன்படுத்தப்படுகின்ற தேசிய அடையாள அட்டையில் உட்புகுத்தப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் போதுமானதாக உள்ளது. அவை ஆள் அடையாளத்திற்கும் போதுமான விடயங்களாகும். அடையாள அட்டை இலக்கம் அதற்காக வேண்டி தற்பொழுது பயன்படுத்தப்பட்டு வருகின்ற அடிப்படை விடயமாக உள்ளது.

புதிய இலத்திரனியல் அடையாள அட்டையின் பிரயோசனங்கள் தொடர்பில் ஆட்பதிவுத் திணைக்களம் பின்வரும் விடயங்களை குறிப்பிடுகின்றது. ''தேர்தல்களில் வாக்களித்தல், வங்கி நடவடிக்கைகள், சாரதி அனுமதிப் பத்திரம், கடவுச்சீட்டு, உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்; காப்புறுதி, காணி மற்றும் சொத்து, ஓய்வூதிய கொடுப்பனவுகள் போன்ற சேவைகளை பெற்றுக்கொள்ளும் போது தனது அடையாளத்தை சரியான முறையில் உறுதிப்படுத்திக்கொள்ள முடிதல், அத்தகவல்களை குறித்த நிறுவனங்களுடன் சட்டபூர்வமான த்கவல் பரிமாற்று திட்டத்திற்கூடாக தொடர்புபடுவதன் மூலம் அடையாள அட்டை இல்லாமலும் சேவையை தடங்களின்றி பெற்றுக் கொள்ள முடிதல்.''

எனவே இவையனைத்தையும் குறிப்பிட்ட நிறுவனத்தை முன்னேற்றி செயற்திறன் மிக்க நிறுவனமொன்றாக மாற்றுவதன் மூலம் தற்போது பயன்படுத்தப்படுகின்ற அடையாள அட்டையின் மூலமும் அவற்றை நிவர்த்தி செய்துகொள்ளலாம். அடையாள அட்டை இலக்கத்தின் மீது புதிதாக சிபாரிசு செய்கின்ற ''தேசிய ஆட் பெயர் பதிவொன்றை மத்திய தரவு ஒழுங்குத் திட்டமொன்றாக ஸ்தாபித்து'' அதனை இலத்திரனியல் வலையமைப்புடன் தொடர்புபடுத்துவதையே செய்ய வேண்டியுள்ளது.

தற்பொழு கூட அடையாள அட்டை இலக்கத்தை வழங்குவதின் மூலம் ரஷீதுகளை செலுத்தும் மிக இலகுவான முறைகளை பல்வேறு நடமாடும் சேவை மற்றும் இணையத்தள வசதிகளை வழங்குகின்ற நிறுவனங்கள் பயன்படுத்துகின்றன. அவ்வாறே சமுர்த்தி, சேமலாப நிதி, காப்புறுதி, ஓய்வூதியத் தொகை போன்ற பல்வேறு சேவைகளுக்கு அடையாள அட்டை இலக்கத்தைப் பயன்படுத்தி அடையாளத்தை உறுதிப்படுத்துவதன் மூலம் அவ்வாறான இலத்திரனியல் வசதிகளை செய்துகொள்ள முடிகிறது.

தற்பொழுது இவ்வாறான சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளமைக்கான காரணம், சகல அரசாங்க நிறுவனங்களும் பழமைவாத மனநிலையுடன் கூடிய சோம்பேறி நிறுவனங்களாகவும், செயல்திறனற்ற நிறுவனங்களாகவும், ஊழல் மோசடிகள் மலிந்த நிறுவனங்களாகவும் காணப்படுகின்றமையாகும். அதற்கு வாழ்கைத் தரவுகள் மற்றும் சுய விபரங்களை ஒன்றிணைத்த அடையாள அட்டைகளை மக்களுக்கு வழங்கி விடுவதால் தீர்வுகள் கிடைப்பதில்லை.

இப்புதிய இலத்திரனியல் அடையாள அட்டை தொடர்பில் 2012 இல் அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருந்த ''லங்கா லொஜிஸ்டிக் மற்றும் டெக்னொலஜீஸ் கூட்டுத்தாபனத்தின்'' தகவல் தொழில்நுட்ப பிரிவின் பிரதானி லலித் லயனகே அன்று முன்வைத்த தகவலொன்றிற்கமைய, இலங்கையில் பேப்பரில் அச்சிடப்படுகின்ற அடையாள அட்டை பயன்படுத்தப்படுவதினால் தகவல்களை இலத்திரனியல் தரவுகளாகப் பெற்றுக்கொள்ள முடியாமல் போகிறது. அத்துடன் தற்பொழுது பாவனையில் உள்ள அடையாள அட்டைகளில் 15-20 வீதமானவை போலி அடையாள அட்டை எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் அவர், அடையாள அட்டையில் உள்ள தகவல்களை மாற்ற முடியுமான தன்மைகள், போலி அடையாள அட்டைகளை அச்சிட முடிகின்றமை மற்றும் அடையாள அட்டைக்கென கால வரையறையொன்று இல்லாமை போன்ற பிரச்சினைகளையும் முன்வைத்தார். எனவே சொல்லப்படுகின்ற சகல குறைபாடுகளையும் பாதுகாப்பு வரையரைகளையும் நீக்கி தற்போது பாவனையில் உள்ள தேசிய அடையாள அட்டையை நவீன இலத்திரனியல் அடையாள அட்டையொன்றாக வெளியிட முடியாதா என்கின்ற பிரச்சினை மேலெழுகின்றது.

பழைய பேப்பர் அடையாள அட்டைக்குப் பதிலாக புதிய இலத்திரனியல் அடையாள அட்டையொன்றை கால வரையரையுடன் 10 வருடங்களுக்கேனும் வழங்கி அரசாங்கத்திற்கு தேவையென்றால் வெளியிடலாம். ஆனால் இங்கு அதைச் செய்ய முனைவதில்லை. வாழ்கைத் தரவுகள் மற்றும் சுப விபரங்களுடனான குடும்பத்தின் சகல தகவல்களுடனும் புதிதாக இலத்திரனியல் அடையாள அட்டை வெளியிட எடுத்திருக்கும் முடிவின் மூலம் அதில் வேறு தேவையொன்று இருப்பது நிரூபனமாகிறது.

பிரஜைகளின் சரியான அடையாளத்தை உறுதிப்படுத்துவதாக திணைக்களம் குறிப்பிடுகின்ற விடயங்களுக்கும் அப்பால் செல்கின்ற அம்சமாக உள்ளது. புதிதாக சேர்க்கின்ற தகவல்களோடு ஒரு நபரின் மூலம் குடும்பத்தின் ஏனையவர்களையும் சோதனைக்கு உட்படுத்த முடியுமான கருவியொன்றாக புதிய தேசிய இலத்திரனியல் அடையாள அட்டை பயன்படுத்தப்படும். அது மகனிடமிருந்து தந்தைக்கும் தாய்க்கும், அவர்களுடைய குடும்பத்தவர்கள் என்ற அடிப்படையில் சுபவிபரங்கள் உள்ளிட்ட தகவல்களை வரிசை வரிசையாக சேகரித்துக் கொள்ள முடியுமான கருவியாக அமைகின்றது.

அதனால் இது உறுதியாகவே பிரஜைக்கும் அரசாங்கத்திற்குமிடையில் காணப்படுகின்ற தொடர்புகள் மற்றுமொரு வகையில் பிரஜைகளுக்கு பாதிப்புக்களை சேர்க்கும் விடயமாக அமைகின்றது. ஜனநாயக சமூகத்தில் காணப்பட வேண்டிய தனிநபர் சுதந்திரத்தையும் தனித்துவத்தையும் அரசாங்கம் ஆக்கிரமித்துக்கொள்ளும் விடயமாக இது காணப்படுகின்றது. இன்றைய அரச உளவுப் பிரிவு செயற்படும் விதத்திற்கமையவே இதன் ஆபத்துக்கள் அதிகரிக்கின்றன. வறிய நாடுகளில் கூட சகல துறைகளிலும் அரச பாதுகாப்பு மற்றும் உளவுப்பிரிவு நவீன இலத்திரனியல் தொழில்நுட்ப வசதிகளுடனும் பயிற்சிகளுடனும் மிகவும் உயர்ந்த நிலையில் காணப்படுகின்றன.

கடந்த தசாப்தங்களுக்கும் அதிக காலம் எமது நாட்டின் உளவுப் பிரிவும் அவ்வாறான முன்னேற்றங்களைப் பெற்றுள்ளது. உளவுப் பிரிவு மேம்படுத்தப்படுகின்ற சகல நாடுகளிலும் அடக்குமுறைகளும் விருத்தியடைகின்றன. அத்துடன் நாடுகளுக்கு இடையிலான ராஜதந்திர தொடர்புகளுக்கு அப்பாலான பூகோள எல்லைகளுக்கு அப்பாலான நெருங்கிய தொடர்புகளை உளவுப்பிரிவு கொண்டுள்ளது. அதற்கூடாக அவர்கள் மிகவும் இரகசியமான தகவல்களை கூட பரிமாரிக்கொள்கின்றனர்.

நவீன உலகில் இணையத்தள வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் கூடுதலாகப் பயன்படுத்தப்படுவது உளவுத் தகவல்களை களஞ்சியப்படுத்துவதற்கும் ஆராய்ச்சி செய்வதற்கும் தேவையான வகையில் அதனை இரகசியமாக பகிர்ந்து கொள்வதற்குமாகும்.

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் இன்று வாழ்க்கைத் தரவுகள் மற்றும் சுயவிபரங்களுடன் கூடிய தேசிய அடையாள அட்டை தனித்துவத்தை ஆக்கிரமிக்கின்றது என்கின்ற கலந்துரையாடல்களை தோற்றுவித்துள்ளது. பாகிஸ்தானின் ''தகவல் ஒழுங்கை பதிவுசெய்யும் தேசிய அதிகார சபை'' (NADRA) யினால் ''தேசிய ஆட்பெயர் தரவுத் திட்டம்'' முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதனை பயன்படுத்தி பாகிஸ்தான் பொலிஸ் ஆட்களை சோதிக்கும் புள்ளிவிபரக் கருவியொன்றை (DIGITAL APP) தயாரித்துக் கொண்டுள்ளது. அதனூடாக அவர்களுக்கு எந்தவொரு நபரினதும் பயணங்கள், இருக்கும் இடம், தொடர்புகொண்ட தொலைபேசி அழைப்புகள் போன்ற உடனடித் தகவல்களை பெற்றுக்கொள்ள முடியுமாக உள்ளது.


உலகின் மிகப் பெரிய வாழ்க்கைத் தரவு மற்றும் சுயவிபரத் தரவுகளை உள்ளடக்கிய தேசிய இலத்திரனியல் அடையாள அட்டை திட்டமொன்றான இந்தியாவின் 'ஆதார்' திட்டம் குறித்தும் பலத்த சந்தேகங்கள் மேலெழுந்துள்ளன. ஒரு சில அரச நிறுவனங்கள் அவற்றை பயன்படுத்தி செய்து வருகின்ற முறைகேடான செயற்பாடுகள் தொடர்பிலும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தனித்துவத்தை அடிப்படை உரிமையொன்றாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என இந்திய உச்ச நீதிமன்றத்தில் மனுவொன்றும் தாக்கல் செய்யப்பட்டது. அம்மனு மீதான விசாரணை ஒன்பது பேரை உள்ளடக்கிய நீதியரசர் குழுவினால் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

கடந்த ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி அது தொடர்பில் வழங்கப்பட்ட ஒரு தலைப்பட்ச தீர்ப்பில் தனித்துவமும் தனிநபர் சுதந்திரமும் மாற்றுவதற்கோ அல்லது நீக்குவதற்கோ முடியாத அடிப்படை உரிமையொன்றாக உள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்திய ஆதார் திட்டத்திற்கு எதிராக ஐவர் கொண்ட நீதியரசர் குழாமின் முன்னிலையில் முன்வைக்கப்பட்ட அடுத்த வழக்கில் தனித்துவம் புதியதோர் நிபந்தனையாக விதிக்கப்பட்டது.

வாழ்க்கைத் தரவு மற்றும் சுயவிபரத் தரவுகளுடன் கூடிய இலத்திரனியல் அடையாள அட்டை பிரஜைகளின் உரிமைகளுக்கு எவ்வளவு ஆபத்துமிக்கது என்கின்ற விடயத்தை விஷேடமாக கலந்துரையாடலுக்கு உட்படுத்த வேண்டியுள்ளது. இந்திய உச்ச நீதிமன்ற நீதியரசர் குழாமின் நீதிபதியொருவரான எஸ்.கே. கவுல் தனித்துவம் தொடர்பிலான மனு விசாரணையின் தீர்ப்பை பின்வருமாறு எழுதுகின்றார்.

''இக்கணிப்பீட்டு யுகத்தில் (DIGITAL APP) இணையத்தளத்தில் பதிந்துவைக்கின்ற தகவல்கள் அங்கு காணாமல் போகாத தகவல்களாக காணப்படுவது எமக்கு அழுத்தம் கொடுப்பதாக உள்ளது. மனிதனுக்கு மறந்து போனாலும் இணையத்திற்கு மறந்துபோவதில்லை. அத்துடன் மனிதனுக்கு மறந்துவிடுவதற்கு இடமளிப்பதுமில்லை. இணையதளத்தில் உள்ள தகவல்களை முற்று முழுதாக அழித்துவிட முடியாது. அதன் தடங்கள் மீதமாகின்றன. அதனால் இக்கணிப்பீட்டு யுகத்தில் பாதுகாப்பு என்பது பொதுவான சட்டமாக உள்ளதுடன் மறதி ஒரு போராட்டம் என்று கூறப்படுகின்றது.''




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• அனஸ் அப்பாஸ்

# சர்வ மதங்களுக்குமாக திறந்தது பள்ளிவாயல் கதவு!



செய்யித் அலி எனும் இந்தியர் ஒருவர் பஹ்ரைனில் "Discover Islam" எனும் தஃவா அமைப்பின் மூலம் ATMT (Awareness Through Mosque Tour - பள்ளிவாயல் ஊடான தெளிவூட்டல் சுற்றுலா) எனும் திட்டமொன்றை நடைமுறைக்குக் கொண்டுவந்தார். பொதுவாகவே முஸ்லிமல்லாதவர்களிடம் இஸ்லாத்தை அறிமுகப்படுத்தும் பல்வேறு வழிகள் இருந்தாலும், பள்ளிவாயலுக்குள் பிரவேசிக்க வேண்டுமென்ற ஆவல் சகோதர மதத்தவர்களிடம் அதிகம் இருப்பதால் இது இஸ்லாம் பற்றிய தப்பபிப்ராயங்களைக் களைய சிறந்த திட்டம் என்பதாக அவர் அறிமுகம் செய்தார்.

மார்ச் மாதம் இலங்கையில் இடம்பெற்ற இவ்வனுபவ பெருகைக்கான நிகழ்வில் சகோதர இனத்தவர் ஒருவர் ''பள்ளிவாயலுக்குள் கராத்தே பயிற்றுவிப்பு இடம்பெறுகின்றது. நூதனசாலைகளில் காணப்படும் பழங்கால ஆயுதங்கள் இருக்கின்றன என்று எண்ணித்தான் நான் இங்கு பார்க்க வந்தேன்'' என்பதாகச் சொல்லியிருக்கின்றார். இவ்வாறான தப்பபிப்ராயங்கள் இருப்பது நியாயமானதுதானே! பிற நம்பிக்கை கொண்டோரை அனுமதிக்காமல், பள்ளிவாயலை எமக்கு மட்டுமானது என்று கட்டிப்பிடித்துக் கொண்டு உரிமை கொண்டாடுகின்றோமே!







75 பேரளவில் இம்முறை பங்குபற்றியிருந்தனர். இவர்களில் அநேகர் முஸ்லிம் பெண்களாகவும் இருப்பதைக் கண்டு முஸ்லிம் பெண்கள் வருவதிலும் பிரச்சினையில்லையா? என அங்கு தெளிவுகளை வழங்கிக் கொண்டிருந்த சகோ. ஷிபானிடம் கேட்டேன்.

''அதில் ஆட்சேபனையே இல்லை. எமது முஸ்லிம் பெண்களும் பள்ளிவாயலுக்குள் என்ன நடக்கின்றது என்பது பற்றி அதிகம் தெரிந்திருப்பதில்லை. அவர்களுக்கும் பள்ளிக்கு வர ஆசை இருக்கின்றது. ஆனால், அடுத்த முறை வரும்போது தமது சகோதர இன நட்புக்களையும் அழைத்து வந்தால் இந்நிகழ்ச்சியின் வெற்றிக்கு பங்களித்தவர்களாக இருப்பர்'' என்றார்.

இலங்கையில் உள்ள அரச சார்பற்ற CIS (Centre for Islamic Studies) நிறுவனமானது மார்க்க தெளிவூட்டல் தொடர்பில் பஹ்ரைன் அமைப்புடன் தொடர்பில் இருந்ததால், இலங்கையில் இருந்து, ''மஸ்ஜித் ஊடான தெளிவூட்டல் பயிற்சி'' க்காக சீனா செல்வதற்கு இந்த நிகழ்ச்சியின் வளவாளர்களுக்கு வாய்ப்புக் கிட்டியிருந்தது. அந்த வரிசையில் இலங்கையிலிருந்து அசீப் ஹுஸைன் என்பவர் முதலில் சென்று பயிற்சி பெற்றுள்ளார். பின்னர் இந்த வருடம் ஆரம்பத்தில் அஷ்ஷெய்க் முனீர் முலாபர் (நளீமி), ஜலீல் முஹம்மத், ஷிபான் ரபாய்தீன் ஆகிய இலங்கை வளவாளர்கள் மூன்று பேர் பஹ்ரைன் சென்று தெளிவூட்டல் பயிற்சியையும், இஸ்லாமிய வரையறைகளையும் கற்றனர்.

2017 மார்ச் 26 ஆம் திகதி முதன் முதலில் பாரிய சவால்களுடன், மஸ்ஜித் நிர்வாக சபைகளுடன் போராட்டங்களின் பின்னே வெற்றிகரமான நிகழ்ச்சியை CIS நடாத்தியிருந்தது. இருந்தாலும் இதுவரை தேசிய அளவில் ஏனைய மஸ்ஜித்களில் இந்நிகழ்ச்சியைத் தொடர நிர்வாக சபைகள் புரிந்து செயல்படுமா என்பதில் சவால் இருப்பதாகவும் அறிய முடிகின்றது. கொழும்பு அக்பர் மஸ்ஜித் நிர்வாகம் மட்டுமே இதுவரை தமக்கு ஆதரவு தருவதாக ஏற்பாட்டுக் குழு கூறுகின்றது.

கொழும்பு, ஸ்லேவ் ஐலண்டிலுள்ள அக்பர் மஸ்ஜிதில் இம்மாதம் 10 ஆம் திகதி இரண்டாவது முறையாக இடம்பெற்ற நிகழ்வுக்கு வருகை தர சில சகோதர இனத்தவர் சிரமப்பட்டுள்ளனர். கொழும்பில் உள்ள அனைவருக்கும் வசதியான ஒரு மஸ்ஜிதில் இந்நிகழ்வை அடுத்த முறை ஏற்பாடு செய்ய முடியுமாக இருந்தால் நல்லது.

லண்டனில் இந்த "Open Mosque Tour" பிரபலம் என்பதாக அறிய முடிகின்றது. அதாவது, பெருநாள் தினத்தில் பள்ளிவாயல் அனைவருக்குமாக திறந்திருக்கும். சூழலில் இஸ்லாமிய கலாச்சாரத்தை பிரதிநிதிப்படுத்தும் கடைகள் வரிசை கட்டுமாம். உணவுகளும் பல விதங்களிலும் பகிரப்படும். சிறுவர் விளையாட்டு மையங்களும் அதில் இருக்கும். மருதாணி போட்டு விடும் கடைகள், இஸ்லாமிய எழுத்துக்களில் பெயர் எழுதிக் கொடுக்கும் கடைகள், Key Tags என அது ஒரு தனி ரகம்.

கொழும்பில் ஏற்பாடான இந்த நிகழ்வில் சிற்றுண்டியும், புத்தகப் பொதியும், அரபு மொழியில் பெயர்களை எழுதிக்கொடுக்கும் முயற்சியும் சிறப்பாக இருந்தது. தமது கேள்விகளுக்கான தெளிவுகள் கிடைத்ததையிட்டு பிரகாசமான முகங்களை அங்கு காணக் கிடைத்தது.

www.visitmymosque.lk இல் இந்நிகழ்வு குறித்த விபரங்களும், படங்களும் கிடைக்கின்றன. 0766633629, 0774835972 ஆகிய இலக்கங்களைத் தொடர்பு கொண்டும் ஏற்பாட்டாளர்களை அணுக முடியும்!

''முஸ்லிம் பள்ளிவாயலுக்குள், சகோதர இனத்தவரை அனுமதிப்பதா? அஸ்தஹ்பிருல்லாஹ்'' என்பதாக நேற்று வரை நீங்கள் புருவம் உயர்த்திருக்கலாம். ஆனால், பர்மா நிலவரங்கள் ஒரு சமூகம் தனித்து இருப்பதன் அபாயத்தை முழு உலகுக்கும் உணர்த்திய இத்தருணத்திலும், ''அஸ்தஹ்பிருல்லாஹ் சொல்லி முடிப்பதா? மாஷா அல்லாஹ் சொல்லி இத்திட்டத்தை வரவேற்பதா?'' என்பது உங்கள் சிந்தனைக்கே விட்டு விடுகின்றேன்.

ஐக்கிய நாடுகள் சபையின் வளங்குன்றா வளர்ச்சிக் குறிக்கோள்கள் "SDGs & Sustainable Development Goals" குறித்து முழு உலகும் இப்போது பேசும் நிலையில், வெளிப்படைத் தன்மை (Transparency) என்பது நிகழ்கால சவால்களை முறியடிக்க பெரிதும் உதவும். பள்ளிவாயலுக்குள் என்ன நடக்கின்றது என்பதை உரத்துச் சொல்வோம். அதுதான் எமது கடமையும்.

• உஸ்தாத் ஆஸாத் அப்துல் முஈத்

## ஷூரா எனும் பொறிமுறையைப் பலப்படுத்துவோம் (03)

# முடிவு யாருடையது?



ஷூரா தொடர்பான விவகாரங்களில் ''முடிவு எடுக்கும் அதிகாரம் யாருக்குக் காணப்படுகின்றது'' என்பது முக்கிய இடத்தை எடுத்துள்ளது. அதாவது முடிவு எடுக்கும் அதிகாரம் தலைவருடன் தொடர்பான ஒரு விடயமா, அல்லது கூட்டத்தின் பெரும்பான்மையினர் கருதும் கருத்துக்கு ஏற்ப முடிவுகள் பெறப்பட வேண்டுமா?

சமூக மட்டத்தில் ஷூரா எனும் பொறிமுறையை அமுலாக்கும் பல நிறுவனங்களில் இது பற்றிய தெளிவு இல்லாத நிலை காணப்படுகின்றது. அல்லது தலைவரின் கருத்துக்கு தலைசாய்க்கும் போக்கை நாம் பல இடங்களில் காணலாம்.

மற்றும் தலைவரின் சொல்லை மீறி கருத்துத் தெரிவிக்கக் கூடாது என்ற மனோநிலையும் சமூக மட்டத்தில் காணப்படுகின்றது. அவ்வாறு தலைவரின் கருத்துக்கு மாற்றமான கருத்தைத் தெரிவிப்பது பிழை என்ற நிலைப்பாடும் உள்ளது. இன்னும் சில இடங்களில் தலைவரின் கருத்துக்கு முன்னால் கருத்துத் தெரிவிக்கப் பயப்படுவோரும் காணப்படுகின்றனர்.

இது விடயமாக இஸ்லாமிய அறிஞர்கள் தெளிவாக விளக்கியுள்ளனர். குறிப்பாக தற்கால உலமாக்கள் இது தொடர்பான ஷரீஅத் நிலைப்பாட்டை விரிவாக எழுதியுள்ளனர். இது தொடர்பான சில கருத்துக்களை இங்கு நோக்குவோம்.

கலந்துரையாடலின் பின்னர் தலைவர் பொருத்தமாகக் கருதும் கருத்தை முடிவாகப் பெற முடியும் என்ற கருத்தில் பொதுவாக ஆரம்ப கால அறிஞர்கள் உள்ளனர். அதற்கு ஒரு நியாயம் உள்ளது. ஒரு நாட்டின் தலைவர் முஜ்தஹிதாக (சட்ட வல்லுனராக) இருக்க வேண்டும் என்ற கருத்து அறிஞர்களுக்கு மத்தியில் இருந்து வந்துள்ளது. இதனால் சட்டங்கள் பெற தேவை ஏற்படும் சமயத்தில் தலைவர் அதற்கு தகுதி பெற்ற நிலையில் இருக்கின்றார் என்ற வகையில் அப்படியான ஒரு கருத்தை அவர்கள் கூறியிருக்கின்றனர்.

ஆனால் ஸீராவைப் படிக்கும் போதும், ஸஹாபாக்களின் நடைமுறையைப் பார்க்கும் போதும் ஷூராவின் பெரும்பான்மைக் கருத்தை முடிவாக எடுக்க வேண்டும் என்பதே பலமான கருத்தாக உள்ளதாக கலாநிதி அஹ்மத் ரைஸூனி கருதுகின்றார்.

இக்கருத்தை அதிகமான இஸ்லாமிய அறிஞர்களும் கொண்டுள்ளனர். ஷெய்க் முஹம்மத் அல் கஸ்ஸாலி, முஸ்தபா அஸ் ஸிபாஇ, மஹ்மூத் ஷல்தூத், மஃரூப் தவாலீபி, ஸஈத் ஹவா, தவ்பீக் ஷாவி, அப்துல் காகம் ஸைதான், யூசுப் அல் கர்ளாவி, அலி முஹம்மத் ஸல்லாபி, அக்ரம் ழியா அல் உமரி போன்ற பலர் இக்கருத்தில் உள்ளனர்.

நபி (ஸல்) அவர்கள் இது பற்றிய வழிகாட்டல்களையும் தலைமைக்குக் கூறியுள்ளார்கள். ''நீங்கள் இருவரும் (அபூ பக்ர், உமர்) ஒரு கருத்தில் உடன்பட்டால் அதற்கு நான் முரண்பட மாட்டேன்'' என நபியவர்கள் கூறினார்கள். (முஸ்னத் அஹ்மத்)

ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே உறுதி என்பது என்ன என்று வினவிய போது: அறிவுள்ளவரிடம், (மற்றொரு அறிவிப்பில் கருத்துள்ளவரிடம்) கலந்தாலோசனை செய்து அதற்குக் கட்டுப்படுவதாகும் எனக் கூறினார்கள். (பத்ஹுல் பாரி)

பத்ர் யுத்தம் தொடர்வது பற்றி நபி (ஸல்) அவர்கள் தனது தோழர்களிடம் ஆலோசனை கேட்டார்கள். அப்போது அபூ பக்ர், உமர், மிக்தாத் போன்ற ஸஹாபிகள் தமது கருத்துக்களை தெரிவித்தார்கள். எனினும் நபியவர்கள் அன்ஸாரித் தோழர்களின் கருத்தை [illegible] கருத்துக்களை கூறுமாறு [illegible] முஹாஜிரீன் தோழர்களை விட அன்ஸாரித் தோழர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததன் காரணமாக என இமாம் இப்னு இஸ்ஹாக் தெரிவிக்கின்றார்.

இதே போன்று உஹத் யுத்தத்தின் போது மதீனாவின் உள்ளே இருந்து போராடுவதா அல்லது மதீனாவுக்கு வெளியே சென்று போராடுவதா என்பது பற்றி நபியவர்கள் ஸஹாபிகளுடன் கலந்தாலோசித்து அதிகமானவர்களின் கருத்துக்கு ஏற்ப மதீனாவுக்கு வெளியே சென்று போராடினார்கள். இது விடயத்தின் நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு உள்ளே இருந்து போராட வேண்டும் என்ற கருத்தில் இருந்தார்கள். எனினும் பெரும்பான்மையினரின் கருத்தை தனது கருத்தாக இறுதியில் எடுத்து அமுல்படுத்தினார்கள்.

அகழி யுத்தத்தின் போது முஷ்ரிக்குகள், யூதர்கள், முனாபிக்குகள் அனைவரும் ஒன்றாக முஸ்லிம்களுக்கு எதிராக இணைந்தார்கள். இதன் கனதியைக் தணிப்பதற்காக நபி (ஸல்) அவர்கள் கத்பான் கோத்திரத்தாருடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார்கள். அதன்படி தாம் முஸ்லிம்களுக்கு சார்பாக நடக்க வேண்டும் எனவும் அதற்காக அவ்வருட மதீனா நகர விளைச்சலில் மூன்றில் ஒன்றைத் தருவதாகவும் கூறினார்கள்.

எனினும் இது விடயமாக தனது தோழர்களுடன் [illegible] முடிவை எடுக்க முடியும் [illegible] தெரிவித்தார்கள். இது தொடர்பாக குறிப்பாக அன்ஸாரிகளுடன் கலந்துரையாடிய போது அவர்கள் இந்த உடன்படிக்கையை ஏற்க முடியாது எனவும், நாம் அவர்களுக்கு முன்னால் இழிந்து போக முடியாது எனவும் தெரிவித்தார்கள். பின்னர் நபி (ஸல்) அவர்கள் தனது கருத்தை விட்டுக் கொடுத்து அன்ஸாரிகளது கருத்தை ஏற்றுக் கொண்டு கத்பான் கோத்திரத்தாருடன் செய்ய விருந்து ஒப்பந்தத்தைக் கைவிட்டு விட்டார்கள். (ஸீரதுல் இப்னி ஹிஷாம்)

உமர் இப்னுல் அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் மதீனாவின் கவர்னர் பொறுப்பை ஏற்றதன் பின்னர் அங்கு காணப்பட்ட பத்து சட்ட வல்லுனர்களை அழைத்துக் கூறினார்கள்: நான் உங்களை நன்மை தரும் ஒரு விடயத்திற்காக அழைத்தேன். நீங்கள் சத்தியத்திற்கு உதவியாளர்களாக இருக்க வேண்டும். உங்களின் கருத்தைப் பெறாமல், அல்லது உங்களில் சமூகம் தந்தவர்களின் கருத்தைப் பெறாமல் நான் முடிவுகள் பெற மாட்டேன். (சமூகங்களின் அரசர்களின் வரலாறு - இமாம் தபரி)

பெரும்பான்மைக் கருத்தை முடிவாக எடுக்காமல் தலைவர் பொருத்தமாகக் கருதும் கருத்தை அமுல்படுத்துவது என்பது பல போது சர்வாதிகார நிலைமைகளை தோற்றுவிக்கலாம். அதே நேரம் முரண்பாட்டு நிலைமைகளை உருவாக்கலாம்.

தற்காலத்தில் நாம் அரபு இஸ்லாமிய நாடுகளில் காணப்படும் சர்வாதிகாரம் மற்றும் அடக்குமுறைக்கு ஷூரா என்ற பொறிமுறையை பிழையாக பிரயோகம் செய்வதை ஒரு பிரதான காரணியாக உள்ளதை அவதானிக்கலாம். மற்றும் நிறுவனங்கள் அமைப்புக்களில் காணப்படுகின்ற முரண்பாட்டுக்கும், ஒத்துழையாமைக்கும் தலைவரின் தனிப்பட்ட போக்கும், தனது அதிகாரத்தை முடிவெடுப்பதில் பிரயோகிப்பதையும் காரணமாக அடையாளப்படுத்தலாம்.

ஷூரா சபையில் கலந்து கொள்ளும் ஆளுமைகள் சரியான அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டவர்களாக இருக்குமாயின் நிச்சயமாக அவர்களது கருத்துக்கள் தரமானதாகவும், ஆதாரபூர்வமானதாகவும் இருப்பதற்கான வாய்ப்புக்களே அதிகம். எனவே இவர்களது கருத்துக்களை கேட்கும் இடமாக மாத்திரம் ஷூரா சபைகள் காணப்பட்டு, தலைவர் தான் திருப்திகாணும் கருத்தை மாத்திரம் முடிவாக எடுக்குமாயின் ஷூரா செய்வதன் நோக்கம் பிழைத்து விடும். (தொடரும்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



• முஹம்மத் பகீஹுத்தீன்

# கருக்கலைப்பு சம்பந்தமான இஸ்லாத்தின் நிலைப்பாடு



குடும்பம் என்பது ஒரு சமூகத்தின் மூலக்கரு. அது மானிட சமூகத்தின் அடிக்கல். மானிட சமூகத்தின் சிறிதாக்கப்பட்ட வடிவம்தான் குடும்பம் என்பர்.

இஸ்லாத்தைப் பொறுத்தவரையில், குடும்பம் என்ற நிறுவனத்தை மிகவும் புனிதமான ஒன்றாகக் கருதுகிறது. இஸ்லாம் இயற்கை மார்க்கம் என்ற அடிப்படையில், அது மனித அபிவிருத்தியில் இயற்கை வரம்பை மீறாமல் செய்றபடும் குடும்ப அமைப்புக்கு அதிகூடிய முக்கியத்துவத்தினை வழங்கியுள்ளது. எனவேதான் திருமணம் முடித்து குடும்பமாக வாழ்வதை மனித இயல்புக்கு அப்பால் அதனை ஒரு வணக்கமாக இஸ்லாம் பார்க்கிறது.

### குடும்ப வாழ்வின் நோக்கம்

குடும்ப வாழ்வின் நோக்கங்களில் ஒன்று ஸாலிஹான சந்ததியை உருவாக்குவதாகும். சீரான சமூகக் கட்டமைப்பை உருவாக்குவதும் அதன் நோக்கங்களில் ஒன்றே. ஒரு சமூகத்தின் இருப்பு குடும்ப வாழ்வில் தங்கியுள்ளதால் அதனை பாதுகாப்பது இன்றியமையாது.

தூய்மையான சந்ததி நிலைபெறுவதற்காக திருமணம் என்ற ஒழுங்கை கடைப்பிடிக்குமாறும் அதனை முக்கிய ஒரு சுன்னாவாகவும் விதித்துள்ளது. மனித இனம் நிலைபெற வேண்டுமென்பது திருமண அமைப்பின் அடிப்படை நோக்கங்களில் ஒன்றாகும். இனப்பெருக்கத்தின் மூலமே மனித இனம் நிலைக்க முடியும். இஸ்லாம் இனப்பெருக்கத்தை விரும்பி உற்சாகப்படுத்துகின்றது.

### மேற்கத்தேய நாடுகளில் குடும்பம்

மேற்கத்தேய சமூகம் வாழ்வியல் விவகாரங்களிலிருந்து மதத்தை பிரிக்கும் மதச்சார்பின்மை என்ற கோட்பாட்டை மக்கள் மத்தியில் திணித்துள்ளது. இதனால் மேற்கத்தேய சமூகம் தனிநபர் சுதந்திரத்தை புனிதப்படுத்துகிறது. அதன் விளைவாக திருமண வரம்பிற்கு அப்பாற்பட்ட கள்ள உறவுகளும், விபச்சாரமும் பெருகி கருக்கலைப்பும் சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மேற்குலகில் குடும்பம் என்ற கட்டமைப்பு அவசியமில்லை என்ற மனோபாவம் வளர்ந்துள்ளதால் எதிர்கொள்ள முடியாத பல சவால்களுக்கு மேற்குலகு முகங்கொடுத்துக் கொண்டிருக்கிறது. கட்டுப்பாடற்ற குடும்ப வாழ்வு மனோபாவத்தினால் பாடசாலைப் பருவத்திலேயே சின்னஞ் சிறு வயதுடைய சிறுமிகள் பல முறைகள் கருக்கலைப்பு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

விபச்சாரத்தின் மூலம் பிறக்கின்ற இத்தகைய குழந்தைகளை கவனிக்கக் கூடிய பொறுப்பு தாயின் மீது விழுவதால் கருக்கலைப்பு செய்வதற்கான அனுமதியை மேற்கத்திய நாடுகள் வழங்குகின்றன.

மேற்குலம் முஸ்லிம் சமூகத்தின் ஆரோக்கியமான குடும்ப அமைப்பை சிதைப்பதற்காக முஸ்லிம் நாடுகளிலும் கருக்கலைப்பை சட்டப்பூர்வமாக்க வேண்டுமென்று திட்டம் தீட்டுகின்றனர். இதன்மூலம் முஸ்லிம்களின் குடும்பக் கட்டமைப்பை தகர்த்தெறிந்து, முஸ்லிம்களை இஸ்லாத்தை விட்டும் வெகு தூரமாக்க வேண்டுமென்று எத்தனிக்கிறார்கள்.

### கருக்கலைப்பு பற்றிய ஷரீஆவின் பார்வை

கருக்கலைப்பு என்பது கருவை கருப்பையிலிருந்து வெளியேற்றுவதாகும். பிரசவ காலம் பூர்த்தியாவதற்கு முன்பு கருவை கருப்பையிலிருந்து வெளியேற்றுவதையே கருக்கலைப்பு என்பதாக இஸ்லாமிய அறிஞர்கள் வரையறுக்கின்றனர்.

பிரத்தியோகமான மருந்து சாப்பிடுதல், சுமை தூக்குதல், மருத்துவரை அணுகி கருக்கலைப்பு செய்யக் கோருதல் போன்ற முறைகளில் கருவைக் கலைக்கலாம். கருக்கலைப்பு என்பது கருவிற்கு ரூஹ் கொடுக்கப்படுவதற்கு முன்போ அல்லது பின்போ நடக்கலாம்.

கருவிற்கு ரூஹ் கொடுக்கப்படுவதற்கு முன்னர் கருக்கலைப்பு செய்வது குறித்து அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளது. கருத்தரித்த பின்புள்ள படிநிலைகளைப் பொறுத்து சிலர் அதை அனுமதிக்கவும், சிலர் அதை தடைசெய்யவும் செய்கின்றனர்.

கருத்தரித்து நாற்பது நாட்களுக்கு முன்னர் செய்யப்படும் கருக்கலைப்பை பொறுத்தவரை அது அனுமதிக்கப்பட்டதாகும். கருவின் மீதான தாக்குதலாக அல்லது சிசுக் கொலையாக இது கருதப்பட மாட்டாது. நாற்பது நாட்களுக்கு முன்னர் உள்ள கட்டம் 'நுத்பா' படிநிலை என வழங்கப்படுகிறது. இந்நிலையில் கருவை கலைப்பதானது அது முதிர் கருவாக மாறுவதற்கு முன்பு கலைப்பதாகும். அதனை குழந்தை பிறப்பை தடுப்பதற்காக மேற்கொள்ளும் அஸ்ல் செய்வது என்ற நிலைக்கு ஒத்ததாகவே சில அறிர்ஞர்கள் பார்க்கின்றனர்.

'அஸ்ல்' என்பது ஆண் தனது இந்திரியத்தைப் பெண்ணின் கர்ப்பவறையைப் போய் அடைய விடாது தடுத்துக் கொள்வதைக் குறிக்கும். இன்னும் சில அறிஞர்கள் இந்நிலையிலும் நியாயமான காரணங்கள் எதுவுமின்றி கருக்கலைப்பு செய்வது ஹராம் எனக் கூறியுள்ளனர். முஸ்லிம் அறிஞர்களின் ஒருமித்த கருத்தின்படி ரூஹ் கொடுக்கப்பட்ட பின்பு கருவைக் கலைப்பது ஹராமாகும். இதற்கு ஆதாராரமாக பின்வரும் ஹதீஸ் காணப்படுகிறது.

'பனூ லிஹ்யான்' குலத்தைச் சேர்ந்த (கர்ப்பிணி) பெண் ஒருத்தியின் (வயிற்றிலிருந்த) சிசு, (மற்றொரு பெண் அடித்ததால்) இறந்து பிறந்தது. அதற்கு நஷ்டஈடாக ஓர் ஆண் அடிமையை, அல்லது ஓர் அடிமைப் பெண்ணை வழங்கிட வேண்டுமென இறைத்தூதர் அவர்கள் தீர்ப்பளித்தார்கள். (அபூ ஹுரைரா ரழி, புகாரி, முஸ்லிம்) இங்கு ஒரு உயிருக்கு பகரமாக நஷ்டஈட்டை வழங்குமாறு நபிகளார் பணித்துள்ளார்கள்.

ஆயினும், ஷரீஆ அனுமதிக்கும் நியாயமான காரணங்களுக்காகக் குடும்பக் கட்டுப்பாட்டிற்கு அனுமதி வழங்குகின்றது. நபிகளாரின் காலத்தில் குடும்பக் கட்டுப்பாட்டிற்குரிய வழிமுறையாக அமைந்தது 'அஸ்ல்' எனும் செயற்பாடாகும். 'அஸ்ல்' என்பது ஆண் தனது இந்திரியத்தைப் பெண்ணின் கர்ப்பவறையைப் போய் அடைய விடாது தடுத்துக் கொள்வதைக் குறிக்கும். நபித்தோழர்கள் இம்முறையைக் கையாள்வோராய் இருந்துள்ளனர்.

'அல்குர்ஆன் இறங்கிக் கொண்டிருந்த வேளையில் நாங்கள் 'அஸ்ல்' செய்வோராய் இருந்தோம்' என ஜாபிர் (ரழி) கூறியுள்ளார். (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

மேலும் ஒரு சந்தர்ப்பத்தில் உமர் (ரழி) அவர்களது அவையில் 'அஸ்ல்' பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டது. அங்கு வீற்றிருந்த ஒருவர், 'அது சிறிய கொலை என நம்பப்படுகிறது' என்றார். அவ்வேளை அங்கிருந்த அலி (ரழி), 'அது கொலையல்ல. அது கொலையாக அமைய (குறித்த கரு) ஏழு கட்டங்களைக் கடந்திருக்க வேண்டும். அவை யாவன: களிமண் சத்து, இந்திரியத் துளி, இரத்தக்கட்டி, எலும்புத் தொகுதி, சதையமைப்பு, வேறு (முழு) உருவம்' என்றார்கள். இதனைக் கேட்ட உமர் (ரழி) 'அலியே, உண்மை சொன்னீர், அல்லாஹ் உமக்கு நீண்ட ஆயுளை அளிப்பானாக' எனக் கூறினார்.

நியாயமான காரணங்களுக்காகக் குடும்பக் கட்டுப்பாடு செய்வதனை இஸ்லாம் அனுமதித்திருப்பினும், கருச்சிதைவை அது அனுமதிப்பதில்லை. அக்கருவானது ஹராமான முறையில் தரித்திருப்பினும் சரியே, ஒரு கருவை அதற்கு ரூஹ் ஊதப்பட்டதன் பின்னர் சிதைப்பது ஹராமான மாபெரும் குற்றமாகும்.

ஆயினும், குறித்த கருவானது சிதைக்கப்படாது தொடர்ந்து தாயின் வயிற்றில் இருப்பது அவளின் உயிருக்கு ஆபத்தையேற்படுத்தும் என்பது உறுதியாகத் தெரியவரின் இரு தீங்குகளில் ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டியிருப்பின், அவற்றில் குறைந்ததைத் தெரிவு செய்தல் வேண்டும் எனும் சட்டவிதியின் அடிப்படையில் கருவைச் சிதைப்பதைத் தவிர வேறு வழியே இல்லாத போது அதற்கு அனுமதியுண்டு. (பக். 14)

---



• ஷெய்க் அக்ரம் அப்துல் ஸமத்

## மகாஸித் தேடல்கள் (3)

# மகாஸித் சிந்தனையும் மகாஸித் கலையும்



அண்மையில் மகாஸித் சிந்தனையாளர் கலாநிதி வஸ்பி ஆஷுர் அவர்களிடம், இஸ்லாத்தின் ஏனைய கலைகளுடன் ஒப்பிடும் பொழுது மகாஸித் கலை புதியதா? என்று ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு அவர் பதில் தரும்போது ''மகாஸித் சிந்தனையையும் மகாஸித் கலையையும் நாம் வேறுபடுத்திப் புரிந்து கொள்ளல் வேண்டும், மகாஸித் சிந்தனை வஹி இறங்கிய சந்தர்ப்பத்துடனேயே தோற்றம் பெற்றது. வஹி பேசிய ஒவ்வொரு விடயமும் நோக்கங்கள் கொண்டதாகவே காணப்பட்டது. அல்லாஹுதஆலா தன்னை 'ஹகீம்' என்று அடையாளப்படுத்துகிறான். அதன் பொருள் என்ன? அவன் எதனையும் காரணமின்றி செய்ய மாட்டான், எல்லாவற்றிற்கும் நோக்கம் இருக்கிறது என்பதாகும். ஆனால் மகாஸித் ஒரு கலையாக வளர்ச்சியடைந்தமை பிற்பட்ட காலத்திலேயே நிகழ்ந்திருக்கிறது''.[1]

இந்த வார்த்தைகளில் இருந்து புரிந்து கொள்ளும் உண்மை என்னவெனின், மகாஸித் சிந்தனைக்கு காலவரையறைகள், தோற்றம், முடிவு என்ற விடயங்கள் கிடையாது. அது எல்லாக் காலத்திலும் இருக்க முடியுமானது. ஆனால் மகாஸித் ஒரு கலை என்ற வடிவில் அது தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்த ஒரு வரலாறு இருக்கிறது. இது எல்லா இஸ்லாமிய கலைகளுக்கும் பொருந்தும். அங்கு தோற்றம், வளர்ச்சி, ஏற்ற இறக்கங்கள், ஏன்? முடிவைக் கூட சிலவற்றில் காணக் கூடியதாக இருக்கும்.

மகாஸித் சிந்திப்பு என்றால் என்ன? எளிமையாக் சொன்னால், எந்தவொரு விடயத்தையும் அதன் இலக்கு மையப்பட்டு சிந்திப்பது அல்லது அதன் நோக்கம் என்ன என்ற அடிப்படையில் சிந்திப்பது, மகாஸித் சிந்திப்பு எனப்படும். இந்த வகையான சிந்திப்பு முறைமை இஸ்லாத்தின் ஆரம்பம் முதலேயே இருந்திருக்கிறது. ஸஹாபாக்களது பத்வாக்களில் இந்த உண்மையை நாம் தெளிவாகக் காணலாம்.

உமர் (ரழி) அவர்களது காலத்தில் மதுபானம் அருந்தியவருக்கான தண்டனை குறித்து ஸஹாபாக்கள் மத்தியில் ஆலோசனை நடைபெற்றது. அப்போது அலி (ரழி) அவர்கள் எண்பது கசையடிகள் வழங்குவதே பொருத்தமானது. ஏனெனில் மது அருந்தினால் போதை ஏற்படும். போதை ஏற்பட்டால் உளரத் தொடங்குவான். உளரினால் பிறர் மீது அவதூறு சொல்லத் தொடங்குவான். அவதூறு சொல்பவனுக்கு எண்பது கசையடிகள் வழங்கப்படும். அந்தவகையில் அவதூறுக்கான தண்டனையையே இதற்கும் வழங்கலாம் என்றார்கள். அதன் பின்னர் உமரவர்கள் மதுபானம் அருந்துபவருக்கு எண்பது கசையடிகள் வழங்கினார்கள். (முஅத்தா மாலிக்)

கலாநிதி இமாதுத்தீன் அர்ரஷீத் அவர்கள் இந்த சம்பவத்தை விளங்கப்படுத்தும் பொழுது, மது அருந்தியவன் உலகில் ஒரு தண்டனை வழங்கப்படுவதற்கான நியாயம் என்ன என்பதைத் தான், உண்மையில் அலி (ரழி) அவர்களது தர்க்கம் விளங்கப்படுத்துகிறது. உலகியல் தண்டனைக்குப் போதை ஏற்படுதல் என்பது மாத்திரம் காரணமல்ல, மாற்றமாக போதையினால் ஏற்படும் சமூகப் பாதிப்பையும் கருத்தில் கொண்டு தான் உலகியல் தண்டனை வரையறுக்கப்படுகிறது. அந்தவகையில் இங்கு அலி (ரழி) அவர்களது சிந்தனை தண்டனை ஏன் வழங்கப்படல் வேண்டும்? என்ற கேள்வியை மையப்படுத்தியே அமைந்திருந்தது என்கிறார்.[2] இதனைத்தான் மகாஸித் சிந்திப்பு என்கிறோம்.

மற்றோர் உதாரணத்தைப் பாருங்கள், உமர் (ரழி) அவர்கள் காலத்தில் யமன் பிரதேசத்தில் பலர் இணைந்து ஒரு சிறுவனை படுகொலை செய்கிறார்கள். இதற்கு உமரவர்கள் அந்த அனைவரும் பலிக்குப் பலி வாங்கப்படல் வேண்டும் என தீர்ப்பளிக்கிறார்கள். அத்துடன் 'ஸன்ஆ வாசிகள் அனைவரும் இந்தக் கொலையில் பங்கெடுத்திருந்தாலும் அவர்கள் அனைவரையும் கொலை செய்திருப்பேன்' என்றார்கள். (புஹாரி)

கலாநிதி வஸ்பி ஆஷுர் அவர்கள் கூறுவது போல்[3], ஒருவருக்காகப் பலர் பலிவாங்கப்படுவது நியாயமற்றது போல் தோன்றினாலும், உண்மையில் பலிக்குப் பலி வாங்குதல் எனும் சட்டத்தின் நோக்கத்தின் அடியாக நின்று பார்க்கின்ற பொழுது அதில் ஒரு பெரிய நியாயமிருப்பதைக் கண்டு கொள்ளலாம். உமரவர்களும் அந்த நோக்கத்தின் அடிப்படையிலேயே இந்த விவகாரத்தை அணுகியிருக்கிறார்கள்.

''பலிக்குப்பலி வாங்குவதில் உங்களுக்கு வாழ்க்கை இருக்கிறது'' (பகரா: 179) என்று அல்குர்ஆன் இதன் நோக்கத்தை தெளிவுபடுத்துகிறது. மனித உயிர்கள் பாதுகாக்கப்படல் வேண்டும் என்பதே இந்த சட்டத்தின் மக்ஸத். ஒருவர் கொலை செய்யப்படும் பொழுது அதற்காகக் கொலை செய்தவரும் கொல்லப்படுவார் என்ற நிலை இருக்கின்ற பொழுது இயல்பாகவே அந்த செயலுக்கு யாரும் துணிய மாட்டார்கள். ஒரு தடவைக்குப் பல தடவைகள் யோசிப்பார்கள்.

இங்கு கொலை செய்தவர் ஒருவராக இருந்தாலும் பலராக இருந்தாலும் அவர்கள் பலிவாங்கப்படுவார்கள் என்றிருக்கின்ற பொழுதே உயிர்கள் பாதுகாக்கப்படுவதற்கான உத்தரவாதம் அங்கிருக்கும். பலர் சேர்ந்து செய்கின்ற கொலைக்குப் பலிக்குப் பலி கிடையாது என்றிருப்பின், எந்தக் கொலையின் போதும் தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கு இந்த வழிமுறை பின்பற்றப்பட வாய்ப்பிருக்கிறது. அது உயிர்கள் பாதுகாக்கப்படுதல் எனும் நோக்கத்திற்கு முரணானதாகவே இருக்கும். எனவே உமரவர்களுடைய மகாஸிதிய சிந்திப்பே இத்தகையதொரு முடிவை எடுக்க வைத்தது.

அண்மையில் கலாநிதி ஜாஸிர் அவ்தா அவர்கள், வெளிவர இருக்கின்ற ''மகாஸிதிய சிந்தனை - முஸ்லிமின் சிந்தனையை ஒழுங்கமைப்பதற்கான மீள் வாசிப்புகள்'' என்ற தனது புதிய நூல் பற்றி தனது முகநூலில் ஒரு பதிவை இட்டிருந்தார்.[4] குறித்த நூலின் உள்ளடக்கப் பரப்பு என்ன என்பது அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மகாஸிதிய சிந்திப்பு என்றால் என்ன? என்பதைச் சொல்ல அந்த உள்ளடக்கத் தலைப்புகள் மட்டுமே போதுமானதாக இருந்தது. அதாவது, எது நோக்கம்? எது முக்கியம்? எது அடிப்படை? எது கட்டாயம்? எது பொருத்தம்? என்ற வகையான சிந்திப்பு முறையையே அவர் மகாஸிதிய சிந்திப்பு என அடையாளம் காட்டுவதை அவதானிக்க முடிந்தது. அதாவது முக்கியமானதை நோக்கி, அடிப்படையானதை நோக்கி கவனம் திருப்பப்படுவதுதான் உண்மையில் நோக்கத்தைத் தேடும் முயற்சியாகும். இதுதான் மகாஸிதிய சிந்திப்பு.

இந்த சிந்திப்பு முறை இஸ்லாத்தின் ஆரம்ப காலம் முதல் தொடர்ந்தும் இருந்து வந்திருக்கிறது. ஆனால் மகாஸிதுஷ் ஷரீஆ என்ற ஒரு கலை தனியாகத் தோற்றம் பெற்றமை பிற்பட்ட காலத்திலேயே நிகழ்ந்திருக்கிறது. வஹி இறங்கிய காலப்பகுதியில் எந்த இஸ்லாமியக் கலையும் தனித்து வெளித் தெரியவில்லை. அனைத்துக் கலைகளும் அல்குர்ஆன்-ஸுன்னா என்ற இரண்டிற்கும் உள்ளேயே பொதிந்திருந்தன. கால வோட்டத்தில் மனித சிந்தனையின் வளர்ச்சிக்கு ஏற்ப தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹ், அகீதா என இஸ்லாத்தின் கலைகள் தனியாகத் தோற்றம் பெற ஆரம்பித்தன. அதன் தொடரிலேயே மகாஸிதும் ஒரு கலையாக அடையாளம் காணப்பட்டது.

மகாஸித் ஒரு கலை என்பதன் பொருள் என்ன? எளிமையாகச் சொன்னால் அது ஒரு தனித் துறையாகக் காணப்படுகிறது. அதற்கு ஒரு வரைவிலக்கணம் இருக்கிறது. நோக்கம் இருக்கிறது. அது செய்யும் ஒரு பணி இருக்கிறது. அதற்கான வகைப்பாடுகள் இருக்கின்றன. உருவான ஒரு வரலாறு இருக்கின்றது. அதற்கான அறிஞர்கள் இருக்கிறார்கள். இந்த வடிவங்களைப் பெற்ற ஒன்றைத்தான் நாம் கலை என்போம். ஷரீஆப் பரப்புக்குள்ளே தப்ஸீர் கலை, ஹதீஸ் கலை, பிக்ஹ் கலை, உஸூல் பிக்ஹ் கலை என ஒவ்வொன்றும் இத்தகைய வடிவங்களைக் கொண்டதாகவே அமைந்துள்ளன. மகாஸிதின் இந்த வடிவங்களை அறிமுகம் செய்வதையே இந்த தொடர் பத்தி முக்கிய நோக்கமாகக் கொள்கிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களப் பாடசாலைகளில் கற்கும் முஸ்லிம் மாணவர்கள்

இலங்கையில் முறைசார் கல்வியின் அடிப்படையாகவுள்ள பாடசாலைக் கல்வியில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் ஊடக மொழியாகக் கொண்டிருப்பவர்கள் முஸ்லிம் மாணவர்களே. தமிழ் மொழி மூல முஸ்லிம் மாணவர்கள் 70% எனவும் சிங்களத்தை ஊடக மொழியாகக் கொண்டுள்ள மாணவர்கள் 20% எனவும் ஆங்கிலத்தை ஊடக மொழியாகக் கொண்டுள்ள மாணவர்கள் 10% எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது.

மாறிச் செல்லும் முஸ்லிம் மாணவர்களின் ஊடக மொழிமாற்றம் பல்வேறு வகையான சமூக, கலாசார, கல்வி சார் பிரச்சினைகளை உருவாக்கி வருகின்றது. மிகக் குறிப்பாக சிங்கள மொழி மூல மாணவர்களது கல்வி அடைவு மற்றும் கலாசாரம் சார்ந்த நெருக்கடிகள், பிரச்சினைகள் பற்றி இன்று விரிவாக விவாதிக்கப்படுகின்றது.

சிங்கள மொழியில் கற்கும் முஸ்லிம் மாணவர்கள் தொகை வருடா வருடம் அதிகரித்துச் செல்கின்றது. சிங்கள மொழி மூல முஸ்லிம் மாணவர்கள் இரண்டு வகையிலுள்ளனர். சிங்கள, தமிழ் இருமொழிப் பாடசாலைகளிலுள்ள (Bilingual Schools) சிங்கள வகுப்பறைகளில் கற்கும் மாணவர்கள் தொகை வேகமாய்ப் பெருகி வருகின்றது. கொழும்பு மாவட்டத்திலுள்ள இருமொழிப் பாடசாலைகள் எதிர்வரும் 10 ஆண்டுகளில் தனிச் சிங்கள மொழி மூலப் பாடசாலைகளாக மாறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்னொரு புறம் இலங்கையில் 09 மாகாணங்களில் சுமார் 500 சிங்களப் பாடசாலைகளில் ஏறத்தாழ 20,000 முஸ்லிம் மாணவர்கள் பயில்கின்றனர். இவர்களது தொகையிலும் குறிப்பிடத்தக்க படிமுறை அதிகரிப்பு நிகழ்ந்து வருகின்றது. அந்த வகையில் கொழும்பு மாவட்டத்தில் சிங்களப் பாடசாலைகளில் இணையும் மாணவர்கள் ஏன் அத்தகைய பாடசாலைகளை தெரிவு செய்கின்றார்கள் என்பதற்கான காரணங்களை கண்டறியும் நோக்குடன் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. அதேவேளை இத்தகைய சிங்கள மொழி மூலக் கல்வியினால் ஏற்பட்டுவரும் விளைவுகளை ஆராய்வதும் இவ்வாய்வின் இன்னொரு நோக்கமாகும்.



கொழும்பு மாவட்டத்தில் கலப்புச் சமூக அமைப்பு, இருமொழிப் பயன்பாடு, சிங்கள மொழியில் கற்ற பெற்றோர்கள், தொழில்வாய்ப்பை இலகுவாகப் பெறலாம் என்ற எதிர்பார்ப்பு, தமிழ் மொழிப் பாடசாலைகள் போதிய தரத்தில் இல்லை என்ற மனப்பாங்கு என்பன போன்ற காரணங்கள் சிங்கள மொழி மூலக் கல்வியை உருவாக்குகின்றன என்பதையும் கண்டறியக் கூடியதாக இருக்கின்றது.

**ஆய்வின் அறிமுகம்**

தாய்மொழிக் கல்விக்கான நியாயம் மொழியின் சமூகத் தன்மையினின்றே எழுகின்றது. ஒரு பிள்ளையின் கல்விக்கு பாடசாலை மட்டுமே பொறுப்புடையதல்ல. அறிவு வளர்ச்சி வீடு முதல் விளையாட்டுத் திடல் வரையான சமூதாய செயற்பாட்டின் மூலமே பெரிதும் நடக்கின்றது. எனவே சமூக சூழலில் பயன்படும் மொழியில் பாடசாலைக் கல்வி வழங்கப்படும் போது மாணவர்களால் பாடங்களை எளிதாக விளங்கிக் கொள்ள முடிகின்றது. இதுவே தாய்மொழி மூலம் கற்பிப்பது அதிகம் பயன் தரும் என்பதற்கான நியாயமாகும்.

இப்பின்னணியில் முஸ்லிம் மாணவர்களின் தாய்மொழி (Mother Language) அல்லது முதல் மொழி (First Language) தமிழாக உள்ள நிலையில் அவர்கள் சிங்களத்தை ஊடக மொழியாக (Medium Language) கொள்ளும்போது அது நிச்சயம் அவர்களது கல்வி அடைவினைப் பாதிக்கும். விதிவிலக்காக ஒரு சில மாணவர்களின் அடைவு மட்டம் உயர்ந்ததாக இருப்பினும் பொதுவாக சிங்கள மொழிமூல முஸ்லிம் மாணவர்களது அடைவு மட்டம் போதியதாக இல்லை.

ஒரு சிங்களப் பாடசாலையில் சாதாரண தரப் பெறுபேறுகளைப் பரசீலித்த போது 10 மாணவர்கள் சிங்களப் பாடத்திலேயே சித்தியடையவில்லை என்பது கண்டறியப்பட்டது. அவர்களது ஏனைய பாடங்களிலான பெறுபேறுகளும் மிகத் தாழ்ந்த நிலையிலேயே இருந்தன.

இன்னொரு புறம் இத்தகைய சிங்களப் பாடசாலைகளில் கற்கும் முஸ்லிம் மாணவர்கள் தமது சமயம் ஏற்காத கலாசார, சமயத் தனித்துவங்களுக்கெதிரான பௌத்த கலாசாரத் திணிப்புக்கும் பண்பாட்டு ஆதிக்கத்திற்கும் உட்பட்டு வருகின்றனர் என்பதும் இந்த ஆய்வில் கண்டறியப்பட்டது.

கல்வி ஒரு சமூகத்தின் கலாசார தனித்தன்மையைப் பாதுகாக்க வேண்டும். அது சமகால கல்விச் செல்நெறியின் முதன்மையான விழுமியங்களில் ஒன்றாகும். கல்வி ஏற்பாடுகள் இன்னொரு சமூகத்தின் பண்பாட்டைக் குலைப்பதாகவோ அடிமை கொள்வதாகவோ இருக்க முடியாது. எல்லா இனங்களும் சமூகங்களும் வாழ்க்கைத் திறன்களைப் பெற்று தொழிற்சந்தையில் உயர் தொழில் வாய்ப்பைப் பெற கல்வி வகை செய்வதோடு தத்தமது சொந்த கலாசார அடையாளத்தையும் (Cross Cultural Identity) பேணிப் பாதுகாக்க கல்வி வகை செய்ய வேண்டும்.

**தேர்ந்தெடுக்கப்பட்ட 10 சிங்களப் பாடசாலைகளில் முஸ்லிம் மாணவர்கள்**

| பாடசாலை | முகவரி | முஸ்.மா. வீதம் |
|---|---|---|
| 1. ஹேமமாலினி பாலிகா வித்தியாலயம் | கொழும்பு 10 | 20% |
| 2. கிளிப்டன் பாலிகா மகா வித்தியாலயம் | கொழும்பு 09 | 25% |
| 3. புளுமெண்டல் பாலிகா வித்தியாலயம் | கொழும்பு 14 | 18% |
| 4. அனுரத்த பாலிகா வித்தியாலயம் | கொழும்பு 09 | 18% |
| 5. மகரகம மத்திய மகா வித்தியாலயம் | மஹரகம | 05% |
| 6. ஆனந்த மத்திய மகா வித்தியாலயம் மோதர | கொழும்பு 15 | 05% |
| 7. பண்டார நாயக்க மத்திய மகா வித்தியாலயம் | கொழும்பு 14 | 08% |
| 8. ஹொலி றோசரி சிங்கள வித்தியாலயம் | கொழும்பு 02 | 18% |
| 9. சேர். பாரண் ஜயதிலக மகா வித்தியாலயம் | கொழும்பு 10 | 07% |
| 10. தேவி பாலிகா வித்தியாலயம் | கொழும்பு 08 | 09% |

துரதிஷ்டமாக, சிங்களப் பாடசாலைகளில் சிங்கள மொழி மூலம் கற்கும் முஸ்லிம் மாணவர்களது கலாசாரக் குலைவும் பாரிய சமூக நெருக்கடியாகப் பார்க்கப்படுகின்றது. ஏனெனில், இத்தகைய பாடசாலைகளில் முஸ்லிம் மாணவர்கள் தமது தனித்துவத்தைப் பேண தடைவிதிக்கப்படுகின்றது.

**மாவட்ட அடிப்படையில் சிங்கள மொழி மூலம் கற்கும் முஸ்லிம் மாணவர்கள்**

| மாவட்டம் | மொத்தம் | வீதம் % |
|---|---|---|
| காலி | 4525 | 60 |
| கொழும்பு | 15247 | 50 |
| ஹம்பாந்தோட்டை | 1185 | 41 |
| இரத்தினபுரி | 1500 | 33 |
| நுவரெலியா | 1256 | 32 |
| பதுளை | 2523 | 28 |
| கம்பஹா | 3780 | 27 |
| கண்டி | 5749 | 15 |
| குருணாகல் | 2674 | 12 |
| களுத்துறை | 2251 | 11 |

(மூலம்: எம்.ஏ.எம். நுஃமான்)

(தொடரும்)

## இமாம் இப்னு ஹஸ்ம் (ரஹ்)

இஸ்லாமிய வரலாற்றில் பிரபலமான சட்ட அறிஞர்களில் இமாம் இப்னு ஹஸ்ம் குறிப்பிடத்தக்க ஒருவர். முஸ்லிம் ஸ்பெய்னில் அதாவது அந்தலூஸில் பிறந்து வாழ்ந்தவர். லாஹிரி மத்ஹப் சிந்தனை சார்ந்த இப்னு ஹஸ்ம் அவர்கள், கி.பி. 994 நவம்பர் 07 இல் பிறந்தார். அபூ முஹம்மத் அலி இப்னு அஹ்மத் இப்னு ஸஈத் இப்னு ஹஸ்ம் என்பதே அவரது முழுப் பெயர்.

இன்று உலகளவில் முஸ்லிம்களின் அங்கீகாரம் பெற்ற 4 பிரதான சட்ட மரபுகள் உள்ளன. அவை பல்வேறு முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளிலுள்ள மக்களாலும் சிறுபான்மை முஸ்லிம்களாலும் பின்பற்றப்படுகின்றன. தனித்த ஒரு சிந்தனைப் பள்ளியாக அன்றி, கருத்து ரீதியான செல்வாக்குள்ள மத்ஹபாக இன்றுவரை லாஹிரிய்யா மத்ஹப் விளங்குகின்றது. உலகில் எப்பாகத்திலும் லாஹிரிய்யா மத்ஹப் இல்லை. ஆனால், சட்டத்துறையில் அதன் கருத்துச் செல்வாக்கு இன்றுவரை உள்ளது.

இமாம் அபூ தாவூத் அல் லாஹிரி அவர்கள் இம்மத்ஹபைத் தோற்றுவித்தார். லாஹிரி என்பது அறபு மொழியில் வெளிப்படையைக் குறிக்கும் சொல். அல்குர்ஆன், ஸுன்னா சட்ட வசனங்களை உள்பொருள் நோக்கில் அணுகாமல் புறப் பொருளில் பார்க்க வேண்டும். அதன்படியே சட்டவாக்கம் இடம்பெற வேண்டும் என்பதே லாஹிரி சிந்தனைப் பள்ளியின் அடிப்படையாகும்.

இஸ்லாமிய வரலாற்றில் அஹ்லுல் அஸர் என அழைக்கப்படும் அறிஞர்களின் வரிசையில் இமாம் அபூ தாவூத் இடம்பெறுகின்றார். அவரது வழி வந்தவரே இமாம் இப்னு ஹஸ்ம் அவர்கள். இவர் ஒரு ஆழ்ந்த சட்ட அறிஞர் மட்டுமன்றி வரலாறு, வானவியல், தாவரவியல், கவிதை என பல்வேறு தளங்களில் ஈடுபாட்டுடன் இயங்கியவர்.

இமாம் இப்னு ஹஸ்ம் 400 நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் 40 நூல்கள் இன்றுவரை நமக்குக் கிடைக்கின்றன. 1064 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 15 இல் அவர் வபாத்தாவதற்கு முன்னர் எழுதிய நூல்கள் பிக்ஹ் துறையில் பெரும் செல்வாக்குச் செலுத்தின. இப்னு கல்தூன், இப்னு கலிக்கான் போன்றவர்கள் இப்னு ஹஸ்மின் சிந்தனைத் தாக்கத்திற்கு உட்பட்டவர்கள்.

இளமைப் பருவத்திலேயே குர்ஆனை முழுமையாக மனனமிட்ட இமாம் அவர்கள் ஹதீஸ், பிக்ஹ், தப்ஸீர் ஆகிய கலைகளிலும் சிறந்து விளங்கினார். அவரது குடும்பம் அவரது அறிவுத் துறை வளர்ச்சிக்கு உருதுணையாக இருந்தது.

இமாம் இப்னு ஹஸ்மின் தந்தை ஸஈத் அஹ்மத். அவர் உமையா கலீபா ஹிஷாமின் சபையில் அங்கத்துவம் வகித்தவர். கலீபா ஹிஷாமின் ஆட்சிக் காலத்தில் அவரால் உருவாக்கப்பட்ட ஷூறா சபையின் தலைவராகவும் விளங்கியவர். அக்காலத்தில் மிகப் பெரிய வரலாற்றாசிரியராக மதிக்கப்பட்டவர். அவரது அறிவுத் தேட்டம் இமாம் இப்னு ஹஸ்மில் பிரதிபலித்தது.

இமாம் இப்னு ஹஸ்மின் எழுத்துக்களில் அல் பிஸலு பீ மிலலி வன் நிஹலி என்பது ஒரு கலைக் களஞ்சியத்தின் பாத்திரத்தை வகிக்கின்றது. 2000 பக்கங்களைக் கொண்ட அல் இம்லாஉ பீ ஷரஇல் முவத்தா, அல் இம்லாஉ பீ கவாஇதில் பிக்ஹிய்யா என்பன மிக அற்புதமான ஆய்வுகளாகும். 2000 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் இரண்டு பாகங்களாகும்.



## உலக மனச்சாட்சிக்கு ராஷிதாவின் உருக்கமான வேண்டுகோள்

எனது பெயர் ராஷிதா. வயது 25. அரக்கானின் வன்முறை துவங்குவதற்கு முன்னர் ஒரு எளிய வாழ்க்கையை நான் வாழ்ந்து வந்தேன். எங்களிடம் சில வயல் நிலங்கள் இருந்தன. அதில் நாம் விவசாயம் செய்தோம். எங்களிடம் ஒரு வீடு இருந்தது. அதில் எனது கணவரோடும் மூன்று குழந்தைகளோடும் வாழ்ந்தோம். அது ஒரு அமைதியான வாழ்வு.

நெருக்கடி ஆரம்பிக்கும் வரை மகிழ்ச்சியாக இருந்தது. இப்போது நாம் அனைத்தையும் விட்டுச் சென்றுள்ளோம். எங்கள் வீடுகளும் வயல் நிலங்களும் தீப்பற்றி எரிகின்றன. இதற்கு மேல் எங்கள் வாழ்வாதாரத்திற்கு எந்த வழியுமில்லை. எங்கள் கிராமத்தில் இராணுவம் எங்களை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்த ஆரம்பித்தபோது, எங்கள் குழந்தைகளை எடுத்துக் கொண்டு காட்டிற்குள் சென்று மறைந்திருந்தோம்.

இராணுவம் அகன்றதன் பின்னர் வீட்டை சென்றடைந்து பார்த்தபோது, பல மனிதர்கள் கொல்லப்பட்டிருப்பதைக் கண்டேன். நாங்கள் பதுங்கியிருந்த காட்டிலிருந்து எல்லைப் புறத்தை நோக்கி எட்டு நாட்கள் நடந்தோம். நாம் கடும் பசியோடும் தாகத்தோடும் பயணித்த போது, மரங்களின் இலைகளைத் தவிர எமக்கு முன்னாள் உண்பதற்கு எதுவும் இருக்கவில்லை. எனது குழந்தைகள் உண்பதற்கு ஏதேனும் தாருங்கள் கேட்டபோது கொடுப்பதற்கு எங்களிடம் எதுவும் இருக்கவில்லை.



ஒரு சிறிய படகில் எல்லையைத் தாண்டிச் சென்றோம். அது மிக ஆபத்தான பயணம். பயணம் சென்ற படகு எந்த வேளையிலும் மூழ்கிவிடலாம் என்ற அச்சத்தில் குழந்தைகளை இறுக்கமாக அணைத்துக் கொண்டேன்.

நான் பங்களாதேஷில் வாழ்வது மகிழ்ச்சியானதல்ல. எங்களிடம் எங்களூரில் 0.4 ஹெக்டேயர் நிலம் இருந்தது. சில கால்நடைகள் இருந்தன. ஒரு வீடு இருந்தது. ஒரு அழகான கிராமம் இருந்தது. நாம் எல்லாவற்றையும் இழந்து நிற்கின்றோம். இப்போது நாங்கள் படும் துன்பம் எப்படிப்பட்டது என்பதை உங்களால் கற்பனை செய்ய முடியும்.

எனக்கு எந்த எதிர்பார்ப்புமில்லை. எதிர்காலம் எப்படியிருக்கும் என்ற நம்பிக்கையுமில்லை. பங்களாதேஷ் மக்கள் அன்பானவர்கள். ஆடைகள், உணவுகளையெல்லாம் தருகின்றனர். இதுவரை எந்த சர்வதேச நிறுவனத்தையும் நாங்கள் காணவில்லை. அவர்கள் எங்களுக்கு உதவ வேண்டும். உண்பதற்கு எமக்கு உணவு வேண்டும்.

வெளி உலகிற்கு நான் வழங்கும் ஒரே செய்தி எங்களுக்கு அமைதி வேண்டும். அமைதியின்றி எதிர்காலமில்லை.

(இது மியன்மாரின் ரெக்கைன் மாநிலத்திலிருந்து இராணுவ துப்பாக்கிச் சூட்டிலிருந்து பங்களாதேஷுக்குத் தப்பி வந்த ஓர் இளம் குடும்பப் பெண் அல் ஜஸீராவுக்கு அனுப்பி வைத்த கடிதமாகும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லா சமூகங்களையும்... (07 ஆம் பக்கத் தொடர்)

வருகிறார்கள். அது நிராகரிக்கப்பட வேண்டிய விடயம். ஏனெனில் கிழக்கு மாகாணம் என்பது தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் இணைந்து வாழ்ந்ததொரு பிரதேசம். தமிழ் பேசும் தாயகம் எனப் பேசினால் கூட பிரச்சினையுள்ளது. கிழக்கு மாகாணத்தில் குடியேற்றங்கள் நடந்துள்ளது அதை நான் மறுக்கவில்லை. ஆனால் சிங்களவர்கள் கிழக்கு மாகாணத்தில் அறவே வாழவில்லை எனக்கூற முடியாது. 1981 கணக்கெடுப்பின் படி, கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்களின் விகிதாசாரம் 4 வீதமாகும்.

ஆகவே இந்திய இலங்கை ஒப்பந்தம் யாருடனும் கலந்தாலோசிக்காமல் செய்யப்பட்டதொரு முடிவே வடக்கு கிழக்கு இணைப்பு. இதுவும் கூட தற்காலிய இணைப்பாகவும் மீண்டும் வாக்கெடுப்புக்கு விடுவதாகவுமே குறிப்பிடப்பட்டது. ஆனாலும் ஜனாதிபதிகள் அதனை திரும்பத் திரும்ப நீடித்துச் சென்றார்கள்.

ஏன் இரு மாகாணங்களும் இணைந்திருக்க வேண்டும் என்பதற்கான தர்க்க நியாயங்கள் பலமில்லை. ஏனெனில் தாயகம் என்ற கோட்பாட்டிற்கு மாத்திரம் அதை பேச முடியாது. தமிழர்களும்



முஸ்லிம்களும் அங்கு பாரம்பரியமாக வாழ்ந்துள்ளார்கள். அது இன்னொரு மாகாண ஆட்சிமுறைக்குள் இருக்கும் போது முஸ்லிம்கள் ஏன் இனைக்கப்பட்ட மாகாண சபைக்குள் சிறுபான்மையாக வாழ வேண்டும். தற்பொழுது கிழக்கு மாகாணத்தில் 40 வீதமாக இருக்கும் சமூகம் ஏன் இணைந்த வடகிழக்கில் 18 வீதமாக இருக்க வேண்டும்?

இணைப்பு என்பது அரசியல் கோரிக்கையே தவிர அது எங்கும் விரிவான விவாதத்திற்கு உட்படுத்தப்படவில்லை. ஆயுதப் போராட்டம் நடந்த பின்னணியிலேயே இக்கோட்பாடு முன்வைக்கப்பட்டது. நிபந்தனையுடன் இதை ஆதரிக்கலாம் என்ற கருத்துப் போக்கில் மர்ஹூம் அஷ்ரப் அவர்கள் இருந்தார்கள். ஆயுதப் போராட்டம் இருந்தது.

தமிழர்களுடைய அபிலாஷைகளுக்கு முஸ்லிம்கள் குறுக்காக இருக்கிறார்கள் என்கின்ற தர்மசங்கடத்துக்கு அவர் ஆளாக்கப்பட்டார். இது என்னவென அறியாமல் நிலத் தொடர்பற்ற மாகாண சபை என்கின்ற கருத்தை முன்வைத்தார். இணைந்தால் தான் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கும் என்கின்ற விடயங்கள் தாண்டிப்போயுள்ளது.

- 20ஆவது அரசியலமைப்பு திருத்தம் கொண்டுவரப்பட்டதன் பின்னணி குறித்து சற்று தெளிவுபடுத்த முடியுமா?

ஒரு மாகாண சபையுடைய ஆயுட்காலம் 5 வருடங்களாகும். அதை நீடிப்பதாக இருந்தால் மக்களுடைய அங்கீகாரம் தேவை. அதை பாராளுமன்றம் கையில் எடுக்க முடியாது. எல்லாத் தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்த வேண்டும் என்ற காரணத்தைக் காட்டி சில மாகாண சபைகளின் ஆயுட்காலத்தைக் கூட்டுகிறார்கள். தற்பொழுது கிழக்கு மாகாண சபையின் காலம் முடிகிறது. ஊவா மாகாண சபை கலைக்கப்படும் போதே எல்லா தேர்தல்களும் நடாத்தப்படும் எனக் கூறினார்கள். தற்பொழுது ஒரு வருடத்திற்குள் நடாத்துவதாக கூறுகிறார்கள்.

இவ்வாறு கால நீடிப்பு விடயத்தில் பாராளுமன்றம் தீர்மானம் எடுப்பது பிழையானது. பாராளுமன்றில் மூன்றில் இரண்டு எடுத்தாலும் இது சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டும் என்றே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தேர்தல்களை ஒன்றாக நடாத்துவதற்கு சில மாகாண சபைகளின் காலத்தை நீடிப்புச் செய்துதானா நடாத்த வேண்டும். தற்போதுள்ள சட்டத்தின் படி ஒரு மாகாண சபையின் காலத்திற்கு முன்னர் அதை கலைப்பதாக இருந்தால் முதலமைச்சரின் அனுமதியுடன் ஆளுநருக்கு கலைக்கலாம்.

திரும்பவும் பாராளுமன்றத்திற்கு மாகாண சபையில் தலையிடும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. முன்னர் முதலமைச்சரின் அங்கீகாரம் என்கின்ற விடயம் காணப்பட்டது. தற்போது அது பாராளுமன்றத்திற்கு வழங்கப்படுகிறது.

இது அதிகாரப் பகிர்வுக்கு எதிரானதொரு விடயம். வடமாகாணத்தில் இத்திருத்தம் நிராகரிக்கப்பட்டது. கிழக்கில் இது நிறைவேற்றப்பட்டுள்ளது. தந்த அதிகாரங்கள் பறித்தெடுக்கப்படாமல் இருந்தால் அதற்கு நாம் ஆதரிப்போம் என்ற மயக்கமான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளார்கள். ஆளும் கட்சியினுடைய சில அரசியல் தேவைகளுக்காகவே 20 ஆம் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. அதன் நோக்கமே பிழையானது.

ஏற்கனவே மாகாணங்கள் இன்னின்ன காரணங்களுக்காக கலைக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது. இதுவல்லாத காரணங்களுக்காகவும் மாகாண சபைகள் கலைக்கப்படலாம் எனவும் இத்திருத்தத்தில் சொல்லப்பட்டுள்ளன. இதுவல்லாத காரணங்கள் என்றால் என்ன? அவை தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

## மஹிந்தவின்... (01 ஆம் பக்கத் தொடர்)

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் நிதியில் 60 கோடி ரூபாக்களைச் செலவழித்து சில் அனுஷ்டிப்பதற்கான துணிகள் விநியோகித்த குற்றத்துக்காக இவர்கள் இருவரும் தலா 20 இலட்சம் அபராதமும், 50 இலட்சம் நஷ்டஈடும் செலுத்த வேண்டும் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

இந்தத் துணிகளை வழங்குவதற்கு தானே உத்தரவிட்டதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் இந்த அபராதத்தை தலைக்கு ஒரு லட்சம் எனும் அளவில் பங்கெடுக்க முன்வந்துள்ளனர். அதே போல இதற்குத் தேவையான தொகையை மக்களிடம் இருந்து திரட்டுவதற்காக கொழும்பை அண்டிய பிரதேசங்களில் இன்று (15) திருவோடு ஏந்திக் காணிக்கை சேகரிக்கவிருப்பதாக ஜாதிக சங்க சபா தெரிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து நாடு முழுவதிலுமுள்ள விகாரைகளில் இந்த புண்ணிய கருமம் முன்னெடுக்கப்படுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் ஜாதிக சங்க சபா தெரிவித்துள்ளது.

## லலித் வீரதுங்க... (05 ஆம் பக்கத் தொடர்)

ஊழல் குற்றச்சாட்டுக்கள் பெருகிச் செல்லும் நிலையில், குறிப்பாக மத்திய வங்கி பிணைமுறி மற்றும் அதிவேகப் பாதை நிர்மாணம் தொடர்பாக தற்போது ஆளும் கட்சி அமைச்சர்கள் சிலர் ஊழலில் ஈடுபட்டுள்ளதை தம்மால் சகித்துக் கொள்ள முடியவில்லை என்று அவர்கள் கூறியுள்ளனர்.

இவர்களது கூற்று மிக வேடிக்கையானது. இன்னொரு புறம் எதிரிடையானது. இவர்கள் நேற்றுப் பிறக்கவில்லை. இலங்கையின் அரசியல் வரலாற்றில் திடுக்கிடச் செய்யும் அளவுக்கு ஊழல் பெருச்சாளிகள் நிறைந்திருந்த முன்னைய அரசாங்கத்தில் மஹிந்தவுக்கு தலைசாய்த்தவர்களே இவர்கள்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பான வெற்றுக் காகிதத்தில் கையொப்பமிட்டவர்கள். இப்போது இவர்கள் ஊழல் மோசடிகளை சகித்துக் கொள்ள முடியவில்லை என்று கூறுவது எவ்வளவு பெரிய அரசியல் அபத்தம். வாழ்க! எங்கள் ஜனநாயகம்! வாழ்க நல்லாட்சி!!

## புதிய வரி...

(01 ஆம் பக்கத் தொடர்)

செலுத்தத் தேவையில்லை எனவும் இந்தச் சட்டம் சொல்கிறது.

வைத்தியசாலைக் கட்டணங்கள் இந்த வரிச்சட்டத்தின் மூலம் அதிகரிக்கும் எனச் சொல்லப்பட்டாலும், புதிய வரிச் சட்டத்தில் வைத்தியசாலைச் சேவைகளுக்கோ கட்டணங்களுக்கோ வரி அறவிடப்படவில்லை என சட்டம் எடுத்துரைக்கிறது. ஆனாலும் வைத்தியசாலைகளுக்கான வருமான வரி 28 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதனால் மக்களது மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அறிவியலுக்கு... (06 ஆம் பக்கத் தொடர்)

சுதந்திரத்துக்குப் பின்னர் 1956 ஆம் ஆண்டின் மொழிக் கொள்கையும் சிந்தனை வரட்சியைக் காட்டுகின்ற மற்றுமொரு இடமாகும். இலவசக் கல்வி அமுல்படுத்தப்பட முன்னர், அதனூடாக மும்மொழியிலும் படித்தவர்களை உருவாக்குவதே நோக்கமாக இருந்தது. தாய் மொழியில் கல்வியை ஆரம்பித்து படிப்படியாக ஆங்கில மொழியில் செயலாற்றுபவர்களாக மாற்றும் திட்டம் அப்போது இருந்தது. இது நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் உயர் கல்வியை ஆங்கில மொழியிலேயே நவீன உலகின் அறிவினை நாம் பெற்றிருக்க முடியும். இதனூடாக இலங்கையரின் சிந்தனையில் மாற்றத்தை தோற்றுவித்திருக்க முடியும்.

56 இன் மொழிக் கொள்கையால் இந்த வாய்ப்பும் நழுவிப் போய்விட்டது. மும்மொழி அறிவுள்ளவர்களுக்குப் பதிலாக சிங்களம் மட்டுமே படித்தவர்கள் உருவானார்கள். உயர் கல்வியும் சிங்களத்திலேயே வழங்கப்பட்டது. ஜப்பானைப் போல சிறந்த புத்தகங்களை மொழி மாற்றம் செய்கின்ற திட்டம் கூட இல்லாமலேயே இந்த மொழிக் கொள்கை கொண்டுவரப்பட்டது நமது சிந்தனை வரட்சியில் பெரிதும் பாதிப்புச் செலுத்தியிருக்கிறது.

பல்கலைக்கழகங்களில் சமூக விஞ்ஞானம் பிரபல்யமாகி வருகிறது. ஆனாலும் மக்ஸ் வெபருடைய எந்தப் புத்தகமும் இங்கு மொழி மாற்றம் செய்யப்படவில்லை. இதனால் ஆங்கில மொழி தெரியாமல் சமூக விஞ்ஞானம் கற்று வெளிவருகின்ற பட்டதாரிகள், மக்ஸ் வெபரை விரிவுரையாளர் சொல்லித் தருகின்ற விதமாக மட்டுமே அறிந்து கொள்கின்றார். ஏனைய பாடங்களிலும் இந்த நிலைமை இருக்கிறது.

சந்தை விற்பனையை இலக்காகக் கொள்வதால் பிறமொழி நாவல்கள் மட்டுமே இங்கு மொழிமாற்றம் செய்யப்படுகின்றன. மக்களின் சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய நூல்களை மொழிமாற்றம் செய்வது பற்றி இங்கு யாரும் யோசிப்பதில்லை. இவற்றுக்கு விருதுகள் வழங்கப்படுவதுமில்லை. முக்கியமான புத்தகங்களை மொழி பெயர்த்து வெளியிடுவதற்கு வெளியீட்டாளர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

நாட்டில் நிலவும் கல்வி முறையில் வாசிப்பதற்கென்று எந்தப் பெறுமானமும் வழங்கப்படுவதில்லை. முதலாம் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை மனப் பாடத்தில் உருப்போடுவதையே பழக்கமாகக் கொண்டிருக்கின்றன. இவர்கள் மூலமாக சிந்தனை மாற்றமொன்றைக் கொண்டுவருவது நினைத்தும் பார்க்க முடியாத விடயம். இதனை அவசரமாக மாற்றாவிட்டால் நாடு சிந்தனை வரட்சியால் பாழாகிப் போய் விடும்.

## பதவி விலகல்... (04 ஆம் பக்கத் தொடர்)

2014 நவம்பர் மாதம் 21 ஆம் திகதி மைத்திரிபால, தாம் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்தபோது, மறு நாளே அவர் மேற்குலக சக்திகளினதும் தமிழ் பிரிவினைவாத சக்திகளினதும் 'ஏஜன்ட்' என பிரேமஜயந்த கூறினார். தற்போது பிரதி அமைச்சராக இருக்கும் நிஷாந்த முத்துஹெட்டிகம மைத்திரிபாலவின் தேர்தல் மேடையொன்றைத் தீயிட்டு அழித்தவர்.

கடந்த பொதுத் தேர்தலின்போது, தமது திட்டங்களுக்கு எதிராகச் செயற்பட்டதற்காக ஜனாதிபதி மைத்திரிபாலவையும் பிரேமஜயந்தவையும் அனுர பிரியதர்ஷன யாப்பாவையும் ஐ.ம.சு.மு மற்றும் ஸ்ரீ ல.சு.க பொதுச் செயலாளர் பதவிகளில் இருந்து நீக்கவும் நேர்ந்தது. ஆனால், தாமே பதவிக்கு வராமல் தடுக்க முனைந்த அரசாங்கத்தில், சூழ்நிலைகளே அவர்களைச் சேரத் தூண்டியது.

ஒருபுறம் ஐ.தே.க தலைமையிலான கூட்டணி தனியாக அரசாங்கத்தை நிறுவப் போதிய ஆசனங்களை (113 ஆசனங்களை) பெறவில்லை. எனவே, இவர்களுக்கும் அரசாங்கத்தில் சேர அவகாசம் இருந்தது. மறுபுறத்தில் தமக்கு எதிரான ஊழல் விசாரணைகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும் அமைச்சர் பதவிகளைப் பெற்று, மக்கள் பணத்தில் மீண்டும் சொகுசு வாழ்க்கை நடத்தவும் வாய்ப்பு ஏற்பட்டது. அவர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

அரசாங்கததில் சேர்ந்த சகல ஸ்ரீ ல.சு.க.காரர்களுக்கும் அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர் அல்லது இராஜாங்க அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஐ.தே.க.வுடன் அரசாங்கத்தில் இருக்க முடியாது என்பதும், ஊழல் காரணமாகத் தொடர்ந்தும் அரசாங்கத்தில் இருக்க முடியாது என்பதுமே, அரசாங்கத்திலிருந்து விலக வேண்டும் என்பவர்களது வாதமாக இருக்கிறது.

தாராள பொருளாதாரக் கொள்கையை இரு கட்சிகளும் ஏற்றுக் கொள்கின்றன. இரு கட்சிகளுக்கும் நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையைப் பற்றி நிலையான கொள்கை இல்லை. இரு கட்சிகளும் ஒற்றையாட்சி முறையை வரவேற்கின்றன. ஆனால், அடிக்கடி சமஷ்டி ஆட்சி முறையையும் ஆதரித்து வந்திருக்கிறார்கள். இரு கட்சிகளும் தேவையான நேரங்களில் இனவாதத்தைத் தூண்டியிருக்கின்றன. இரு கட்சிகளும் பாரியளவில் நாட்டைச் சூறையாடக் கூடிய ஊழல் பேர்வழிகளைக் கொண்ட கட்சிகளாகும்.

எனவே, கொள்கை என்று வரும் போது, இவர்களுக்கு அரசாங்கத்தை விட்டு விலகக் காரணமே இல்லை. அதேவேளை, ஊழல் விசாரணைகளில் இருந்து தப்பித்துக் கொள்ளும் அவசியம் இப்போது இல்லை என்று கூற முடியாது. குறிப்பாக முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க போன்ற பெரும் புள்ளிகளே கூண்டில் அடைக்கப்பட்டுள்ள நிலையில், தாம் தப்பிவிடுவோம் என்ற உத்தரவாதம் அவர்களுக்கு இல்லை.

சரி, இவ்வனைத்தையும் புறந்தள்ளி விட்டு, அரசாங்கத்திலிருந்து வெளியேறி இவர்கள் எதைத்தான் சாதிக்கப் போகிறார்கள்? அத்தனை ஸ்ரீ ல.சு.க. காரர்களும் மஹிந்தவுடன் கூட்டுச் சேர்ந்தாலும் அவர்களிடம் 95 நாடாளுமன்ற ஆசனங்கள் மட்டுமே இருக்கும். ஐ.தே.க.விடம் 106 ஆசனங்கள் இருக்கின்றன. மற்றைய கட்சிகளில் இருந்து ஆட்களை விலைக்கு வாங்கி அரசாங்கத்தை அமைப்பதாக இருந்தால், ஸ்ரீ ல.சு.க.வைப் பார்க்கிலும் ஐ.தே.க.வுக்கே அதை இலகுவாகச் செய்ய முடியும். அதுதான் நடந்தும் இருக்கிறது.

மற்றொரு முக்கியமான காரணம் என்னவென்றால், ஸ்ரீ ல.சு.க.காரர்கள் அனைவரும் ஒருபோதும் மஹிந்தவுடன் கூட்டுச் சேரப் போவதில்லை. மஹிந்த அமரவீர,, மஹிந்த சமரசிங்க, நிமல் சிறிபால டி சில்வா, துமிந்த திஸாநாயக்க ஆகியோர் மைத்திரியை விட்டுப் போவார்கள் என்று இப்போதைக்கு நம்ப முடியாது. எனவே அரசாங்கம் பிழைக்கும் வாய்ப்புகளே அதிகம்.

எல்லாவற்றையும் விட முக்கியமான விடயம் என்வென்றால், 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின்படி, அரசாங்கம் பதவிக்கு வந்து நாலரை ஆண்டுகள் போகும்வரை, அதாவது 2020 ஜனவரி வரை ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது. அவ்வாறாயின் ஸ்ரீ ல.சு.க.காரர்கள் அத்தனை பேரும் அரசாங்கத்தில் இருந்து விலகினாலும் அராஜக நிலை ஏற்படுமேயல்லாது வேறு எந்தப் பயனும் கிடைக்காது. அமைச்சர் பதவிகளை விட்டு விட்டு, இவ்வாறானதோர் நிலைமையையா அடைய வேண்டும்? எனவேதான் 2020 ஆம் ஆண்டுவரை அரசாங்கத்தை அசைக்க முடியாது என மைத்திரிபால அடிக்கடி கூறுகிறார்.

## கருக்கலைப்பு... (12ம் பக்கத் தொடர்)

ஏனெனில், கருவிலிருக்கும் சிசுவுக்காக வாழுகின்ற தாயை இழக்க முடியாது. அது அறிவுடைமையும் ஆகாது.

மேலும், சிசுவானது உருக்குலைந்ததாக இருந்து, பிறந்து வாழும் பாக்கியத்தைப் பெறினும், பெரும் அவஸ்தையுடனேயே வாழும் நிலைக்கு உட்படும் என்பது விஞ்ஞான பூர்வமான உறுதியாகக் கண்டறிய முடியும் நிலையிலும் கருவைச் சிதைக்க ஷரீஅத்தில் இடமுண்டு.

ஹறாமான முறையில் கருத்தரித்த சிசுவை குடும்ப கௌரவம் அல்லது குடும்பப் பிரச்சினை அல்லது மானப் பிரச்சினை காரணமாக கருச்சிதைவு செய்வதும் ஹறாம் என்றே இஸ்லாமிய அறிஞர்கள் ஒருமித்த கருத்தை வழங்கியுள்ளார்கள்.

ஜுஹைனா கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி தவறான முறையில் கருத்தரித்து தனக்கு தண்டனை தாருங்கள் என்று கேட்டு வந்த பொழுது குழந்தையை பெற்றெடுத்து பின்னர் பால்குடியை மறக்கும் காலம் வரை அவளுக்குரிய தண்டனையை நபி (ஸல்) அவர்கள் பிற்போட்டார்கள் என்ற செய்தி முஸ்லிமில் பதிவாகியுள்ளது.

இதோபோன்று தான் காமுகர்களின் பலவந்தமான வன்புணர்ச்சிகளினால் கருத்தரித்தாலும் கருக்கலைப்பு ஆகாது என்பதே சவூதியை தளமாகக் கொண்ட பத்வாவுக்கான நிரந்தரக் குழு பத்வா வெளியிட்டுள்ளது. குற்றமிழைத்ததன் பின்னர் மானத்தை பாதுகாக்க சிசுக் கொலை செய்ய முடியாது. மானம் காத்தல் என்பது சிசுக் கொலைக்கான நியாயமான காரணம் அல்ல.

சுருக்கமாக சொல்வதாயின் கரு தாயின் கருவறையிலிருந்தால் தாய் - சேய் இருவருக்கும் ஆபத்தளிக்கும் என்பதாக தகுதி வாய்ந்த மருத்துவ நிபுணர் மூலம் அறிய வந்தால், கரு உருவான ஆரம்ப கட்டங்களில் கருவிற்கு ரூஹ் கொடுக்கப்படும் முன்னரோ அல்லது ரூஹ் கொடுக்கப்பட்ட பிறகோ கருக்கலைப்பை மேற்கொள்ள அனுமதியுண்டு. கருவிற்கு ரூஹ் கொடுக்கப்படுவதற்கு முன்னர் கருக்கலைப்பு செய்வது குறித்து அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளது.

மீள்பார்வை

உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - 5500.00 |
| 12 இதழ்கள் - ரூபா 600.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா - 4000.00 | அமெரிக்கா | - 6500.00 |
| 24 இதழ்கள் - ரூபா 1200.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் - 4000.00 | அவுஸ்திரேலியா | - 4700.00 |
| | | | | சீனா | - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 581 661. People's Bank A/c: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வியை வீழ்ச்சியாகக் கருத முடியாது!

## தோமஸ் அல்வா எடிஷன்



அமெரிக்காவில் இரும்புத் தாதுவுக்குத் தேவையும் விலையும் மிக அதிகமாக இருந்ததால், பாறைகளில் இருந்து இரும்புத் தாது பிரித்தெடுக்கும் கண்டுபிடிப்பில் 1897 ஆம் வருடம் இறங்கினார் எடிசன். அவரது கண்டுபிடிப்பைச் செயல்படுத்த பெரிய நிறுவனங்கள் முன்வந்தன. ஆனால், அவற்றை நிராகரித்து தனது முழு செல்வத்தையும் முதலீடுசெய்து சொந்தமாகத் தொழிற்சாலை தொடங்கினார் எடிசன்.

மலைகளை உடைக்க, உடைத்த பாறைகளைக் கற்களாக்க, கற்களை மணலாக்க, மணலைப் பிரிக்க என எல்லாவற்றுக்கும் பெரிய அளவில் இயந்திரங்களை நிறுவினார். ஒரு டன் இரும்புத் தாது ஆறரை டொலருக்கு விற்பனையான நேரத்தில், நான்கு டொலர் அடக்க விலையில் எடிசன் உற்பத்தி செய்தார்.

விற்பனை தொடங்கிய நேரத்தில் அமெரிக்காவின் மிசாபா மலைப் பகுதிகளில் உயர் ரக இரும்புத் தாது பெருமளவு இருப்பது கண்டுபிடிக்கப்படவே, இரும்பு விலை மடமடவென ஒரு டன் மூன்று டொலராகக் குறைந்தது. நஷ்டமடைவது தவிர வேறு வழியில்லை எனத் தெரிய வந்ததும், உடனே தொழிற்சாலையை மூடினார்.

எடிசனிடம் அவரது நண்பர்கள், ''சிலருடன் கூட்டுச் சேர்ந்திருந்தால் ஒரேயடியாக நஷ்டமடைந்து இருக்க வேண்டியதில்லையே'' என்றார்கள். ''நஷ்டம் ஏற்படும் ஒரு வழியைத் தெரிந்து கொண்டது எனக்கு லாபமே! தோல்வி என்பது வீழ்ச்சியல்ல... படிப்பினையே!'' என்றபடி மீண்டும் தன் ஆராய்ச்சியைத் தொடங்கினார் எடிசன். கட்டுமாணப் பணிகளுக்குத் தேவையான கொங்கிரீட் கலவையைக் கண்டுபிடித்து, உடனே தயாரிப்பில் இறங்கி, மூன்றே வருடங்களில் இழந்த சொத்தைவிட அதிகமாகச் சேர்த்தார்.

அமெரிக்காவில் சாமுவேல் எடிசன் மற்றும் நான்ஸி எலியட் தம்பதியின் நான்காவது மகனாக, 1847 ஆம் வருடம் பிறந்தார் தோமஸ் அல்வா எடிசன். தலை பெரிதாக இருந்ததால், 'மண்டு, மூளை வளர்ச்சி குறைந்தவன்' என ஆசிரியரும் மாணவர்களும் கிண்டல் செய்யவே, பள்ளிப் படிப்பை நிறுத்திவிட்டுத் தாயிடமே பாடம் பயிலத் தொடங்கினான் சிறுவன் தோமஸ்.

ஊரில் விளையும் பொருட்களை புகை வண்டியில் நகரத்துக்குக் கொண்டு சென்று விற்பனை செய்தும், நகரத்தில் இருந்து பத்திரிகைகள் வாங்கி வந்து மற்ற ஸ்டேஷன்களில் விற்பனை செய்தும் சம்பாதித்தான்.

உள்நாட்டுப் போர் காரணமாக, பத்திரிகைகளுக்கு நல்ல வரேவற்பு இருப்பதை அறிந்து, ரெயில்வே அதிகாரிகளின் உதவியுடன் புகை வண்டியிலேயே இயந்திரத்தை வைத்து, நகரத்துச் செய்திகளை அச்சடித்து 'வீக்லி ஹெரால்ட்' பத்திரிகையை விற்கத் தொடங்கினான். ஆசிரியர், அச்சடிப்பவர், விற்பைனயாளர் என எல்லா வேலையையும் செய்த எடிசனுக்கு அப்போது வயது 15.

மீள்பார்வை

தொகுப்பு: அஸாருதீன்

எடிசன் தன் முதல் கண்டுபிடிப்பாக 1868 இல் பதிவு செய்த 'வாக்குப் பதிவு இயந்திரம்' அரசினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. தந்தி மற்றும் பங்குச் சந்தை சாதனங்களைத் தொடர்ந்து மின்சார விளக்கைக் கண்டுபிடித்ததும், உலகமே இவரைத் தலையில் வைத்துக் கொண்டாடியது. பாடும் மற்றும் பேசும் ஃபோனோகிராஃப் இயந்திரம் இவரை பெரும் கோடீஸ்வரனாக்கியது. ஒலியைப் போலவே ஒளியையும் பதிவு செய்ய முடியும் என 'சினிமாவைக் கண்டுபிடித்ததும், 'கண்டு பிடிப்புகளின் தந்தை' எனப் புகழாரம் கிடைத்தது!

1914 ஆம் வருடம் அவரது சோதனைச் சாலையில் மிகப் பெரிய தீ விபத்து ஏற்பட்டது. ஆறுதல் சொல்ல வந்த நண்பர்களைப் பார்த்து, ''தீ எவ்வளவு அழகாக எரிகிறது பாருங்கள்... இரசாயனப் பொருட்களைத் தவறான விகிதத்தில் கலந்துவிட்டேன் என்பதை, 67 ஆவது வயதில் எனக்குக் கற்றுக் கொடுத்த இந்தத் தோல்வியும் எனக்குப் படிப்பினையே'' என்றார் எடிசன் சிரித்தபடி.

தனது 81 ஆவது வயதில் மரணமடையும் வரை 1,093 கண்டுபிடிப்புக்களை எடிசன் பதிவு செய்ய முடிந்ததற்குக் காரணம், தோல்விகளை வீழ்ச்சியாகக் கருதாத இவரது தன்மையே!

## இன்னொரு சித்திலெப்பை

பேரினவாதத்தின்
புதிய உத்தி
காணி அபகரிப்பு!
கிழக்கிலங்கை முஸ்லிம்களின்
காணி ஆக்கிரமிப்பிற்கு
அதிகாரிகளும் அனுசரணை!

கருமலையூற்று, குச்சவெளி
புல்மோட்டை, சம்பூர்,
பீடியவில் புதிதாக
கிளைவெளி ரகுக் தோட்டம்.
காவியுடையும் காக்கிச் சட்டையும்
சேர்ந்து களத்தில்!

சிறுபான்மை நிலமே
மாகாணத்தின்
பெரும்பான்மை சமூகத்தவருக்கு
இருக்கும் சொச்சத்தில் கூட
கண்வைத்து விட்டார்கள்.

அறிக்கைவிட்டு
தூங்கிக்கொள்ளும் தலைமைகள்
"அனுமதிக்கப் போவதில்லை"
வீராப்புக் கதை வேறு.

வேகத்தையும் விவேகத்தையும்
அடகுவைத்தவரா
முஸ்லிம் அரசியல்வாதி?
உங்களால் ஒன்றுமே
நடக்கப்போவதில்லை.
அரசாங்கத்தின் பங்காளிகளுக்கு
ஆட்சியில் பங்கில்லையே!

கல்லாட்சியை உருவாக்கி
கல்பாடம் படிக்கின்றோம்.
உள்ளூராட்சி சட்டமூலத்தில்
வென்றது அரசாங்கம்
தோற்றது சமூகம்.

எஞ்சியுள்ளதையாவது
இறுக்கிப் பிடிக்க..
இன்னொரு மியன்மார்
உருவாகாமலிருக்க
இன்னொரு சித்திலெப்பை
இங்கே உருவாகட்டும்!



கலப்பாலி அஷ்ஷம்ஸ்
அருளுகம

# பிளாஸ்டிக் எமன்

## சில அதிர்ச்சிகர உண்மைகள்



- ஒரு பிளாஸ்டிக் பையின் சராசரி பயன்படும் நேரம் வெறும் 20 நிமிடங்கள் மட்டுமே. ஆனால் அது மக்குவதற்கு ஆகும் காலமோ நூற்றுக்கணக்கான ஆண்டுகள். வகையைப் பொருத்து இந்தக் காலம் மாறுபடும்.
- கடலில் மிதந்து கொண்டிருக்கும் கழிவுகளில் 90 சதவீதம் பிளாஸ்டிக்கே
- அடிக்கடி வீட்டுச் சாக்கடை, தெருச் சாக்கடை, மழைக் காலங்களில் மழை நீர் வடிகால் குழாய் போன்றவை அடைத்துக் கொண்டு நாறுவதற்கும், வெள்ளக் காடாவதற்கும் இந்த பிளாஸ்டிக்கே காரணம். இப்படி அடைத்துக் கொள்வதால் கழிவுநீர் தேங்குகிறது. ஆட்கொல்லி நோய்களைப் பரப்பும் கொசுக்கள், கிருமிகள் பல்கிப் பெருகி நோய் தாக்குவதற்கு நாமே வாய்ப்பு உருவாக்கித் தருகிறோம்.

**நாம் அனைவரும் கவனக் குறைவாக வெளியேற்றும் கழிவுகள்**



- கேரி பேக்குகள்
- காய்கறி கேரி பேக்குகள்
- மளிகைப் பொருள் அடைக்கப்பட்ட பிளாஸ்டிக் பைகள்
- பேக்கேஜிங் பைகள், சுருள்கள்
- வீட்டுக் குப்பைப் பைகள்
- வணிக குப்பைப் பைகள்
- தொழிற்சாலை லைனர்கள்
- மருத்துவ, ஹோட்டல் குப்பைப் பைகள்

**மக்கிப் போவதற்கு ஆகும் காலம்**

பிளாஸ்டிக் பைகள் - 100-1000 ஆண்டுகள்
வாழைப்பழத் தோல் - 2-10 நாட்கள்
பஞ்சுக் கழிவுகள் - 1-5 மாதங்கள்
காகிதம் - 2-5 மாதங்கள்
கயிறு - 3-14 மாதங்கள்
ஆரஞ்சு தோல் - 6 மாதங்கள்
உல்லன் சாக்ஸ் - 1-5 ஆண்டுகள்
டெட்ரா பேக்குகள் - 5 ஆண்டுகள்
தோல் காலணி - 25-40 ஆண்டுகள்
நைலான் துணி - 30-40 ஆண்டுகள்
தகர கேன் - 50-100 ஆண்டுகள்
அலுமினிய கேன் - 80-1000 ஆண்டுகள்
பிளாஸ்டிக் ரிங்க்ஸ் - 450 ஆண்டுகள்
டயபர், நாப்கின் - 500-800 ஆண்டுகள்

- **பிளாஸ்டிக் போத்தல்கள் - எக்காலத்திலும் அழியாது**

எனவே, பிளாஸ்டிக் கேரி பேக், பிளாஸ்டிக் போத்தல்கள் போன்றவற்றை வாங்காதீர்கள். அந்தக் குப்பையை எந்த வகையிலும் உருமாற்றவோ, அழிக்கவோ முடியாது. இன்னும் 10, 20 ஆண்டுகளில் உலகம் கழிவு பிளாஸ்டிக்கால் நிரம்பி வழியும் என்று நம்பப்படுகிறது. நமது முதுமைக் காலத்தை கொஞ்சம் நினைத்துப் பாருங்கள்.

பிளாஸ்டிக் பைகளைத் தவிர்ப்பதற்கு இதற்கு மேல் வலுவான காரணம் வேண்டுமா?

சுத்தமான, மாசுபாடற்ற சுற்றுச் சுழலைப் பெறுவது ஒவ்வொருவரது அடிப்படை உரிமை

அனைத்து மாற்றங்களும் நம் வீட்டிலிருந்து, நம்மிடமிருந்தே தொடங்குகின்றன.

## துளிகள்

- ஒரு சாதாரண மனிதனால் உணவு இல்லாமல் 20 நாட்கள் உயிர் வாழ முடியும். ஆனால் நீர் அருந்தாமல் 2 நாட்கள் மட்டுமே உயிர் வாழ முடியும்.
- அதிக நேரம் அலைபேசி பயன்படுத்துவதால் மூளையில் கட்டிகள் உண்டாக அதிக வாய்ப்பு இருகின்றது...!
- ஒரு எலியால் ஒட்டகத்தை விட அதிக நாள் நீர் இல்லாமல் வாழ முடியும்..!
- பிறந்த குழந்தைகளுக்கு பார்வை கருப்பு வெள்ளையாகத்தான் தெரியுமாம் ...!
- நகங்கள் குளிர்காலத்தை விட கோடை காலத்தில் தான் வேகமாக வளரும்....!
- அதிகமாய் உணவு உண்ட பிறகு, உங்கள் கேட்டல் திறன் கணிசமான அளவு குறையும்...!.
- வியாழனை சுற்றி வரும் நிலவான யுரோபாவில் பூமியில் இருக்கும் நீரை விட அதிக நீர் உள்ளதாம்...!
- பூமியின் 71% மேற்பரப்பும் கடல் தான் என்கிற போதிலும் மனித கண்களால் காணப்பட்ட கடலின் அளவு வெறும் 5% மட்டுமே..

# பெண் கல்வியின் முக்கியத்துவம்

''அறிந்தோரும், அறியாதோரும் சமமாவார்களா? நல்லுபதேசம் பெறுவோரெல்லாம் அறிவுடையோரே.'' (அல்குர்ஆன் 39:9)

கல்வி கற்பது என்பது ஒவ்வொரு முஸ்லிமான ஆண், பெண் இருவர் மீதுள்ள கட்டாயக் கடமையாகும். கல்வி ஒரு மனிதனை அறிவுடையவனாகவும், பண்பாடுள்ளவனாகவும், ஒழுக்கமுடையனாகவும் மாற்றுகிறது. கல்வி மனிதனின் அறிவுக் கண்ணைத் திறப்பதோடு சொத்துக்களிலெல்லாம் மிகச் சிறந்த சொத்தாகவும் கருதப்படுகிறது. கல்வியென்பது மார்க்கம் மற்றும் உலகம் பற்றிய அறிவைப் பெறுவதாகும்.

இஸ்லாம் ஒருபோதும் பெண்களைக் கல்வி கற்க வேண்டாமென்று தடை போடவில்லை. அந்நிய ஆண்களும், அந்நிய பெண்களும் இரண்டறக் கலந்து விடக்கூடாது என்பதுதான் இஸ்லாமிய சட்டமே தவிர கல்வி கற்கக் கூடாது என்றோ, தொழில் செய்யக் கூடாது என்றோ இஸ்லாம் ஒருபோதும் கூறவில்லை. மாறாக கல்வி கற்க வேண்டும் என்று ஆர்வமூட்டுகிறது.

பெண் என்பவள் ஒரு குடும்பத்தில் மிக முக்கிய பங்கு வகிக்கிறாள். குறிப்பாக, தன்னுடைய குழந்தை [illegible] பண்பாட்டிற்கும் அடித் தளம் [illegible] பெண்ணாகிய தாய்தான்.



ஒரு குழந்தை முதலில் அறிமுகம் ஆவது தன் தாயாரிடம்தான் அந்தக் குழந்தைக்கு இரண்டு வருடங்கள் பாலூட்டுவதுடன் இறைபக்தியையும், நல்லொழுக்கத்தையும் சேர்த்தே ஊட்டுகிறாள்.

எனவே ஒவ்வொரு ஆண், பெண்ணுக்கும் முதல் பள்ளிக்கூடமாகவும் பாலகப் பருவ ஆசிரியையாகவும் திகழ்பவள் தாயாகிய பெண்தான். அந்தத் தாய்க்கு நல்ல அறிவும், கேள்வி ஞானமும் இருந்தால்தான் அவளிடம் பாடம் கற்கும் குழந்தைகளுக்கும் கிடைக்கும் என்பதைத்தான் 'தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை' என்கிறார்கள். ஆகவே, அவளுக்கு கல்வியறிவும் கேள்வி ஞானமும் வேண்டுமென்றால் கல்வி மிக அவசியமாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தில் இடம்பெற்ற மோசடியை மூடி மறைக்க முயற்சி...?



இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்துக்கு, சர்வதேச உதைப்பந்தாட்ட சம்மேளனம் உதவியாக வழங்கிய பணத்தில் சுமார் 6 கோடி ரூபாவினை மோசடி செய்ததற்கான விசாரணைகளை முடக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த மோசடி சம்பவம் தொடர்பில் ரியல் அட்மிரல் சரத் வீரசேகரவின் தலைமையில் குழு ஒன்றை அமைத்து விசாரணைகளை மேற்கொள்ள யோசனை முன்வைக்கப்பட்ட போதிலும், ஒரு மாதம் கடந்தும் இதுவரையிலும் விசாரணைகள் தொடர்பான எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணக்காளர் பிரிவிலுள்ள உயர் அதிகாரி ஒருவர் குறித்த பணத்தில் 2 கோடி 25 இலட்சம் ரூபாவை மோசடி செய்துள்ளதாகவும், உதைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் ஊதியம் பெறும் சந்தேகிக்கப்படும் சில உத்தியோகத்தர்கள் மாதாந்தம் 15 இலட்சம் ரூபா வரை பகிர்ந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் குறித்த மோசடி தொடர்பில் தனக்கு அறிவிக்கவில்லையெனவும், இந்த பண மோசடி தொடர்பில் தான் கேள்விப்படவில்லையென்றும், ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

# பதுளையில் திஹாரிய யூத் அணி வீரர்கள் மீது தாக்குதல்



பதுளை வின்சன்ட் டயஸ் மைதானத்தில் இடம்பெற்ற பிரீமியர் லீக் சம்பியன்ஷிப் பிரிவு ஒன்றுக்கான (டிவிஷன் 1) தொடரின் போட்டியொன்றில் பதுளை கொம்ரட்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் திஹாரிய யூத் அணிகள் மோதிக் கொண்டன. இப்போட்டியின்போது முறைகேடாக நடந்து கொண்ட பார்வையாளர்களினால் திஹாரிய யூத் அணி வீரர்கள் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எமக்குக் கிடைத்த தகவல்களின் படி, போட்டி நிறைவடைய சில நிமிடங்கள் எஞ்சியிருந்த நிலையில் திஹாரிய யூத் வீரர் ஒருவருக்கு நடுவரினால் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டுள்ளது. குறித்த முடிவு தொடர்பாக திஹாரிய யூத் வீரர்கள் நடுவரிடம் கேள்வி எழுப்பிக்கொண்டிருந்த போது பார்வையாளர்கள் மைதானத்தை ஆக்கிரமித்து அவ்வணியின் வீரர்களை தாக்கியுள்ளனர். எனினும் மற்றுமொரு தகவலின் படி, திஹாரிய யூத் வீரர்கள் முதலில் நடுவரை தாக்கியதாகவும் அதன் காரணமாகவே பார்வையாளர்கள் மைதானத்திற்குள் நுழைந்து அவ்வீரர்களை தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

திஹாரிய யூத் கழகத்தின் செயலாளர் மொஹமட் அஸ்கர் இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில், ''போட்டியின் ஆரம்பம் முதலே எதிரணியினால் (கொம்ரட்ஸ் விளையாட்டுக் கழகம்) மைதானத்திற்கு பாதுகாப்பு வழங்கப்படாமை தொடர்பில் நாம் நடுவரிடம் முறையிட்டிருந்தோம். எனினும் அவர் எமது கோரிக்கையை உதாசீனப்படுத்தி போட்டியை ஆரம்பித்தார்.

போட்டியின் போது எமது வீரர்கள் மீது கற்களை வீசி தாக்கியிருந்தனர். எதிரணி கோல் ஒன்றை பெற்றுக் கொண்டபோது உதவி நடுவர் ஒப்சைட் காரணமாக அதனை நிராகரிப்பதாக கொடியை உயர்த்தி சைகை வழங்கினார். எனினும் பின்னர் பார்வையாளர்களின் அச்சுறுத்தலின் காரணமாக அவர் கொடியை தாழ்த்தி கோல் செல்லுபடியாகும் எனத் தீர்ப்பளித்தார்'' எனத் தெரிவித்தார்.

இலங்கை கால் பந்து சம்மேளனத்தின் விதிமுறைகளின்படி போட்டியை நடாத்தும் அணி போட்டிக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் பாதுகாப்பு சூழ் நிலையைக் கருத்திற் கொண்டு போட் டியை ஆரம்பிக்கவும் நிறுத்தவும் நடுவருக்கு முழு அதிகாரமும் வழங்கப் பட்டுள்ளது.

# '40 வயது வரை ஏன் விளையாட முடியாது?'




இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளரான ஜேம்ஸ் அன்டர்சனுக்கு, தற்போது 35 வயதாகின்ற நிலையில், அவரது ஓய்வுக் காலம் குறித்து ஏனையோர் சிந்திக்க ஆரம்பித்துள்ளனர். ஆனால், அதுபற்றி நான் இன்னும் சிந்திக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது 497 டெஸ்ட் விக்கெட்டுகளுடன் காணப்படும் அன்டர்சன், 500 டெஸ்ட் விக்கெட்டுகளைக் கைப்பற்றிய 3ஆவது வேகப்பந்து வீச்சாளராக மாறக் காத்திருக்கிறார்.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள அவர், ''40 வயது வரை என்னால் விளையாட முடியாது என்பதற்கு, எந்தக் காரணமும் இல்லை. எனது கிரிக்கெட் வாழ்வில், நான் உச்சபட்ச திறமையுள்ள பந்துவீச்சாளராகவும் சிறப்பான தொடர்ச்சியுடன் பந்து வீசுபவராகவும் தற்போதே உள்ளேன்.

2020-21 இல் இடம்பெறவுள்ள ஆஷஸ் தொடரில் நான் விளையாடமாட்டேன் என என்னால் கூற முடியாது. நான் கொண்டிருக்கும் உடலைக் கொண்டிருப்பதற்கு, நான் அதிர்ஷ்டசாலி'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கிரிக்கெட் உலகைக் கலக்க வரும் T-10 போட்டி

டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஒருநாள் போட்டிகளுக்கும், பின்னர் T-20 போட்டிகளுக்கும் மாற்றம் பெற்ற கிரிக்கெட் தற்போது அதிரடியாக T-10 போட்டிகளை நடாத்த களம் காண ஆயத்தமாகவுள்ளது.







10 ஓவர்கள், 7 அணிகள், 90 நிமிடங்கள் என மிகக் குறுகிய நேர எல்லைக்குள் 4 நாட்கள் நடைபெறவுள்ள இத்தொடர், கிரிக்கெட் உலகின் அதிரடி நட்சத்திரங்களான சஹீட் அப்ரிடி, குமார் சங்கக்கார, கிறிஸ் கெயில், விரேந்தர் செவாக் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் ஐக்கிய அரபு இராட்சியத்தின் சார்ஜா கிரிக்கெட் மைதானத்தில் இவ்வருட டிசம்பர் 21 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

உலகின் தலை சிறந்த 50 சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் மற்றும் பல புதிய வீரர்களின் பங்குபற்றுதலுடன் ஆரம்பமாகவுள்ள இப்போட்டித் தொடருக்கான வீரர்களை ஏலம் எடுக்கும் நிகழ்வு வெகுவிரைவில் ஆரம்பமாகவுள்ளது. உலகின் மிக முக்கியமான கிரிக்கெட் தொடர்களை நடாத்திய பெருமையயைக் கொண்ட ஐக்கிய அரபு இராச்சியத்தின் சார்ஜா கிரிக்கெட் மைதானத்தில் இப்போட்டிகள் இடம்பெறவுள்ளமை சிறப்பம்சமாகும்.

விறுவிறுப்பான இத்தொடரின் ஒவ்வொரு போட்டியிலும் உலகின் பல்வேறு நாடுகளின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பிரபலங்களின் பங்குபற்றுதலுடன் போட்டிகள் இடம்பெறவுள்ளமை சிறப்பம்சமாகும்.

பஞ்சாபிஸ், பக்தூன்ஸ், மராத்தா, பங்லாஸ், லங்கன்ஸ், சிந்திஸ் மற்றும் கேரலைடிஸ் என ஏழு அணிகளின் பங்குபற்றுதலுடன் இப்போட்டிகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்தருணம் வரை பக்தூன்ஸ் அணியின் தலைவராக சஹீட் அப்ரிடி தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், பங்லாஸ் அணித் தலைவராக சகீப் அல் ஹசன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஏனைய அணிகளுக்கான வீரர்கள் எதிர்வரும் தினங்களில் இடம்பெறவுள்ள ஏலத்தில் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

# கிரேட் பிரிட்டன் ரன்: மோ பராஹ் சாதனை!




பிரிட்டனில் நடைபெற்ற 37 ஆவது கிரேட் நோர்த் ரன் அரை மரதனில் தொடர்ச்சியாக நான்கு முறை சம்பியன் பட்டத்தை வென்று, மோ பராஹ் சாதனை படைத்துள்ளார்.

கிரேட் நோர்த் ரன் மரதனில் 4 தடவைகள் சம்பியன் பட்டத்தை வென்று கென்ய வீரர் பென்ஷன் மஷ்யாவின் சாதனையை மோ பராஹ் சமப்படுத்தியுள்ளார்.

கென்ய வீரர் பென்ஷன் 1991, 1992, 1994 மற்றும் 1996 ஆம் ஆண்டுகளில் சம்பியன் பட்டத்தை வென்று சாதனைப்படைத்திருந்தார். இந்த சாதனையை மோ பராஹ் 2014, 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் வெற்றிபெற்று, சாதனையை சமப்படுத்தியுள்ளார்.

மோ பராஹ் கடந்த மாதம் நடைபெற்ற உலக மெய் வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரின் 5000 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் தங்கம் வென்று, உள்ளக அரங்கு ஓட்டப்பந்தயங்களில் இருந்து ஓய்வு பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையகம் தாருஸ்ஸலாமில் இன்று (12) மக்ரிப் தொழுகையைத் தொடர்ந்து 'ரோஹிங்ய முஸ்லிம்கள்: நெருக்கடிக்கான பின்னணியும் அரசியல் எதிர்காலமும்' என்ற தலைப்பிலான விசேட உரை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்களின் தலைமையில் அஷ்ஷெய்க் ரவூப் ஷெய்ன் (நளீமி) அவர்களால் நிகழ்த்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and Published by Focus Media ... Dharma Mawatha, Colombo 09.